# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 23 புதன்கிழமை (08.09.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 286


# அரசமைப்புத் திருத்தத்தை ஆட்சேபித்து ஐ.தே.கவினர் சபையில் ஆர்ப்பாட்டம்!

## தொடர்ந்து சத்தியாக்கிரகம்; சபை அமர்வுகள் ஒத்திவைப்பு

கொழும்பு, செப். 08

தனி ஒரு மனிதனுக்கு சகல அதிகாரங்களையும் வழங்கி ஜனாதிபதியை சர்வாதிகாரியாக மாற்றும் அரசமைப்பின் 18ஆவது திருத்தச் சட்டத்தை ஆட்சேபித்து ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் நேற்று சபையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். வெளிநடப்பும் இடம்பெற்றது. இதனால் சபை அமர்வுகள் இடை நடுவில் ஒத்தி வைக்கப்பட்டன.

நேற்று நாடாளுமன்றில் அவசரகாலச் சட்டத்தை மீண்டும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பதற்கான விவாதம் நடைபெற்ற போதே இந்த ஆர்ப்பாட்டமும், வெளிநடப்பும் இடம்பெற்றன.

வெளிநடப்புச் செய்த ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்கு முன்னால் வந்து சத்தியாக்கிரகம் செய்தனர்.

அவசரகாலச் சட்டம் மற்றும் 18ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான விவாதங்கள் நடைபெறும் காலங்களில் சபை அமர்வுகளில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று கூறி சபையில் இருந்து அவர்கள் வெளிநடப்புச் செய்தனர்.(21 ஆம் பக்கம் பார்க்க)

## வாக்கெடுப்பின்றி நேற்று அவசரகாலச் சட்டம் நீடிப்பு

கொழும்பு, செப். 8

அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது. காரசாரமான விவாதங்கள் இடம்பெற்ற போதிலும் வாக்கெடுப்பு நடத்தப்படாமலே நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற அமர்வுகளை பகிஷ்கரித்து வெளிநடப்புச் செய்ததால் விவாதத்தில் பேசுவதற்கு அவர்கள் சார்பில் எவரும் இருக்கவில்லை.

எனவே, 5.55 மணிக்கு இந்தப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு நடத்தப்படாம (24 ஆம் பக்கம் பார்க்க)

## 18 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு சர்வஜன வாக்கெடுப்புத் தேவையில்லை

### உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சபைக்கு அறிவிப்பு

கொழும்பு, செப். 08

அரசமைப்பின் 18ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தவேண்டிய அவசியம் இல்லை என்றும் நாடாளுமன்றத்தில் விசேட பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்படவேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் நாடாளுமன்றத்துக்கு அறிவுறுத்தி உள்ளது.

உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ (24 ஆம் பக்கம் பார்க்க)

## கறுப்பு உடையில் ஐ.தே.க. எம்.பிக்கள்

கொழும்பு, செப்.08


அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள 18ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கறுப்பு உடையில் சபைக்கு வந்திருந்தனர்.

அதேவேளை, அரசுக்கு ஆதரவு தெரிவித்துள்ள கண்டி மாவட்ட ஐ.தே.க. எம்.பியான அப்துல் காதர் வெள்ளை உடையுடன் காணப்பட்டார். எனினும், மற்றுமொரு ஐ.தே.க. உறுப்பினரான ஏர்ள் குணசேகர கலப்பு உடையுடனும் வந்திருந்தார்.

சபையில் வாய்மூல விடைகளுக்கான கேள்விகளுக்குப் பதில் அளித்துக்கொண்டிருக்கும் வேளையும் அரசுக்கு ஆதரவு வழங்கும் மற்றுமொரு ஐ.தே.க. உறுப்பினரான லக்ஷ்மன் செனவிரட்ண வெள்ளை ஆடைகளுடன் சபைக்குள் பிரவேசித்தார்.(24 ஆம் பக்கம் பார்க்க)

## வரலாறு காணாத பக்தர் வெள்ளத்தில் தேர் ஏறி பவனி வந்தான் நல்லூர்க் கந்தன்

(மேலும் படங்கள் 6 ஆம் பக்கத்தில்)



யாழ்ப்பாணம், செப். 08

நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை காலை பக்திபூர்வமாக நடைபெற்றது.

நேற்று அதிகாலை விசேட கொடித்தம்பப் பூசைகள் இடம்பெற்றமையை அடுத்து 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்றது. பின்னர் முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராகத் தேருக்கு எழுந்தருளினார். அதைத் தொடர்ந்து பக்தர்களின் அரோஹரா கோஷம் ஒலிக்க காலை 7.15 மணிக்கு தேருலா ஆரம்பமானது.

கடந்த காலங்களை விட மிகக் கூடுதலான மக்கள் இம்முறை தேர்த்திருவிழாவில்(24 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்ற வளாகத்துக்கு முன்னாலும் பிரேதப் பெட்டியை வைத்துக் கோஷம்

கொழும்பு, செப்.08

அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிராக நேற்றுக் கொழும்பில் மூன்று ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. ஜே.வி.பி. அரசமைப்புக்கு எதிராக ராஜகிரியவில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

ஜே.வி.பியின் ஆர்ப்பாட்டத்தில் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைவர்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

கொழும்பு ஹல்ஸ்டோர்ப்பிலுள்ள(21 ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கு, கிழக்குக்கு வழங்கப்பட்ட

# பொது நிர்வாகத்தையும் பொலிஸ் அதிகாரத்தையும் பதினெட்டாவது திருத்தச் சட்டமூலம் பறிக்கிறது

கொழும்பு, செப்.8

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் மூலம் வடக்கு, கிழக்கு மக்களுக்கு மாகாண சபை ஊடாக வழங்கப்பட்ட பொதுநிர்வாக அதிகாரமும் பொலிஸ் அதிகாரமும் 18 ஆவது திருத்தச் சட்ட மூலம் பறித்து எடுக்கிறது.

தமிழ்மக்களுக்குத் துரோகம் இழைக்கும் இந்தச் சட்டமூலத்துக்கு இணக்க அரசியல் நடத்தும் டக்ளஸ் தேவானந் தாவும் பரதி அமைச்சர் முரளிதரனும் ஆதரவு கொடுத்து தமிழ்மக்களுக்கு துரோகம் இழைக்கப்போகிறார்களா?

## நாடாளுமன்றில் சரா எம்.பி. சாட்டை

நாடாளுமன்றில் நேற்று விவாத்துக்கு எடுக்கப்பட்ட அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீது உரையாற்றிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பன் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் காட்டமாகக் குறிப்பிட்டார்.

அவர் தனது உரையில் தெரிவித்ததாவது:-

பல ஆண்டுகள் காலத்தைத் தன்னுள் விழுங்கியவாறு ஒவ்வொரு மாதமும் தன்னைப்புதுப்பத்துக் (02 ஆம் பக்கம் பார்க்க)






## டக்ளஸின் குறுக்கீடும் அதற்கான பதிலும்

கொழும்பு, செப். 08

அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. ஈ.சரவணபவன் உரையாற்றிக் கொண்டிருந்த போது, 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்கள் இல்லாமல் செய்யப்படுவது குறித்து தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.அப்போது குறுக்கிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ''எங்களுக்கு ஜனாதிபதி மீது நம்பிக்கை இருக்கிறது. அவருடன் சகலதையும் பேசி ஒரு முடிவுக்கு வர முடியும்'' - என்று கூறினார்.

சரவணபவன் எம்.பி. இதற்குப் பதில் அளிக்கையில், 18 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் பறிக்கப்படும் மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை ஜனாதிபதியுடன் பேசி அமைச்சரினால் பெற்றுக்கொடுக்க முடியுமா என்று சவால் விடுத்தார். (ஒ-சி)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பொது நிர்வாகத்தையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு இந்த நாட்டின் ஜனநாயக மரபுகளை மீறத் துணை நிற்கிறது அவசாரகாலச் சட்ட நீடிப்பு

ஒவ்வொரு முறையும் நாம் பல்வேறு காரணங்களைச் சுட்டிக் காட்டி நாம் எமது எதிர்ப்பைத் தெரிவித்த போதும் அவை அலட் சியப் படுத்தப்பட்டு இச்சட்டம் தன் இருப்பை நிலைப்படுத்தி வருகிறது.

நேற்றுமுன்தினம் இரவு ஒரு சர்வதேச வானொலியில் ஆலய மணியின் ஓசையையும் பிரார்த்தனைக் கீதங்களையும், விம்மல் ஒலிகளையும் கேட்ட முடிந்தது. அதைத் தொடர்ந்து ஒலித்த குரல்களை ஒரு மாசுபடும் சோகத்தின் சுவடுகளாக எங்கள் இதயத்தைப் பிளந்தன. அது கடந்த 20ஆண்டுகளுக்கு முன்பு இடம்பெற்ற ஒரு பெரும் கொடுமை நினைவுகூரப்பட்டு அன்று காணாமற்போனவர்களுக்காக அவர் களின் உறவுகளால் நடத்தப்பட்ட பிரார்த்தனை.

கடந்த 20 வருடங்களின முன்பு சுற்றியுள்ள பல கிராமங்கள் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு வந்தாறுமூலை பல்கலைக்கழக வளாகத்திற்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் கொண்டுசெல்லப் பட்டனர். அவர்களில் 172 பேர் சீருடை அணிந்தவர்களாலும் முகமூடி நபர்களாலும் தெரிவு செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் இன்றுவரை திரும்பிவரவேயில்லை. அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா அல்லது கொல்லப்பட்டுவிட்டனரா என்பது கூட இன்று வரை அறியப்படவில்லை.

அவர்களைப் பிரிந்த மனைவிகளதும் பெற்றோரினதும், சகோதரங்களினது நிலையை சற்று எண்ணிப் பார்க்கும்படி உங்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அவர்களின் தவிப்பை ஈடுசெய்ய ஏதாவது வழியுண்டா? அவர்களின் துயரத்தை நீக்கிவிடப் பாதை உண்டா? சாதாரண மனித உரிமைகள் எவ்வளவு கொடூரமாக மீறப்பட்டுள்ளன என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறதா?

இப்படி ஏராளமான சம்பவங்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, மணலாறு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் காலத்திற்கு காலம் இடம்பெற்று வந்தமையை நீங்கள் அறிவீர்கள். போரில் சம்பந்தப்படாத அப்பாவி மக்கள் கொல்லப்படுவதும் காணாமற் போவதும் ஜனநாயக மரபுக்கு உட்பட்டதாஎன இங்கு நான் உங்களிடம் கேட்க விரும்புகிறேன்.

இத்தகைய ஜனநாயகப் படுகொலைக்கு சட்ட அங்கீகாரத்தை இந்த அவசரகாலச் சட்டம் வழங்குகின்றது என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இப்படியான கொடிய குற்றங்களைப் புரிபவர்களின் ஆயுதமாகவும் பாதுகாப்புக் கவசமாகவும் இந்த அவசரகாலச் சட்டம் விளங்கி வருகிறது.

### மனிதாபிமானத்தை குழிதோண்டிப் புதைக்கும் சட்டம் இது

மனிதாபிமானத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் மனித உரிமைகளை கழுத்தை நெரிக்கும் இச்சட்டத்தின் நீடிப்புக்கு ஆதரவு வழங்கி வருவதை உங்கள் நேர்மையான மனச்சாட்சி ஏற்றுக்கொள்கின்றதா?

இன்று ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் அரசியல் கைதிகள் என்ற பேரில் விசாரணைகள் எதுவுமின்றி நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எந்த ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்புமின்றி நெடுங்காலச் சிறைவாசம் அனுபவிக்கும் அவர்களின் துயரத்தை இந்தச் சபை ஏற்றுக்கொள்கின்றதா? இச்சிறைகளில் பலர் 15,18 வருடங்களுக்கு மேலாக கூடத்தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். ஒரு மனிதனின் வாழ்வில் பதினெட்டு வருடங்கள் எவ்வளவு பெரும் பகுதி என்பதை நான் சொல்லித்தான் புரியவேண்டும் என்பதில்லை. இவர்கள் உடலாலும் மனதாலும் எவ்வளவு பாதிக்கப்படுவார்கள் என்பதை நீங்கள் உணர்வீர்கள் என்றே நம்புகிறேன்.

நாம் பலமுறை பல வழிகளிலும் அவர்களை விடுவியுங்கள் அல்லது நீதிமன்றத்தில் நிறுத்துங்கள் எனக் கோரிக்கை வைத்தோம் அது தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் இல்லை.

### இனரீதியான ஒடுக்குமுறை

இதேபோன்று முன்னாள் போராளிகள் ஏறக்குறைய பத்தாயிரம் பேர் தடுப்புமுகாம்களில் வாடுகின்றனர். கண்துடைப்புக்காக இடையிடையே ஒரு சிறுதொகையினர் விடுவிக்கப்பட்டாலும் ஏனையோர் எப்போது தாம் விடுவிக்கப் படுவோம் என்றோ அல்லது விடுவிக்கப்படமாட் டார்களா என்றோ தெரியாத நிலையில் உள்ளனர்.

இப்படியான கொடுமைகளுக்கு இனரீதியான ஒடுக்குமுறைகளுக்கு அங்கீகாரம் வழங்கும் இந்த அவசாரகாலச் சட்டம் மேலும் நீடிக்கப் படவேண்டுமா? இன ஒடுக்குமுறை எப்பது சட்டபூர்வமாக அங்கீகரிக் கப்படும் போது ஒடுக்கப்படுபவர்கள் சட்டங்களுக்கு வெளியே தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியமையே ஒரு பெரும் போராக உருவெடுத்தது என்பதை ஏன் நீங்கள் உணர மறுக்கிறீர்கள். இதை எனனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இப்படியான ஒரு சட்டம் அமுலில் இருக்கும் ஒரு காலப்பகுதியிலேயே நாளை இச் சபையில் பதினெட் டாவது திருத்தச் சட்டம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அதிருப்தியான கருத்துகளை வெளியிட்டோம். ஆனால ஜனாதிபதி அவர்களுடன் பேச்சு நடத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி பதின்மூன்றாவது அரசியல் திருத்தத்தையும் அதற்கு மேலதிகமாகவும் அமுல்படுத்தவுள்ளதாகத் தெரிவித்தார.

### 13ஆவது திருத்தம் வழங்கியவை பறிப்பு

தற்போது எமக்கு கையளிக்கப்பட்டுள்ள 18 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் வடக்கு - கிழக்கு மக்களுக்கு மாகாண சபை மூலம் வழங்கப்பட்டு சில சலுகைகள் கூடப் பறிக்கப்படவுள்ளன. சட்ட அங்கீகாரம் வழக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படாதிருந்த பொது நிர்வாகம், பொலிஸ் அதிகாரம் ஆகியன இந்தப் 18 ஆவது திருத்தச் சட்ட மூலம் பறிக்கப்படவுள்ளன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இத்துறையின் உறுப்பினர்களான சந்திரகுமார், உதயன் ஆகியோரும் மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்ற கோஷத்தை முன் வைத்து மக்கள் ஆணையைக் கோரியவர்கள். ஓர் இணக்க அரசியல் மூலம் தமிழ்மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு ஒரு பகுதி தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றவர்கள். அது மட்டுமன்றி ஒரு காலத்தில் மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் போதாமை பற்றியும் மாகாண சபைச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படாமை குறித்தும் எதிர்ப்புக் குரல் எழுப்பியவர்கள். ஆனால் தற்போது இந்தப் பதினெட்டாவது திருத்தச் சட்டம், பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்துடன் மேலதிக அதிகாரங்கள் வழங்கும் என்று ஜனாதிபதி அமைச்சருக்கு வழங்கிய வாக்குறுதியை நிராகரிக்கிறது. அதுமட்டுமன்றி 13 ஆவது திருத்தச் சட்டத்தால் வழங்கப்பட்ட பொது நிர்வாகம், பொலிஸ் போன்ற அதிகாரங்களையும் இல்லாமல் செய்வது தெரிகின்றது.

வரலாற்றுத் தவறை இழைக்கப் போகின்றார்களா?இணக்க அரசியல் என்பதன் அர்த்தம் இருப்பதையும் மனமுவந்து விட்டுக்கொடுப்பதுதானா என்ற சந்தேகத்தை எழுப்புவதில் எவ்வித ஆச்சரியமும் இருக்க முடியாது. எப்படியிருப்பினும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் பிரதி அமைச்சர் முரளிதரனும் (கருணா) நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்திரகுமார், உதயன் ஆகியோரும் மாகாண சபைகளுக்கு இருக்கும் கொஞ்ச நஞ்ச அதிகாரங்களையும் பறிக்கும் இந்தச் சட்ட மூலத்திற்கு ஆதரவு கொடுப்பதன் மூலம் தமிழ்மக்களுக்குத் துரோக மிழைக்கக் கூடிய ஒரு பெரும் வரலாற்றுத் தவறைச் செய்யமாட்டார்கள் என்றே எதிர்பார்க்கிறேன். இரண்டு அமைச்சர்களும், ஒரு காலததில் தமிழ்மக்களின் உரிமைக்காக உயிரை அர்ப்பணிக்கத் தயாராக ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள் என்பதை நாம் இங்கு நினைவு படுத்துகின்றோம்.

### யாழ்ப்பாணத்தில் எதிர்ப்புச் சுவரொட்டி ஒட்டியவர்கள் கைது

இப்படியாக தமிழ்மக்களுக்கு விரோதமான ஒரு சட்டத்தை எதிர்த்து நாம் ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை நடத்தவோ அல்லது எமது மக்கள் பரந்தளவில் தமது எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தவோ முடியாதவாறு இந்த அவசரகாலச்சட்டம் குறுக்கே நிற்கிறது. யாழ்ப்பாணத்தில் இந்தத் திருத்தச் சட்டத்திற்கு எதிராகச் சுரொட்டி ஒட்டிய ஜே.வி.பியினர் கூட பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இதேவேளையில் வடக்குக் கிழக்கில் மக்கள் நீண்டகாலமாக வாழ்ந்து வந்த காணிகள் பறிக்கப்பட்டு இராணுவ முகாம்களும் இராணுவக் குடியிருப்புகளும் அமைக்கப்படுகின்றன. இதை எதிர்த்து இந்த மக்கள் போராட்டம் நடத்தும் ஜனநாயக உரிமையைக் கூட இந்த அவசர காலச் சட்டம் தடுக்கிறது. ஒட்டுமொத்தத்தில் இந்த அவசரகாலச் சட்டம் பொலிஸ், இராணுவ மேலாதிக்கம் நிலவும் ஒரு நிலையை தோற்றுவித்து புனிதமான ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கிறது.

நாம் ஒரு ஜனநாயக நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் இந்த ஜனநாயக விரோ தச் சட்டம் நீடிக்கப்படுவதை எதிர்த்து வாக்களித்து இச்சபையின் பெருமையை நிலைநிறுத்தும்படி கேட்டுக்கொள்கின்றேன்.


After A/L எந்த வேலையில் சேர்வதற்குமான
ஆளுமை விருத்தியுடன் கூடிய தொழில் பயிற்சி

"Certified Medical Assistant" (An US Curriculum)

மருத்துவத்துறையில் பணிபுரியும் உங்கள் கனவை நனவாக்கத் தகுதியானவர்களிடமிருந்து ஒரு அரிய சந்தர்ப்பம். தனியார் வைத்திய சாலைகளில் உடனடி வேலைவாய்ப்புடன்கூடிய பயிற்சிநெறியை லாவா வைத்தியசாலையில் சர்வதேச கல்வித்திட்டத்திற்கு அமைவாகத் தகுதியான வைத்திய விரிவுரையாளர்கள் மூலம் பெற்றிடுங்கள்.

[புதிய பிரிவு 12/09/2010].குறிப்பிட்ட ஆசனங்கள் மட்டுமே.

மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி (பிரிவு02)

CMA
US Curriculum

கல்வித்தகமை: G.C.E O/L 4 பாடங்களில் சித்தி
காலம் : 6 மாதங்கள்(உள்ளகப்பயிற்சியுடன்)
தெரிவு : நேர்முகப்பரீட்சை மூலம் அனுமதி.



யாழ் வைத்தியசாலை வைத்தியர்களால் விரிவுரைகளும் செயல்முறை பயிற்சிகளும் வழங்கப்படும்.

விபரங்களை இணையத்தில் பார்வையிடலாம்.
www.kugroup.info

உள்ளக பயிற்சி வழங்குவோர்:
Lava Hospitals

Quality Assured
City Guilds Qualified

Knowledge Universe®
Malaysian College of Business and IT
Tel: 0777302882 | # 75,Temple Road,Jaffna | www.kugroup.info

முறையான அரச அங்கிகாரம், சர்வதேச நிறுவனங்களின் இணைப்பு இல்லாத தனியார் கல்வி நிறுவனங்கள் மூலம் கற்பிக்கப்படும் எந்தவொரு மருத்துவ துறைசார் கல்விநெறியும் செல்லுபடியற்றதாகும். நேரத்தையும் பணத்தையும் வீணடிக்கும் செயலுமாகும். எனவே இணையும் முன் பூரண விசாரணைகளை மேற்கொள்ளுங்கள்.


## 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
18-06-1955

உதிர்வு
20-08-1990

தோலகட்டி வசாவிளான்
அமரர்
**வைத்திலிங்கம் நடராசா**
( முன்னாள் பொறுப்பதிகாரி, வலி.கிழக்கு பிரதேச சபை- அச்சுவேலி)
திதி: 08.09.2010

*பாசமுள்ள தந்தையாய்*
*கடமையுள்ள கணவராய் நின்று*
*எங்களை வழிநடத்திய அப்பாவே!*
*ஆண்டுகள் 20 ஓடி மறைந்தாலும்*
*உங்களின் நினைவுகள், பாசங்கள் என்றும்*
*எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலா!*
*வருடம் தவறாமல் கந்தனின் தீர்த்தத்தில் நின்று*
*கண்ணீர்ப் பூக்களால் உங்கள் சேவடிகளுக்கு*
*ஆத்ம சாந்திக்காக அஞ்சலி செலுத்தும்*



என்றும் உங்களின்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

'துஷா இல்லம்'
கற்பக்குணை
உடுவில், சுன்னாம்
(103028)

## மூன்றாம் ஆண்டு நினைவு

தோற்றம்
19★06★1938

மறைவு
11★09★2007



**சின்னட்டி இராசதுரை**

திதி: அமாவாசை (08.09.2010)

அன்பாய் அறிவூட்டி
பண்புடனே எமை வளர்த்த தந்தையே!
பாதி வழியினில் எமைப் பரிதவிக்க விட்டுச் சென்றதேனோ?
ஆண்டு மூன்றானதே மனமோ ஆறவில்லை
காலங்கள் தான் சொல்ல வேண்டும்
காண்பது எப்போதென்று?
ஆண்டுகள் பல கடந்தாலும் உங்கள் நினைவலைகள்
என்றும் எம்மோடு நிழலாகும்.

நிச்சாமம்,
சங்கானை மேற்கு,சங்கானை

என்றும் உங்கள் அன்பு மறவாத
குடும்பத்தினர்.

(103007)

## மரண அறிவித்தல்

### வேலாயுதம் அன்னம்மா



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் அன்னம்மா நேற்று 07.09.2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் (வாச்சர்) - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகளும் வேலாயுதத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ராசேந்திரம், புலேந்திரம், தேவராசா மற்றும் நேசம்மா, தேவி, தாவீதுராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் இரத்தினேஸ்வரி, தங்கராசா, சந்தராஜா(சுவிஸ்), வசந்தகுமாரி, வனிதா, சாந்தினி (தெல்லிப்பழை வைத்தியசாலை), பாமா, நந்தினி ஆகியோரின் அன்புத் தாயும் பஞ்சலிங்கம், செல்வமணி, சரோஜாதேவி (சுவிஸ்), சின்னத்துரை, முருகையா, அருந்தவராசா, ராஜநீதன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (08.09.2010) புதன்கிழமை உரும்பிராய் வடக்கு, மடத்தடியில் உள்ள அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் பிற்பகல் 2.30 மணியளவில் புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு, மடத்தடி,
021 7900442, 0776151962
(103049)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்


DHL WORLDWIDE EXPRESS

திருமுருகன் கொம் லிங்ஸ்

உலக நாடுகளுக்கு ஆகாய கடல் வழி மார்க்க பொதிகள் சேவை

DHL விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை DHL

உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்

குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.

தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிற்கான தபால்கள் பொதிகள் சேவை

லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா வீதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை

நாட வேண்டிய முகவரி
259 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்

TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06

46. ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
5. திருநகர் வீதி, கிளிநொச்சி
மில் றோட், வவுனியா

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவை நடைபெறும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அரசாங்கத்தின் அடுத்த நகர்வு தமிழர் உரிமைகளுக்கு ஆப்பு?

இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் 18 ஆவது அரசமைப்புத் திருத்தம் எத்தகைய எதிர்ப்பு வந்தாலும் நிறைவேற்றப்பட்டுவிடும் என்பதில் சந்தேகம் இல்லை. மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை அரசாங்கம் தேடிக்கொண்டு விட்டதால், அது மக்கள் நலன்களுக்குப் பாதிப்பு விளைவிக்கும் என்பதனைத் தெரிந்துகொண்டுங் கூட, அதிக வாக்குகளால் வெற்றி அடையச் செய்வதில் அரசு மகிழ்ச்சி நிலையில் உள்ளது.

யார் எதிர்ப்புக் கூறினாலும், நியாயத்தை எடுத்துச் சொன்னாலும் அவற்றைக் காதில் போட்டுக்கொள்ள மாட்டோம் என்ற மமதைக் குரல் அரச உயர் பீடத்தில் இருந்து ஓங்கி ஒலிக்கிறது.

ஒருவர், இரண்டு தடவைகளுக்கு கூடுதலாக ஜனாதிபதியாகப் பதவி வகிப்பது ஜனநாயகத்தை நசுக்கிவிடும் என்பதற்கு எதிர்வாதம் செய்யும் தொனியில் -

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகள் சக்திமிக்க வேட்பாளரை நிறுத்தும் வரை நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன் என்று ஜனாதிபதி வீறாப்பாகக் கூறியிருக்கின்றார். மக்கள் விரும்பும் வரை ஒருவர் எத்தனை தடவைகளும் பதவி வகிக்கலாம். அதனால் 18 ஆவது திருத்தம் ஜனநாயகத்துக்கு விரோதமானதல்ல என்ற சான்றிதழும் வழங்கியுள்ளார், 'பாட்டும் நானே பாவமும் நானே' என்று பாடலாசிரியன் ஒருவன் கடவுளை வர்ணித்தது போல. ஆகவே மூன்றாவது தடவையும் ஜனாதிபதியாக வருவதற்கான மேடை அமைத்தாயிற்று!

இதற்கும் மேலதிகமாக அரசமைப்புச் சட்டத்தில் அரசாங்கம் மேலும் பல திருத்தங்களைச் செய்யப் போவதாக தகவல்கள் கசிந்துகொண்டிருக்கின்றன.

நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக மாற்றி(Constitutional Council) தான் நினைக்கும் 'முன்னேற்றகரமான'' திருத்தங்களைச் செய்ய ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்பதே புதிய தகவல்.

அவற்றில், இப்போதைய பதின்மூன்றாவது அரசமைப்புத் திருத்தத்தில் மாற்றம் கொண்டு வருவதும் ஒன்றாகும். அதாவது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதும் ஒன்றாகும் எனவும் அது அரச தரப்பின் எதிர்கால, உடனடி நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக மாற்றும்போது, மூதவை (செனேற்) ஒன்றை நிறுவ வகை செய்யும் விடயமும் உடனடியாகக் கவனத்தில் கொள்ளப்படும் என்பதும் புதிய சங்கதி.

இந்த இரண்டு விடயங்களும் - அம்சங்களும் - தமிழர்களின் அரசியல் அதிகாரத்தை மேம்படுத்துவதற்கான முயற்சியாக கடந்த சுமார் இரண்டு வருடங்களாகக் கூடிக் கலைந்த அனைத்துக் கட்சி மாநாட்டின் 'கடின உழைப்பால்' பிரேரிக்கப்பட்ட, காண்பிக்கப்பட்ட பயனற்ற விளைச்சலாகும்! ஆழ்கிணற்றில் போடப்பட்ட கல்லாகக் கொள்ளப்படும் மூதவை விவகாரத்தை அரசாங்கத்தின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவாறு உருவாக்கும் தந்திரமான முயற்சியே இதுவாகும்.

அரசாங்கத் தரப்புக்குச் சேர்க்கப்பட்டுள்ள மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டு, இனப்பிரச்சினைக்கு, தனது இலக்குக்கும் கோட்பாட்டுக்கும் ஏற்றவாறு தீர்வு என்ற பெயரில் ஒன்றைத் தமிழ்மக்கள் மீது திணிக்கும் தந்திரமான உத்தி இது.

ஏற்கனவே, இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அரசமைப்புக்கான 18 ஆவது சட்டத் திருத்தத்தில், 13 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட அற்ப சொற்ப வசதிகளையும் பறிக்கும் நடவடிக்கை ஆரம்பமாகிறது.

அதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது போன்று, 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள விடயங்களை இல்லாமற் செய்வதன் மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வை இன்னும் அதிக தொலைவுக்கு இழுத்துச் செல்லும் ஜனாதிபதியின் திட்டத்தில் ஒரு பகுதியே இந்தச் சதி வலை.

மூதவை ஒன்றை நிறுவினோம், 13ஆவது திருத்தத்தில் உள்ள குறைபாடுகளை நீக்கினோம் என்று சப்புக்கொட்டி, இந்தியாவையும் சர்வதேசத்தையும் இருட்டுவழியில் அழைத்துச் சென்று தமிழ்மக்களைப் பாழுங்கிணற்றில் தள்ளிவிழுத்தும் நாசகாரத்துக்கு அடியெடுத்துக் கொடுத்து -

மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்ற வாளால் இனப்பிரச்சினையை கெட்டித்தனமாக துண்டித்து விடும் சூழ்ச்சி இது.

# களியாட்ட விடுதிகளைக் கலங்க வைக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களும், புதல்வர்களும்

கொழும்பு, செப்.8

கொழும்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசின் பிரபல நாடாளுமன்ற உறுப்பினரொருவர் மிக அண்மையில் கொழும்பிலுள்ள இரவு நேரக் களியாட்ட விடுதியொன்றில் வைத்து பிரபல வர்த்தகரொருவருடன் அடிதடியில் ஈடுபட்டதாகத் தெரிய வந்துள்ளது.

அத்தோடு நிறுத்திக்கொள்ளாத நாடாளுமன்ற உறுப்பினர் தமது பாதுகாவலர்களை ஏவிவிட்டு அந்த வர்த்தகரைக் கடுமையாகத் தாக்கியுள்ளதாகவும் தகவலறிய முடிந்துள்ளது. இந்த மோதலுக்குக் காரணம் மேற்படி நாடாளுமன்ற உறுப்பினருக்கும் அந்த வர்த்தகருக்குமிடையில் நிலவிய பழைய முரண்பாடே என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பழைய முரண்பாடு காரணமாக அவர்கள் இருவருக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஆரம்பமான தாகவும் பின்னர் அது முற்றி அடிதடி களேபரத்தில் முடிந்ததாகவும், இறுதியில் நாடாளுமன்ற உறுப்பினரின் பாதுகாவலர்களால் கடுமையாகத் தாக்கப்பட்ட வர்த்தகர் வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டதாகவும் களியாட்ட விடுதித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை -

கடந்த வாரத்தில் அரசின் மேலுமொரு பிரபல பிரதியமைச்சரின் புதல்வரொருவரும் இவ் விதமாக இரவு நேரக் களியாட்ட விடுதி ஒன்றினுள் புகுந்து களியாட்ட விடுதியையே இரண்டுபடுத்திவிட்டதாகவும் தெரியவருகிறது. மேற்படிகளியாட்ட விடுதியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அவரை உட்செல்ல அனுமதிக்காமையே அவர் அவ்விதம் அடா வடித்தனம் புரிந்தமைக்குக் காரணம், என்று கூறப்பட்டது.

ஆனால் கடந்த 2001 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆட்சியில் இருந்த ஐ.தே.கட்சியின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவர்களின் புதல்வர்கள் இரவு நேர களியாட்ட விடுதிகளில் பேயாட்டம் ஆடியதுடன் துப்பாக்கிப் பிரயோகங்களையும் மேற்கொண்டு இருந்தனர்.

அன்றைய அமைச்சர்களான எஸ்.பி. திஸாநாயக்கா, மஹிந்த விஜயசேகர ஆகியோரின் புதல்வர்கள் தினமொன்றாகச் செய்த அடாவடித்தனங்களை ஊடகங்கள் பெரிய எழுத்துக்களில் பிரசுரித்துக் கடுமையாக விமர்சித்தன. ஆனால் இன்று அத்தகைய சம்பவங்கள், அடாவடித்தனங்கள் தினமும் நிகழ்கின்ற போதும் அந்தச் செய்திகள் ஊடகங்களில் இருட்டடிப்புச் செய்யப்படுவதுடன் இத்தகைய சம்பவங்கள் நிகழ்ந்ததா என்பது ஊடகங்களுக்குத் தெரியாமேலே உள்ளது என்று சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (த-6-22)

# மீளக்குடிமர்ந்த மக்களுக்கான தென்னங்கன்று விநியோகம்

யாழ்ப்பாணம்,செப்.8

வன்னியில் இருந்து மீளக்குடியமர்ந்த மக்களுக்கான தென்னங்கன்று விநியோகம் தென்னை அபிவிருத்தி சபையால் கரவெட்டி கமநல சேவைகள் நிலையத்தில் நடைபெற்று வருகின்றது. தென்னங்கன்றுகளை பெறத்தவறியவர்கள் அதனை 10 ஆம் திகதிக்கு முன்னதாக பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கேட்டுள்ளார். (த)

# பால வேலையில் ஈடுபட்ட இளைஞர் காயம்

தென்மராட்சி,செப்.8

பூநகரி - சங்குப்பிட்டி பால நிர்மாண வேலையில் ஈடுபட்ட இளைஞரின் காலில் கொங்கிறீற் கல் வீழ்ந்து காயமேற்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஆர். ஏ.கே. ரணசிங்க (வயது - 24) என்பவர் காமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-6-207)

# இந்தியா, சீனத் தொழிலாளர்கள் 50 ஆயிரம் பேர் இலங்கை வருவர்

கொழும்பு,செப்.8

இந்தியாவில் இருந்து 20 ஆயிரம் தொழிலாளர்களும், சீனாவில் இருந்து 30 ஆயிரம் தொழிலாளர்களுமாக 50 ஆயிரம் தொழிலாளர்கள் கட்டட நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்காக விரைவில் இலங்கை வரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசின் நிதி உதவியுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 50 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்பட உள்ளன. இவற்றை அமைப்பதற்காகவே இந்தியாவில் இருந்து 20 ஆயிரம் கட்டடத் தொழிலாளர்கள் இலங்கை வரவுள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அனைத்து வீதிகளையும், பாலங்களையும் நிர்மாணிக்கும் பொறுப்பை இலங்கை அரசு சீனாவிடம் கையளித்துள்ளது. இதனையடுத்து வீதி, பால நிர்மாண வேலைகளில் ஈடுபடுவதற்காக 30 ஆயிரம் சீனத் தொழிலாளர்கள் இலங்கை வரவுள்ளனர்.

இதேவேளை -

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பரவவுள்ள இந்திய மற்றும் சீன ஆதிக்கம் காரணமாக எதிர்காலத்தில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் பெரும் மோதல் நிலை உருவாக இடமுள்ளதாக அரசியல், தூதரக வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க இந்திய மற்றும் சீன ஆதிக்கத்தால் இலங்கையருக்கு கிட்டவிருந்த ஏராளமான வேலை வாய்ப்புகள், வர்த்தக வாய்ப்புகள் கிட்டாது போகும் அபாய நிலை இன்று தலைதூக்கியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (த-6-22)

# குருநகர் வர்த்தக நிலையங்களில் சுகாதாரப் பகுதியினர் சோதனை

## காலாவதியான பொருள்கள் அழிப்பு

யாழ்ப்பாணம்,செப்.8

குருநகர் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார பரிசோதகர்கள் கடந்த சனிக்கிழமை திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தைச் சேர்ந்த சுகாதாரப் பரிசோதகர்கள் பி.கிஷோகுமார், ஜே.பேடினன்ஸ், ஏ.பகிரதன், சுகாதார பாதுகாவலர் எஸ். சுவேந்திரன் ஆகியோர் நடத்திய திடீர் பாய்ச்சலில் காலாவதியான பிஸ்கட், ஜாம், ரின் மீன், அல்வா, நுடில்ஸ், சூரியகாந்தி எண்ணெய் போன்ற விற்பனைக்குத் தகுதியற்ற பொருள்கள் கைப்பற்றப் பட்டன.

சம்பந்தப்பட்ட வியாபாரிகள் குறிப்பிட்ட பொருள்கள் காலாவதியானவை என ஏற்றுக்கொண்டதை அடுத்து அவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டதுடன் அனைத்துப் பொருள்களும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வைத்து அழிக்கப்பட்டன. (த-7)

# மாடு முட்டியதில் பெண் காயம்

தென்மராட்சி,செப்.8

வீதியில் நடந்து சென்ற குடும்பப் பெண்ணை வீதியோரத்தில் கட்டியிருந்த நாம்பன்மாடு அறுத்துக் கொண்டு ஓடி வந்து தாக்கிக் காயப்படுத்தியது.

இதில் சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த முருகேசு மங்களாதேவி (வயது - 50) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (6-207)

# வேலணை சங்கத்துக்கு மின்சாரம் துண்டிப்பு

புங்குடுதீவு,செப்.8

வேலணை ப.நோ.கூ. சங்கத்துக்கான மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

வேலணை ப.நோ.கூ. சங்கத்தின் மின்சார கட்டண நிலுவை ரூபா ஒரு லட்சத்தையும் தாண்டி இருப்பதே துண்டிப்பதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதால் பொதுமக்கள் பலத்த சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

(ஒ-188-15)

# வல்லைச் சந்தியில் இருந்து மண்டான் வரையான வீதி நாளை முதல் போக்குவரத்துக்குத் தடை

## மாற்றுப் பாதைகள் குறித்து அறிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.8

வீதி விஸ்தரிப்புப் பணிகளுக்காக வல்லைச் சந்தியில் இருந்து மண்டான் சந்தி வரை நாளை 9 ஆம் திகதி முதல் யாழ். - பருத்தித்துறை வீதி மறு அறிவித்தல் வரை மூடப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வாகனச் சாரதிகளும் பொது மக்களும் மறு அறிவித்தல் வரை மாற்றுப்பாதையாக வல்லை -உடுப்பிட்டி- வல்வெட்டித்துறை வீதியையும்- தொண்டைமானாறு - வல்லை - துன்னாலை வீதியையும் பயன்படுத்துமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் வி.சுதாகர் கேட்டுள்ளார்.

(ஒ-15)

# நாளை

| | |
|---|---|
| ஆவணி 24 | 09.09.2010 |
| | வியாழக்கிழமை |
| திதி: | : பிரதமை |
| | பி.ப.02.17 வரை |
| நட்சத்திரம் | : உத்தரம் |
| | பி.இ.12.12 வரை |
| சுபநேரம் | : 07.34-09.04 வரை |
| ராகுகாலம் | : 01.34-03.04 வரை |

# பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்யப்படாத அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வடக்கில் தடை

கொழும்பு,செப்.8

பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்யாத அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வடமாகாணத்தில் பணியாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்று தேசிய பாதுகாப்பு ஊடக மையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் குலுகல்ல தெரிவித்துள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டாளர்கள் வடமாகாணத்தில் மேற்கொள்ளும் செயற்பாடுகள் தொடர்பாக மாவட்டச் செயலங்களின் மூலம் வாரந்தோறும் விவரங்கள் சேகரிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் செயற்பட்டு வரும் உள்நாட்டு, வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கண்டறிவதற்கு விசேட ஜனாதிபதி செயலணி ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளதாகவும் குலுகல்ல தெரிவித்தார்.

எனினும் வெளிநாட்டு நிறுவனங்கள் எவையும் நாட்டில் செயற்படுவதற்கு அரசாங்கம் தடைவிக்கவில்லை என்றும் அவர் மேலும் கூறினார். (த-6-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

YMCA

## Talent Search 2010 - Western Music

*Sponsored by the National Council of the Y.M.C.A. of Sri Lanka*
*Organized by Y.M.C.A. Jaffna*

**Selections for Individual Vocal events of**
## "Talent Search 2010"

Date: Friday 10th September, 2010
Time: 9 a.m
Venue: Uduvil Girls' College Hall

(C/570741) **Coordinator.**

## நன்றி நவில்கின்றோம்

### திருமதி சூசைப்பிள்ளை அக்கினேஸ்

கடந்த 31.08.2010 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தாயின் இறுதிச்சடங்கு நிகழ்வில் கலந்து நேரடியாகவும், தொலைபேசி, துண்டுப்பிரசுரங்கள், கண்ணீர் அஞ்சலிகள், மலர்வளையம், தபால், தந்திகள் மூலமும் அனுதாபம் தெரிவித்து துயர் பகிர்ந்த அனைத்து அஞ்சல் திணைக்கள ஊழியர்கள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் கரித்தாஸ் - கியூடெக் இயக்குநர், பணியாளர்களுக்கும் எனது தாயார் சுகவீனமுற்றிருந்த வேளையில் திவ்விய நற்கருணை வழங்கிய அருட் சகோதரிகளுக்கும் (தி.கு.க), எமது இல்லத்தில் வழிபாடுகளை நடத்தியவர்களுக்கும் மற்றும் நல்லடக்கத்தை சிறப்புடன் நடத்த ஒத்துழைப்பு வழங்கிய நாவாந்துறைப் பங்குத்தந்தை, அருட்பணிச்சபையினருக்கும் இறுதிச்சடங்கில் திருப்பலி நிறைவேற்றிய அருட்தந்தையர்களுக்கும் எனது குடும்பத்தினர் சார்பிலும் நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றேன்.

*இல.6, ஒடக்கரை விதி,*
*யாழ்ப்பாணம்.* (103040) சூ.ஜெபரெட்ணம் (பிரதேச தபால் அத்தியட்சகர்).

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### வைரவி சண்முகநாதன்

பிறப்பு 19.02.1941

இறப்பு 05.09.2009

ஐயா!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து,
இன்று வருவீர்கள் நாளை வருவீர்கள்
என்று நினைத்தே....
ஓராண்டு கழிந்ததுவே - ஐயா!
உங்கள் உருவம் தான் மறைந்தது
உங்கள் அழகான புன்சிரிப்புமுகம் மறையவில்லை
உங்களை இழந்த துயரில் கதறுகின்றோம்
ஏன் அப்பா எங்களைத் தவிக்கவிட்டுச் சென்றீர்கள்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகளோடு வாழ்வோம்.

*தேவாலய வீதி,*
*சங்கானை.* (102999) குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



### சிதம்பரப்பிள்ளை பிரபாகரன்

(கிராம அலுவலர்)

எமது செயலகத்தில் கிராம அலுவலராகப் பணியாற்றி எமை நீத்த சி.பிரபாகரன் அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்,
உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்
(சி/570745) பிரதேச செயலகம், கரவெட்டி.

## ஐ.தே.க. எம்.பிக்கள் மீது நடவடிக்கை

ஐ.தே.கட்சியின் கட்டுப்பாட்டை மீறி அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களிக்கும் ஐ.தே.கட்சி எம்.பிக்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய ஏ.ஆர்.எம்.ஏ. காதர் எம்.பி. கட்சியின் செயற்குழுவில் இருந்து நீக்கப்பட்டுவிட்டார்.

ஐ.தே.கட்சி பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

கட்சிக்கட்டுப்பாட்டை மீறுபவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். தேவைப்படின் பொதுத் தேர்தலின் போது எம்.பிக்களிடம் பெறப்பட்ட இராஜிநாமாக் கடிதங்களையும் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

மக்களின் வாக்குகளால் நாடாளுமன்றம் வந்த இவர்கள் சுயநலனுக்காக கட்சிக் கட்டுப்பாட்டை மீறுவதை அனுமதிக்க முடியாது. - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஓ-சி)

## ஐ.தே.கவின் மற்றொரு எம்.பியும் திருத்தத்துக்கு ஆதரவு

ஐ.தே.கட்சியைச் சேர்ந்த குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான நில்வல விஜேசிங்க அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களிக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

இவருடன் மொத்தம் நான்கு ஐ.தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களிக்கப் போகின்றனர் எனப் பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

அரசமைப்புத் திருத்தம் இன்று நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்படும் போது மேலும் சில ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களிப்பர் என நாடாளுமன்ற உறுப்பினர் ஏர்ள் குண சேகர தெரிவிக்கின்றார்.

மொத்தம் 161 வாக்குகளைப் பெற்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என்பது உறுதியாகிவிட்டது. (ஓ-சி)

## தரம் 11 மாணவருக்கான தேசிய மட்ட முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம், செப். 8

ஜி.சீ.ஈ (சா/தர) மாணவர்களுக்கான தேசிய மட்ட விஞ்ஞான பாட முன்னோடிப் பரீட்சை நாளையும் நாளை மறுதினமும் இடம்பெறவுள்ளது. அதேசம யம் கணித பாடப்பரீட்சை 14, 16 ஆம் திகதியில் இடம் பெறவுள்ளது. ஆகவே யாழ்.மத்திய கல்லூரியில் தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவர்களையும் மேற்படி பரீட்சைகளில் தோற்றுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (ஓ-23)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம், செப். 8

விஞ்ஞானம், சுகாதாரமும் உடற்கல்வியும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சுகாதார மேம்பாடும் சத்துணவும் தொடர்பான செயலமர்வு நாளை வியாழக்கிழமை உடுவில் கோட்ட ஆசிரியர்களுக்கு இராமநாதன் கல்லூரியிலும், தெல்லிப்பழை கோட்ட ஆசிரியர்களுக்கு இணுவில் மத்திய கல்லூரியிலும் காலை 8.30 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் இரண்டு ஆசிரியர்களை இச் செயலமர்வில் பங்குபற்றுமாறு பிரதிக்கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)

## தீவக வலயத்தின் மதிப்பீட்டு வினாத்தாள்

யாழ்ப்பாணம், செப். 8

தீவக கல்வி வலய பாடசாலைகளுக்கான க.பொ.த. சாதாரண தரத்திற்கான விஞ்ஞான பாடத்திற்கான முன்னோடி மதிப்பீட்டு வினாத்தாளை உரிய பாடசாலைகள் தமது கோட்டக்கல்வி அலுவலகங்களில் இன்று மதியத்திற்கு பின் பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## கொதி எண்ணெய் முகத்தில் பட்டதில் பெண் காயம்

தென்மராட்சி,செப்.8

பனங்காய் பணியாரம் பொரித்த எண்ணெய்ச் சட்டி சரிந்ததில் எண்ணெய் பெண்ணின் முகத்தில் பாய்ந்தது.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை நாவற்குழியில் இடம்பெற்றது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த என்.இலட்சுமி (வயது-45) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-6-207)

## ஆண்டொன்று நீங்காத நினைவலைகள்



### செல்வன் ச.சந்துதன்

*மலர்வு 07.02.2000* *உதிர்வு 08.09.2009*

எங்கள் அன்பு சந்துக்குட்டி
உள்ளத்தில் உயர்வாகி
இதயத்தில் அன்பாகி
வானுறையும் தெய்வத்துள்
தெய்வமாகிய சந்துக்குட்டி
எங்களைப் பிரிந்து ஆண்டொன்று
சென்றாலும் எங்கள் இதயத்தில்
உயிர் உள்ள வரை வாழ்ந்து
கொண்டே இருப்பாய் சந்துக்குட்டி

உன் பிரிவால் வேதனைப்படும்:
மாமா - பாஸ்கரன், அத்தை - ராஜி, தீபன் அண்ணை, மயூரா மச்சி, லக்ஷயன்குட்டி, கேதா அண்ணை, மதுரா மச்சி, நவீன் குட்டி, றஜீவன் அத்தான் (U.K).

*ஆனைக்கோட்டை.* (103022) பாஸ்கரன்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15.09.1924

மறைவு 08.09.2009

### திருமதி செல்லத்துரை கனகம்மா

எம் குடும்பத்தின் மூத்த குல விளக்காய்
எமக்கெல்லாம் ஒளி தந்து வழிகாட்டிய
எம் தீபம் அணைந்து ஓராண்டு கடந்தாலும்
எம் நினைவினிலே என்றும் எம்மோடு வாழ்ந்து
எமை வழி நடத்திச் செல்வீரம்மா!
மாறாது உம் நினைவு! ஆறாது எம் நெஞ்சம்!

(103030)

"தாய் அகம்",
பழைய வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சிவக்கொழுந்து செல்வரத்தினம்



தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் நேற்று முன்தினம் (06.09.2010) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - பொன்னம்மா தம்பதியினரின் மகனும் சொர்ணகாந்தியின் அன்புக் கணவரும் சுனித்தா (ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி), மயூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்னலட்சுமி (இளைப்பாறிய ஆசிரியை, கோண்டாவில் இந்து ம.வி.), சரஸ்வதி (இளைப்பாறிய ஆசிரியை, லண்டன்), கமலேஸ்வரி, பரமேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி), காலஞ்சென்றவர்களான இராசேஸ்வரி, ஆனந்தகிருஷ்ணன் மற்றும் தர்மராசா (பிரான்ஸ்), தவமலர் (இளைப்பாறிய ஆயுள்வேத வைத்திய கலாநிதி), செல்வராஜா (பிரதம இரசாயன பொறியியலாளர், காகித ஆலை, வாழைச்சேனை), காலஞ்சென்ற சச்சிதானந்தம் ஆகியோரின் சகோதரரும் இளைப்பாறிய ஆசிரியர்களான தம்பிராசா, இராசரத்தினம் (லண்டன்), காலஞ்சென்ற ஜெயராசசிங்கம் (லிகிதர்) மற்றும் சண்முகரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற இந்திரன் (வர்த்தகர்) மற்றும் ஜீவரத்தினம் (வர்த்தகர்), இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் சிவபாலன் (கனடா), கருணாபாலன் (கனடா), கலையரசி (ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி), கலாறஜனி, பவி, ராஜன், றஞ்சித் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் சிவப்பிரியன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், சர்வோதயம், வவுனியா), தர்ஷனா, பஃபியா, சசிதரன், சுகிதரன் (இந்தியா), விஜி, குமுதா, லதா, கௌசல்யா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2010) புதன்கிழமை பி.ப. 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிள்ளையார் கோயிலடி,*
*கொக்கவில், தாவடி.* (103047) தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கரவாத, அவசரகாலச் சட்டங்களை நீக்கி மக்களின் சுதந்திர நடமாட்டத்துக்கு உதவுங்கள்

## சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு நிருபமா ராவுக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,செப்.8

தற்போதைய சூழ்நிலையில் பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம் என்பவை தேவையற்றவை. எனவே அவற்றை நீக்கி மக்களின் சுதந்திரமான நடமாட்டத்தை உறுதிப்படுத்துமாறு கோரி சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு இந்திய வெளிவிவகாரச் செயலர் நிருபமா ராவிற்கு மகஜர் ஒன்றைக் கையளித்து.

கடந்த மாதம் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகாரச் செயலரை சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு சந்தித்தபோதே பல கோரிக்கைகள் அடங்கிய இந்த மகஜரைக் கையளித்தது.

அந்த மகஜரில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:

*வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள 58.6 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தில் மக்கள் குடியேற்றத்துக்கும் விவசாய செய்கைக்கும் அனுமதிக்க வேண்டும்.

*உயர் பாதுகாப்பு வலயத்தால் பாதிக்கப்பட்ட 10 ஆயிரம் குடும்பங்களை மீளவும் சொந்த இடத்தில் குடியேற்ற வேண்டும்.

*இடம்பெயர்ந்த மக்களுக்கான சகல அடிப்படைத் தேவைகளும் நிறைவேற்றப்படுவதுடன் அவர்களின் கல்விக்கான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

*இலங்கை - இந்திய ஒப்பந்தமான 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வழிசெய்ய வேண்டும்.

*தற்போது விடுதலைப் புலிகள் இல்லாததால் பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாச் சட்டம் என்பவற்றை நீக்கி சுதந்திரமான மக்கள் நடமாட்டத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*இந்திய அரசால் மேற்கொள்ளப்படவுள்ள காங்கேசன் துறைமுகம், பலாலி விமான நிலையங்களை சர்வதேச தரம் வாய்ந்ததாக உருவாக்கும் முயற்சிகளை வரவேற்கிறோம்.

*வடக்கு, கிழக்கில் மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

*வடக்கு - கிழக்கில் கைத்தொழில் பேட்டைகளையும், சுதந்திர வர்த்தக வலயங்களையும் உருவாக்க உதவி செய்ய வேண்டும்.

*யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீடத்தை அமைக்கவும், கிளிநொச்சியில் விவசாயம் - விலங்கியல் பீடங்களை அமைக்கவும் உதவ வேண்டும்.

*மனித உரிமைகள் மதிக்கப்படும் விதத்தில் சிவில் நிர்வாகத்தை நடைமுறைப்படுத்த உதவ வேண்டும்.

*இந்திய அரசில் 50 ஆயிரம் வீட்டுத் திட்டம் அமைக்கும் பணிக்கு எமது பாராட்டுக்கள் என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-6)



யாழ்.போதனா வைத்திய சாலையின் நடைபாதையில் வியாபாரத்தில் ஈடுபட்டவர்களின் கடைகளை நேற்று மாலை பொலிஸார் அகற்றிய போது எடுக்கப்பட்ட படம். *(படம்: தமிழினியன்)*

## நல்லூர் தேர்த் திருவிழாவில் ஆளுநரும் கலந்து கொண்டார்

யாழ்ப்பாணம்,செப்.8

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தன் ஆலய தேர்த்திருவிழாவில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியும் கலந்து கொண்டார்.

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த மஹோற்சவ உற்சவத்தின் பெரும் திருவிழாவான தேர்த்திருவிழா நேற்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இதில் வடமாகாண ஆளுநரும் கலந்து கொண்டு பூசை வழிபாடுகளில் ஈடுபட்டதைக் காணக் கூடியதாக இருந்தது.

இந்துக்களின் பாரம்பரிய உடையில் ஆளுநர் ஆலயத்துக்கு வருகைதந்து வழிபாடுகளில் ஈடுபட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த-16)

## காவடிகளால் நிரம்பியது நல்லூர் ஆலயச் சூழல்

யாழ்ப்பாணம்,செப்.8

நேற்று நடைபெற்ற நல்லூர்க் கந்தன் ஆலயத் தேர்த்திருவிழாவில் பெருமளவான பக்தர்கள் காவடிகள் மற்றும் பறவைக் காவடிகள் எடுத்துத் தமது நேர்த்திக் கடன்களை நிறைவு செய்தமையைக் காணக் கூடியதாக இருந்தது.

இந்த ஆலய மஹோற்சவத்தில் தீர்த்திருவிழா அருளலைக் குறிக்கும் திருவிழா என்பதால் பெருமளவான பக்தர்கள் தீர்த்தத் திருவிழாவன்றே காவடிகள் மற்றும் பறவைக் காவடிகள் எடுத்துத் தமது நேர்த்திக் கடன்களைத் தீர்ப்பது வழமை.

எனினும் நேற்று தேர்த்திருவிழாவன்றே பெருமளவான காவடிகள் மற்றும் பறவைக் காவடிகள் போன்றவற்றைக் காணக்கூடியதாக இருந்தது.

எனவே தீர்த்தத் திருவிழாவான இன்று இதைவிட அதிகளவான பக்தர்கள் காவடிகள் மற்றும் பறவைக் காவடிகள் எடுத்து தமது நேர்த்திக் கடன்களைத் தீர்ப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

(த-16-7-26)

## யாழ்.மருத்துவக் கழகத்தின் விஞ்ஞான ரீதியான அமர்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.8

யாழ்ப்பாண மருத்துவக் கழகத்தின் இந்த ஆண்டுக்கான வருடாந்த விஞ்ஞான ரீதியான அமர்வுகளின் அங்குரார்ப்பண வைபவம் எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமாகும். இதில் சிரேஷ்ட மருத்துவ ஆலோசகர் வைத்திய கலாநிதி எச்.என்.இராஜரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (க)




## ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,செப்.8

வடமராட்சிக் கல்வி வலயத்தில் வெற்றிடமாகவுள்ள ஆரம்பக்கல்வி, விஞ்ஞானம், ஆங்கிலம், சமூகக்கல்வி, சுகாதாரமும் உடற்கல்வியும், கிறிஸ்தவம், நடனம், சங்கீதம், சித்திரம், விவசாயம், மனையியல், வர்த்தகம் வழிகாட்டலும் ஆலோசனையும் இரண்டாம் மொழி சிங்களப் பாடங்களுக்கு ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு I அல்லது 2 - 1ஐச் சேர்ந்தவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

குறித்த பதவிக்கான மாதாந்த பாடசாலை தரிசிப்புக்கான கொடுப்பனவு 1,500 ரூபாவில் இருந்து 3,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் விண்ணப்பப் படிவங்களை வடமராட்சி வலயக் கல்வி அலுவலக நிர்வாகக் கிளையில் பெற்று எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார். (த-6)

## யாழ். இந்து மகளிர் மாணவிகளுக்கு

யாழ்ப்பாணம்,செப்.8

மூன்றாம் தவணைக்காக யாழ்.இந்து மகளிர் கல்லூரி எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகும் என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (ம)

## புங்குடுதீவுக்கு 17ஆம் திகதி முதல் 24 மணி நேர மின் விநியோகம்

யாழ்ப்பாணம்,செப்.8

புங்குடுதீவு பிரதேசத்திற்கு கேபிள் இணைப்பு 24மணி நேர மின்சாரம் விநியோகிக்கும் பணி எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கென புதிதாக அமைக்கப்பட்ட மின்மாற்றி அன்றைய தினம் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

தற்போது புங்குடுதீவுப் பகுதிக்கு ஜெனரேட்டர்கள் மூலமே மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுதிக்கு கடல்மார்க்கமாக மின்சாரக் கேபிள் இணைப்பு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. (த-26)

## சட்ட விரோதமாக மின் பெறுவோரை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,செப்.8

யாழ்.மாவட்டத்தில் சட்ட விரோதமாக மின்சாரம் பெறுவோரைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் மின்சார சபையினர் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

பொலிஸாரின் உதவியுடன் மின்சார சபை பணியாளர்கள் இரவு வேளையில் சட்ட விரோத மின்சாரம் பெறுவோரைக் கையும் மெய்யுமாக பிடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். கடந்த இரு நாள்களுக்கு முன்னர் சாவகச்சேரி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த திடீர் நடவடிக்கையில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 40 பேர் சிக்கிக் கொண்டனர். (த-26)



உடுவில் பிரதேச செயலாளர் பிரிவு மத்தியஸ்தர் சபையின் 3ஆம் ஆண்டு நிறைவு விழா மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மல்லாகம் மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிபதி க.கஜநிதிபாலன் அழைத்து வரப்படுவதை முதல் படத்திலும், சுன்னாகம் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி மங்கள விளக்கேற்றுவதை இரண்டாவது படத்திலும், நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை இறுதிப் படத்திலும் காணலாம்.


*(படங்கள்: நேசன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரேறி அருள்பொழிந்த நல்லூர்க் கந்தனின் காட்சிகள்




தேருக்கு எழுந்தருளும் முருகப் பெருமான்



தேரில் ஆரோகணிக்கும் நல்லைக் கந்தன்




பக்தர்கள் வெள்ளத்தில் மிதந்து வரும் திருத்தேர்




சிதறு தேங்காய் அடித்து பக்தர்கள் வேண்டுதல்



அங்கப் பிரதட்சணம் செய்து நேர்த்தியை நிறைவேற்றும் பக்தர்கள்



பச்சை சாத்தி வரும் கந்தனின் அழகுத் தோற்றம்








கந்தனிடம் வேண்டுதல்களை சமர்ப்பிக்கும் அடியார்களில் ஒரு பகுதியினர்





[illegible] மற்றும் தூக்குக் காவடி எடுத்து நேர்த்தியை நிறைவேற்றும் அடியார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எச்.என்.பி.அசூரன்ஸினால் கைதடி நவீல்ட் பாடசாலைக்கு அண்மையில் 25 கட்டில்கள், மெத்தைகள், தலையணைகள் என்பன வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
இந்த நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதனை முதலாவது படத்திலும் எச்.என்.பி.அசூரன்ஸின் சிரேஸ்ட சந்தைப்படுத்தல் அலுவலர் டினுகா, நிர்வாக முகாமையாளர் சான்டோ பெரேரா, வடக்கு கிழக்கு வலய முகாமையாளர் எஸ்.எம்.புவிராஜ், நவீல்ட் பாடசாலை அதிபர் வி.எஸ்.மகேந்திரன், எச்.என்.பி.அசூரன்ஸ் முகாமைத்துவப் பணிப்பாளர் மஞ்சுளா டீ சில்வா, ஆயுள் காப்புறுதி பொது முகாமையாளர் இந்திராணி வீரசிங்க, சந்தைப்படுத்தலுக்கும் விரிவாக்கலுக்குமான பொது முகாமையாளர் லலித் பெனார்ண்டோ ஆகியோர் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும், எச்.என்.பி.அசூரன்ஸ் அதிகாரிகள் மெத்தைகளை நவீல்ட் பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்வதை மூன்றாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: நந்தன்)*

# குடாநாட்டில் அதிகரித்துவரும் உரப் பாவனையால் எதிர்கால சந்ததிக்கு ஆபத்து; மண்வளமும் பாதிப்பு

## எச்சரிக்கிறார் விவசாய ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி

யாழ்ப்பாணம்,செப்.8

யாழ். குடாநாட்டில் விவசாயத்துக்கான உரப்பாவனை அதிகரிப்பதனால் எதிர்கால சந்ததியினர் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடலாம் எனத் திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி திருமதி செ.விஜயரட்ணம் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

அசேதன பசளைகளின் பாவனையைக் குறைப்பதற்கு விவசாய அமைச்சினால் சில அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. விவசாயிகள் தமது உற்பத்தியை அதிகரிப்பதற்காகவே அசேதனப்பசளைகளைப் பயன்படுத்துகின்றனர். சில நிறுவனங்கள் தமது வருமானத்தை அதிகரிப்பதற்காகக் குறைந்த விலையில் அசேதன பசளைகளை வழங்குகின்றன. இவற்றை விவசாயிகள் அதிகமாக பாவிப்பதனால் மண்ணின் வளம், தரம் என்பன குன்றுவதுடன் நீர் வளமும் பாதிப்படைகிறது. அத்துடன் எதிர்காலத்தில் நீலக் குழந்தைகள் பிறக்கும் அபாய சூழ்நிலையும் உருவாகும்.

முற்றுமுழுதாக அசேதனப்பசளையை விவசாயிகள் பயன்படுத்தாமல் 25 வீதம் சேதனப்பசளையையும் 75 வீதம் அசேதனப்பசளையையும் பயன்படுத்த முடியும். விவசாயத்திற்கெனத் தெரிவு செய்யப்பட்ட மூலங்களான யூரியா, அடர்சூப்பர், பொஸ்பேற், யூரியேற்றர் பொஸ்பேற் ஆகிய அசேதன பசளைகளைப் பயன் படுத்துவதனால் மண் வளத்தில் ஏற்படும் பாதிப்பைக் குறைக்க முடியும். அத்தோடு அவரை இனக் குழைகளைப் பயிரிட்டு உழுவதன் மூலம் மண் வளத்தைப் பேண முடியும்.

அசேதன பசளைகளின் மூலம் உற்பத்தி செய்யப்படும் விவசாய பொருள்கள் கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருப்பதுடன் அளவில் பெரிதாகவும் காணப்படுகிறன. சேதனப் பசளை மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் அளவில் சிறியதாக காணப்படுகிறன. இதனால் விவசாயப் பொருள்களை நுகர்வோர் கண்ணுக்குக் குளிர்ச்சியான பொருள்களையே கொள்வனவு செய்வதனால் விவசாயிகள் கூடிய அளவு அசேதன பசளைகளையே பயன்படுத்தி உற்பத்தியை மேற்கொள்ளுகின்றனர். இவ்வாறு அசேதனப் பசளைகளை கூடுதலாக பயன்படுத்தி விவசாய பொருள்களை உற்பத்தி செய்வதால் அப் பொருள்களை உட்கொள்ளும் மக்களுக்கு புற்றுநோய், மலட்டுத்தன்மை, மூளை வளர்ச்சி குன்றிய குழந்தை பிறத்தல் போன்ற நோய்கள் ஏற்படும் - என்றார்.

(த-314-315)

# சாட்டி சிந்தாத்திரை மாதா பெருவிழா

வேலணை சாட்டி புனித சிந்தாத்திரை மாதா ஆலய யாத்திரை ஸ்தல வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5.30 மணிக்கு நடைபெறும்.

நற்கருணை விழா 18 ஆம் திகதி மாலை 5 மணிக்கு நடைபெறும். மறுநாள் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருவிழா முதல் திருப்பலி காலை 5.30 மணிக்கும் திருவிழா கூட்டுத் திருப்பலி காலை 7 மணிக்கும் இடம்பெற்று திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும்.

அதேவேளை 10 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை சிறப்புக் கருத்தமர்வுகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகப் பங்குத் தந்தை தெரிவித்தார்.

சிறுவர், இளைஞர், யுவதிகள், பெற்றோர் மட்டங்களில் இந்த முழுநாள் கருத்தமர்வுகள் துறைசார்ந்த நிபுணத்துவம் பெற்ற குருக்களால் நடத்தப்படவுள்ளன.

அதேவேளை திருவிழாக் காலங்களில் இப்பகுதிக்கு வரும் பக்தர்கள் சுற்றுலாப் பயணிகள் ஆலயத்தின் புனிதத் தன்மையையும் தூய்மையையும் பேணிப்பாது காத்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(த-135-51)

# வல்லிபுர ஆழ்வாருக்கு இன்று கொடியேற்றம்



வடமராட்சி,செப்.8

வடமராட்சி அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் வருடாந்தப் பெருந்திருவிழா 8 ஆம் திகதி இன்று புதன் கிழமை பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

17 தினங்கள் இடம்பெறும் இப்பெருந்திருவிழாவில், எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை குருக்கட்டு விநாயகர் தரிசனம்,16 ஆம் திகதி வியாழக்கிழமை வெண்ணைத் திருவிழா,17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை துகில் திருவிழா,18 ஆம் திகதி சனிக்கிழமை பாம்புத்திருவிழா,19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஹம்சன் போர்த்திருவிழா, 20 ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத்திருவிழா ஆகிய திருவிழாக்கள் நடைபெறும்.

21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு சப்பரத்திருவிழாவும் 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.15 மணிக்கு தேர்த் திருவிழாவும்,23 ஆம் திகதி விழாக்கிழமை மாலை 6 மணிக்கு சமுத்திரத்தீர்த்தத் திருவிழாவும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கேணித் தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று பெருந்திருவிழா நிறைவுபெறும்.

இன்றைய கொடியேற்றம் தொடக்கம் 6 ஆம் திருவிழாவரை சுவாமி உள்வீதி உலாவும் 7 ஆம் திருவிழா தொடக்கம் 17 ஆம் திருவிழாவான கேணித்தீர்த்தத்திருவிழா வரை சுவாமி வெளிவீதி உலா வருவார். வடக்கு வீதியில் சுவாமி வீதி உலாவரும் போது கற்கோவளம் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நிகழ்ச்சிகள் அந்நாள் திருவிழாக் கருத்தை சித்தரிக்கும் விதத்தில் இடம்பெறும்.

சப்பரம், தேர், தீர்த்தத் திருவிழாக்கள் தவிர்ந்த ஏனைய திருவிழாக் காலங்களில் காலைத் திருவிழா 8 மணிக்கும், இரவுத்திருவிழா மாலை 4.30 மணிக்கும் நடைபெறும். அத்துடன் பெருந்திருவிழாக்காலத்தில் தினமும் விசேட மேளக்கச்சேரிகள் சமயச் சொற்பொழிவுகள் இடம்பெறும்.

பருத்தித்துறை மந்திகை ஊடாக வல்லிபுரக்கோயில், பருத்தித்துறை, தும்பளை ஊடாக வல்லிபுரக்கோயில், யாழ்ப்பாணம் வல்லிபுரம் கோயில் ஊடாக பருத்தித்துறை ஆகிய பாதைகளில் பஸ்சேவைகள் இடம்பெறும்.

சமயக் கோட்பாடுகள், கலாச்சாரத்திற்கமைய உடைகள் அணிந்து, பெறுமதியான தங்க ஆபரணங்களை அணிவதைத்தவிர்த்து திருவிழாவில் கலந்து கொண்டு வல்லிபுரமாயவனின் அருளைப் பெற்றேகுமாறு அறங்காவலர் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

(த-236-78)

# தென்மராட்சிக் கல்வி வலயத்தில் சேவைக் கால ஆலோசகர் பதவி

தென்மராட்சி,செப்.8

தென்மராட்சி கல்வி வலயத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் தகைமையுடையோரிடமிருந்து வலயக் கல்வி அலுவலகத்தினால் கோரப்பட்டுள்ளன.

தென்மராட்சி கல்வி வலய மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1, வகுப்பு 2:1 ஐச் சேர்ந்த ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தமிழ், சுகாதாரமும் உடற்கல்வியும் சித்திரம், விவசாயம், மனையியல், வர்த்தகம், முறைசாராக் கல்வி, விசேட கல்வி, இரண்டாம் மொழி (சிங்களம்) தகவல் தொழில்நுட்பம், சங்கீதம், ஆரம்பக் கல்வி, கணிதம், வாழ்க்கைத் தேர்ச்சி ஆகிய வற்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட பாடத்தை (அல்லது பாடம் சார்ந்த ஏற்புடைய பாடத்துறை) ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் பெற்றிருப்பதோடு விண்ணப்பிக்கும் பாடத்தில் விண்ணப்பதாரி 7 வருடங்களுக்கு குறையாத கற்பித்தல் அனுபவத்துடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

எழுத்துப் பரீட்சை நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு இடம்பெறும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்துக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (த-207)




# காரைநகர் அபிவிருத்தி சபையின் பொதுக் கூட்டம்

காரைநகர்,செப்.8

காரைநகர் அபிவிருத்திச் சபையின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற உள்ளதால் அபிவிருத்தியில் ஆர்வம் உடையவர்கள் நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு உதவி அரசாங்க அதிபர் இ.த.ஜெயசீலன் கேட்டுள்ளார்.

இந்த சபை கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக காரைநகரில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வந்தபோதிலும் கடந்த வாரம் அனைத்து உறுப்பினர்களும் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்ததை அடுத்தே இந்த பொதுக் கூட்டத்திற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

(த-250)

# ரம்ழான் சிந்தனை!

நபி பெருமானார் (ஸல்) அவர்கள், திராட்சை கோதுமையென்பனவற்றிலிருந்து ஒரு (சுமார் 275 கிரேம்) ஸாஃஅளவை முஸ்லிம்களில் ஒவ்வொரு சுதந்திரப் பிரஜை அடிமை, பெண், வலதுகுறைந்தோர், வயோதிபர்கள் மீதும் ரம்ழான் தர்மமாக விதியாக்கினார்கள்.

நோன்பாளிகளின் நோன்பு இரு தவறுகிளிலிருந்து தூய்மையடையவும் ஏழைகள் நோன்பு நோற்கவும் பெருநாளைக் கொண்டாடவும் வசதியையேற் படுத்தவே நபி (ஸல்)அவர்கள் ஸகாதுல் பித்ராவை விதியாக்கினார்கள். பெருநாள் தொழுகைக்கு முன்னர் இதனை வழங்கினால் அங்கிகரிக்கப்பட்ட பித்ராவாகக் கருதப்படும்.

*எம்.ஏ.காதர்*

# பச்சிலைப் பள்ளியில் உள்ள குடும்பங்களுக்கு மீள் குடியேற்ற அமைச்சு நிதியுதவி வழங்கியது

யாழ்ப்பாணம்,செப்.8

போரின் போது பல அழிவுகளைச் சந்தித்து மீளக் குடியமர்ந்துள்ள பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மீள் குடியேற்ற அமைச்சினால் நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் 742 குடும்பங்களுக்கு 12.000 ரூபா வீதமும் 1082 குடும்பங்களுக்கு 5000 ரூபா வீதமும், 842 குடும்பங்களுக்கு 20.000 ரூபா வீதமும் 200 குடும்பங்களுக்கு 2 லட்சம் ரூபா வீதமும் இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதி பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தமது அன்றாட சேவைகளை நிறைவேற்றக் கூடிய வகையில் வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் [illegible] தெரிவித்துள்ளார். (க-315-313)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அடுத்தமுறை யாழ்ப்பாணத்துக்கு வரும்போது அது ஜப்பானைப் போல் மேம்பாடடைந்திருக்கும்

## தென்னிந்தியப் பாடகி நித்தியஸ்ரீயின் நம்பிக்கை

நடுநிசியை நெருங்கும் வேளையில் கூட விழித்திருந்தது யாழ்ப்பாணம். இந்துக் கல்லூரியின் மைதானத்தில் திரண்டிருந்தவர்கள் எல்லோருமே தம்மை மறந்த நிலையிலிருக்க 'கணீர்' என்று உச்சஸ்தாயியில் எழுந்த குரல் ஒன்று அந்த இடமெங்கும் ஆட்சிபுரிந்து கொண்டிருந்தது.
வழமையாகவே யாழ்ப்பாணத்தில் இசை நிகழ்வு என்றவுடனேயே கட்டாயம் இடம்பெறுகின்ற கேளிக்கை, ஆட்டம் பாட்டம் என்கிற வயிற்றைக் குமட்ட வைக்கின்ற விடயங்கள் எதுவும் இல்லா விட்டாலும் கூட மைதானம் சனக்கூட்டதால் விழி பிதுங்கிக் கொண்டிருந்தது. கர்நாடகக் கீர்த்தனைகள்,பக்திப் பாடல்கள், சமூக விழிப்புணர்வுக் கருத்துக்கள் கொண்ட மெல்லிசைப்பாடல்கள் என எல்லோருக்குமே பிடித்தமான வகைகளில் இசையைப் பரவவிட்டுக் கொண்டிருந்தார் தென்னிந்தியப் பாடகி நித்தியஸ்ரீ மகாதேவன். சக்தி ரீ.வியின் ஏற்பாட்டில், உதயனின் அச்சு ஊடக அனுசரணையில் 'சக்தியின் யாழ் சங்கமம்' நிகழ்வின் இறுதிநாளன்று நிகழ்வுக்கு சிகரம் வைத்தது போல அமைந்தது நித்தியஸ்ரீ மகாதேவனின் இன்னிசைக் கச்சேரி. இவர் மிகக்குறுகிய கால பயண ஏற்பாட்டுடன் வந்திருந்த போதும் உதயன் வாசகர்களுக்காக நேர்காணலுக்கு ஒத்துக் கொண்டார்.
நள்ளிரவு தாண்டிய பொழுதில் 'கிறீன் கிராஸ்' விடுதிக்கு அவரைச் சந்திக்கச் சென்றோம். தன்னுடைய வழக்கமான புன்னகையை இன்னும் அதிகப்படுத்திக் கொண்டே உரையாடத்தொடங்கினார்.
'' எனக்கு இசைக்குடும்பத்தில் பிறக்கும் பாக்கியம் கிடைத்ததால் நானும் இசையில் சிறந்து விளங்கும் நிலைமை உருவாகியது. இசைக்கு பேர்போன திருவையாறில் 1973 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 25 ஆம் திகதி பிறந்தேன். இசையை பூர்வீகமாகக் கொண்ட மண் எனது இசைக்கு ஒரு முக்கிய காரணி.என்னுடைய பாட்டி டி.கே பட்டம்மாள் உலகறிந்த இசை மேதை. மிருதங்க வித்துவான் பாலக்காடு மணிஐயர் என்னுடைய தாய்வழித் தாத்தா. அத்தோடு பிரபல பாடகராக விளங்கிய டி.கே. ஜெயராமனும் நெருங்கிய உறவினர். இத்தகைய பூர்வபந்தப் பயனாக எனக்குள்ளும் இசை இயல்பாகவே ஊற்றெடுக்கத்தொடங்கியது. அந்த ஊற்றை எனது பாட்டி பட்டம்மாளும், அம்மா லலிதா சிவகுமாரும் சரியானபடி நெறிப்படுத்தி இசையை அருவியாகப் பெருக்கெடுக்க வைத்தார்கள். அம்மாதான்

என்னுடைய திறன் அனைத்தையும் திரட்டி அந்தக் கச்சேரியில் பாடியிருந்தேன். கச்சேரியின் முடிவில் என்னையறியாமலே நான் அழுதுவிட்டிருந்தேன். இந்த மண்ணுக்கு வந்தவுடனேயே மக்களின் சோகம் என்னிடத்திலும் தொற்றிவிட்டிருந்தது. அவர்களின் நிலைகண்டு - அவர்கள் படும் வேதனைகண்டு - இந்த மக்களுக்கு ஒரு விடிவுபிறக்க வேண்டும் என்று மனதுக்குள் பிரார்த்தித்தவாறுதான் அன்றைய



கச்சேரியில் என்னால் பாடமுடிந்தது.
ஆனால் இந்த முறைவந்த போது மக்களின் முகங்களில் ஏதோவொரு துன்பத்திலிருந்து விடுபட்ட உணர்வு அப்பட்டமாய்த் தெரிந்தது. சென்ற முறை வந்த போது நான் செய்த பிரார்த்தனை பலித்துவிட்டதைப் போல உணர்ந்தேன். இன்றைக்கும் (கச்சேரி நடந்த அன்று) என்னுடைய கச்சேரியைக் கேட்க வந்த மக்கள் வெள்ளத்தால் மைதானம் நிரம்பி வழிந்தது. யாழ்ப்பாண மக்கள் என்றைக்கும் கலையின் மீதும் மரபார்ந்த இசையின் மீதும் மதிப்பும், தாகமும் கொண்டவர்கள் என்பதை இப்போதும் நிரூபித்து விட்டார்கள். அதிலும் இசைக்காகவே தங்களுடைய

போல எனக்குப் பிடித்த கீர்த்தனைகளை, கேட்போருக்குப் பிடித்தமான பாடல்களைப் பாட முடிகின்றது. கச்சேரி நடக்கின்ற 3 மணிநேரமும் என்னுடைய மனதின் எல்லா இடங்களுக்கும் சஞ்சரித்து உள்ளிருக்கும் சுமையை வெளியேற்ற முடிகின்றது. ரசிகர்களின் உணர்வுகளை , எனது இசையை கேட்கின்ற போது அவர்கள் காட்டுகின்ற பிரதிபலிப்புக்களை நேருக்கு நேரே அனுபவித்துக் கொண்டே பாடுகின்ற பாக்கியம் கச்சேரிகளில் மட்டுமே கிடைக்கிறது.
ஒருமுறை - 2005 ஆம் ஆண்டு-பாண்டிச்சேரியில் என்னுடைய கச்சேரி நடந்துகொண்டிருந்தது. அப்போது ரசிகர்கள் நடுவே சிறு சலசலப்பு. அங்கிருந்தவர்களை லட்சியம் செய்யாதவர் போல ஒரு சில கதிரைகளையும் தட்டிவிழுத்திவிட்டு ஒருவர் முன்னே வந்து உட்கார்ந்தார். அவரின் தலை பரட்டையாயிருந்தது. உடைகளும் அலங்கோலமாக இருந்தன. நீண்ட நாள்கள் சவரம் செய்யாத முகம். கச்சேரியை குழப்பப்போகிறாரோ என்று நான் எண்ணிக்கொண்டிருந்த போது எதுவும் பேசாமல் கச்சேரியை கேட்டு ரசிக்கத் தொடங்கிவிட்டார். ஆனாலும் அவரது உருவம் என்னை உறுத்திக்கொண்டேயிருந்தது. இருப்பினும் நான் பாடிக்கொண்டே இருந்தேன். சுமார் 45 நிமிடங்களுக்குப் பிறகு அவர் தூங்கிவிட்டார். கச்சேரி முடிந்து நான் புறப்படும் போது கூட அவர் தூக்கத்திலிருந்து எழுந்திருக்கவில்லை. அடுத்தநாள் காலை நான் தங்கியிருந்த ஹோட்டலுக்கு என்னைச் சந்திக்க ஒருவர் வந்திருந்தார். நெற்றி நிறைய விபூதியும், வெண்ணிறச் சட்டையும் அணிந்து ஒரு சிவப்பழமாக காட்சியளித்தார். என்னைக் கண்டவுடன் ''அம்மா! என்னைத் தெரிகின்றதா ? நான்தான் நேற்றுக் கச்சேரி நடந்த போது அலங்கோலமாக வந்து முன்னால் உட்கார்ந்தவன்'' என்று அறிமுகப்படுத்தினார். எனக்கு ஆளையே அடையாளம் தெரியவில்லை. அந்தளவுக்கு மாறிப் போயிருந்தார். ''வாழ்க்கையில் என்னவெல்லாம் பிரச்சினைகள் நேரக்கூடாதோ அவ்வளவும் அனுபவித்து விட்டேன். தற்கொலை செய்து கொள்வதற்காக பாண்டிச்சேரி கடல் நோக்கிப் போய்க்கொண்டிருந்தேன். அப்போதுதான் உங்களது கச்சேரியின் இசை என் காதில் விழுந்தது. என்னையும் அறியாமல் கச்சேரி நடந்த இடத்திற்கு வந்தேன். உங்கள் இசையில் எனது சுமைகளெல்லாம் உருகி ஒடுவதுபோலிருந்தது. மனதிலிருந்த பாரமெல்லாம் நீங்கிவிட்டதால் கச்சேரியைக் கேட்டபடியே தூங்கிவிட்டேன்'' அவர் சொல்லச் சொல்ல எனக்கு கண்கள் பனித்தன.ஒரு மனிதனின் மரணத்தை தடுக்கக்கூடிய வல்லமை எனது இசைக்கு இருக்கின்றது என்பதை நினைக்கும் போதே ஆனந்தமாக இருந்தது.

**நேர்காணல்: ஔண்யன்**

## போருக்கு நடுவேயும் என் இசையை ரசிக்க வந்த மக்களைக் கண்டு கண்ணீர் விட்டேன்

என்னுடைய முதல் குரு. நான் இசையில் சிறப்பான இடத்தை அடைய வேண்டும் என்பதற்காக அதிகாலை 5மணிக்கே என்னை எழுப்பி ஈரத்துணியால் கண்ணைத்துடைத்து, தூக்கம் கலைத்து, சாதகம் பண்ண ஊக்கம் கொடுத்தது அம்மாதான். என்னை 5 மணிக்கே எழுப்புவதற்காக அம்மா அதிகாலை 3மணிக்கே எழுந்துவிடுவார். எனக்காக தன்னுடைய தூக்கத்தைக் கூட அவர் பொருட்டாக நினைத்ததில்லை.
என்னுடைய இசையில் நீண்ட நேரம் மூச்சடக்கி உச்சஸ்தாயில் பாடுதல் சிறப்பாக உள்ளதாக அனைவரும் சிலாகிக்கின்றனர். இதற்கான அடித்தளத்தையும் அம்மாதான் இட்டார். நீண்ட நேரம் மூச்சடக்கிப் பாடுவதில் எனக்கும் அம்மாவுக்குமிடையே சிறுவயதில் போட்டிகூட நடப்பதுண்டு. பாட்டியின் பாடல்கள் என்னை அறியாமலேயே -அவரைப் போலவே -இசையின் உச்சங்களைத் தொட வேண்டுமென்ற வைராக்கியத்தை ஏற்படுத்தின. அம்மாவினதும் பாட்டியினதும் கனவைப்போலவே நனவிலும் நான் உலகறிந்த பாடகியாக வரமுடிந்தது.
பாட்டி டி.கே பட்டம்மாள் 1980 ஆம் ஆண்டளவில் கச்சேரி செய்வதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த போது சிறுபிள்ளையாக நானும் வந்திருந்த ஞாபகம் இப்போதும் நிழலாடுகிறது. எனவே யாழ்ப்பாணத்துக்கு நான் வருவது இத்தோடு மூன்றாவது தடவை. சென்றமுறை அமைதிப் பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருந்த போது கச்சேரி செய்வதற்காக வந்திருந்தேன். அப்போது மிகப் பெரிய கூட்டம். என்னுடைய குரலைக் கேட்க வேண்டும் என்ற ஆசையுடன் திரண்டிருந்த அந்த மக்களின் முகங்களில் போருக்குள் வாழ்கின்ற ஒரு சோகம் மறைந்திருப்பதை என்னால் உணரமுடிந்தது. இவ்வளவு பிரச்சினைகளுக்கும் நடுவில் என்னுடைய இசையைக் கேட்டே தீரவேண்டும் என்று பல பாகங்களிலிருந்தும் எனது கச்சேரிக்காக திரண்டிருந்த அந்த மக்களுக்காக

வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த மூத்த இசைக்கலைஞர்களை அரங்கிலேற்றி அவர்களைக் கௌரவித்த செயல் என்னைப் புல்லரிக்க வைத்துவிட்டது.
நான் திரையிசை, கர்நாடக இசை என இரு தளங்களில் இயங்கினாலும் எனக்கு ஆத்மதிருப்தியைத் தருவது மரபிசையான கர்நாடக இசைதான். திரையிசையால் எங்களுடைய புகழ் சடுதியாகப் பரவும். பட்டிதொட்டியெங்கும் உள்ள மக்களுக்கு



இசைக்கலைஞர்களின் பெயரை திரையிசைதான் அதிகமாக அறிமுகப்படுத்தும். ஆனாலும் திரையிசையில் இசையமைப்பாளர், இயக்குனர், தயாரிப்பாளர் என்போரின் விதிக்கின்ற கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே பாடவேண்டியிருக்கும்.
ஆனால் கர்நாட இசைக் கச்சேரிகள் அப்படியல்ல. அது எனக்கான மேடை. கச்சேரியைக் காண வருகின்ற ஒவ்வொருவரும் எனக்காக - நித்தியஸ்ரீயின் குரலைக் கேட்பதற்காக மட்டுமே வருகிறார்கள். அங்கு எனக்கு கட்டுப்பாடுகள் எதுவுமில்லை. ஒரு சுதந்திரப்பறவை

நான் கர்நாடக சங்கீதத் துறையில் எனது ஆளுமையை வெளிப்படுத்தியிருந்த போதும் உலக மக்களிடையே எனது பெயரைக் கொண்டு சென்று எனக்கான அடையாளத்தை தந்தது '' கண்ணோடு காண்பதெல்லாம்'' என்ற பாடல்தான். (தன்னுடைய வசீகரக்குரலில் நமக்காக ஒருமுறை அந்தப் பாடலின் பல்லவியை பாடிக்காட்டுகிறார்)அதன்பின்னர் பிரபலமான திரையிசைப்பாடல்கள் சிலவற்றை பாடியிருக்கிறேன். அவையெல்லாமே மக்களிடத்தே பெரு வரவேற்பைப் பெற்றவை. இது தவிர ஏராளமான இசைத்தட்டுக்களிலும் பாடியுள்ளேன். நான் இசையை எந்தவொரு கல்லூரியிலும் பயிலவில்லை. என்னுடைய அம்மாவும் பாட்டியும் தான் எனக்குப் பயிற்றுவித்த பல்கலைக்கழகங்கள்.
ஒருமுறை மாநில அரசின் சிறந்த பாடகிக்கான விருதையும், இரண்டு முறை 'பிலிம்ஃபேர்' விருதையும் மற்றும் கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் சிறந்த பாடகிக்கான விருதை ஒருமுறையும் பெற்றுள்ளேன். சத்தியபாமா பல்கலைக்கழகம் 2000 ஆம் ஆண்டு எனது இசைச் சேவையைக் கௌரவித்து 'கௌரவ கலாநிதி' பட்டத்தை வழங்கியது.
இந்த முறை யாழ்ப்பாணத்தில், சென்றமுறை வந்ததைவிடவும் அமைதியையும் வளர்ச்சியையும் என்னால் கண்டுகொள்ளமுடிந்தது. ஒரு நீண்ட யுத்தம் முடிந்து மக்கள் இப்போதுதான் நிம்மதியான வாழ்வுக்கு வந்திருக்கிறார்கள். வாழ்க்கை ஒரு சக்கரம் போன்றது. அதனால்தான் இதுவரையும் துன்பத்திலிருந்தவர்கள் அதிலிருந்து மீண்டு ஆனந்த நிலையை

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு தலா பத்துலட்சம் ரூபா நிதியுதவி

## இலங்கை தேயிலைச் சபை தீர்மானம்

கண்டி, செப்.8

தேயிலைத் தொழிற்சாலைகளை நிர்வகிப்பதற்காக ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் தலா பத்துலட்சம் ரூபா மானிய நிதியை வழங்குவதற்கு இலங்கை தேயிலைச் சபை தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் இலங்கை தேயிலைச் சபையின் ஆணையாளர் ஜே.கே.எதிரிசிங்க தெரிவித்தவை வருமாறு:-

நாடளாவியரீதியில் 739 தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றில் 245 தொழிற்சாலைகள் நிதியுதவிக்கான விண் ணப்பங்களை ஏற்கனவே அனுப்பி வைத் துள்ளன.

தேயிலைச் சபையின் அதிகாரிகள் குழு இந்தத் தொழிற்சாலைகளுக்கு விஜயம் செய்து ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும். இக்குழுவின் பரிந்துரைகளுக்க மைய இந்த மானிய நிதியுதவி வழங்கப்படும்.

பெருந்தோட்டப் பயிர்கள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க நாட்டு மக்களுக்குத் தரமான தேயிலை கிடைக்கச் செய்யும் நோக்கிலேயே இந்த மானிய நிதியுதவியைப் பெற்றுக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளார்.

தேயிலைத் தொழிற்சாலைகள் நல்ல முறையில் இயங்கினால் மட்டுமே தரமான தேயிலையை உற்பத்தி செய்யமுடியும் - இப்படி இலங்கை தேயிலைச் சபையின் ஆணையாளர் எதிரிசிங்க தெரிவித்தார். (ளி)




## 'தின்னரில்' அடுப்பு மூட்டிய பெண் நெருப்பில் எரிந்து பரிதாப மரணம்

பதுளை,செப்.8

'தின்னர்' ஊற்றி அடுப்புப் பற்ற வைத்த இளம் தாயொருவர் தீயில் எரிந்து மரணமான பரிதாபச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை லுணுகலவில் இடம்பெற்றது.

லுணுகல சோலன்ஸ் தோட்டத்தைச் சேர்ந்த ஜி.ஏ.குமாரி (வயது-25) என்ற இருபிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவத்தில் காயமடைந்த இவர் பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (ளி)

## மதுபோதையில் வாகனம் செலுத்திய கலால் அதிகாரி உட்பட 16பேர் கைது

கொழும்பு,செப்.8

அதிக மதுபோதையில் வாகனம் செலுத்தினர் என்ற குற்றச்சாட்டில் கலால் திணைக்கள அதிகாரி ஒருவர் உட்பட 16 பேர் கண்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டபோது அவர்களுக்க தலா 7,500 ரூபா அபராதம் விதித்து கண்டி பிரதம நீதிவான் லலித் ஏக்கநாயக்க தீர்ப்பளித்தார்.

அத்துடன் அவர்களின் சாரதி அனுமதிப் பத்திரங்களை மூன்று மாதங்களுக்கு இடை நிறுத்தம் செய்தும் அவர் உத்தர விட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை கண்டி நீதிமன்றத்தில் மேற்படி தீர்ப்பை வழங்கிய நீதிவான், இவர்களுள் சாரதி அனுமதிப்பத்திரமின்றி மதுபோதையுடன் வாகனம் செலுத்தினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த நப ரொருவருக்கு பத்தாயிரம் ரூபாவை மேலதிக அபராதமாகவும் விதித்தார். (ளி)

## பதுளையின் அபிவிருத்திக்கு ஐந்துகோடி ரூபா நிதியுதவி

### 108 திட்டங்கள் முன்னெடுப்பு

பதுளை, செப்.8

பதுளை மாவட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் இந்த வருடத்தில் சுமார் ஐந்துகோடி ரூபா செலவில் மேம்படுத்தப் படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான 108 திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள என பதுளை மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் டபிள்யு.எம்.பி. விஜய பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

தேசிய மட்டத்தில் நாடெங்கும் 3060 கிராமங்களின் அபிவிருத்தி திட்டங்களின் கீழ் பதுளை மவட்டத்தில் 132 திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்திட்டங்களின் மூலம் 10,747 குடும் பங்கள் நன்மையடையும் என எதிர்பார்க் கப்படுகின்றது.

இத்திட்டங்களின் கீழ் விவசாயமும், பாலங்கள் மற்றும் நீரோடைகளும் அபிவிருத்தி செய்யப்படும் ஏழு திட்டங்களும், சிறிய அளவிலான 84 நீர்ப்பாசனத் திட்டங்களும், ஐந்து சிறிய வாவிகள் புனர்நிர்மாணத் திட்டங்களும் மேற்கொள்ளப்படும்.

அத்துடன் விவசாயத்திற்கான நிலத்தடி நீர்த்திட்டங்கள் ஏழு, ஒரு குடிதண்ணீர்த் திட்டம் மற்றும் சந்தைப்படுத்தல் நிலையமொன்றும் அமைக்கப்படும்.

இத்திட்டங்களுக்காக இலங்கை சமுர்த்தி அதிகாரசபை தலா ஐந்துலட்சம் ரூபா நிதியுதவியை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

பதுளை மாவட்டச் செயலாளர் ரோஹண கீர்த்தி திஸாநாயக்கவின் வழிநடத்தலில் பதுளை மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் விஜய பண்டார தலைமையில் இத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - இப்படித் தெரிவிக்கப் பட்டது. (ளி)

## பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ரகசியமாக அரங்கேறும் பகிடிவதை

கண்டி, செப்.7

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதலாம் வருட மாணவர்களின் வருகையைத் தொடர்ந்து இரகசியமாக இடம்பெற்று வரும் பகிடிவதைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பகிடிவதைகளில் ஈடுபட்ட சிரேஷ்ட மாணவர்கள் சிலர் அதிகாரிகளால் பிடிக்கப்பட்டுள்ளனர் என்றும், இவ்வாறு பிடிபட்ட சிரேஷ்ட மாணவர்களுக்கு எதிராக ஒழுக் காற்று விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இரவு நேரங்களில் விடுதிகளிலிருக்கும் மாணவர்கள் வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு பகிடிவதைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

இவ்விடயம் தெரியவந்ததை அடுத்து சிவிலுடையில் அமர்த்தப்பட்ட பாதுகாப்புத் தரப்பினரால் பலர் மடக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ளி)

## கிழக்கு மாகாண வைத்தியசாலைகளில் சோதனை நடத்த விசேட குழுவினர்

### மாகாண சுகாதார அமைச்சர் அதிரடி

திருகோணமலை, செப்.8

கிழக்கு மாகாணத்திலுள்ள அரச வைத்தியசாலைகளின் செயற்பாடுகளைச் சீரமைக் கும் பொருட்டு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் குழு ஒன்றை அமைத்துள்ளார்.

இந்தக் குழுவினர் கிழக்கு மாகாணத்திலுள்ள அரச வைத்தியசாலைகளுக்குச் சென்று அங்கு இடம்பெறும் குறைபாடுகள், தேவைகள் ஆகியவை தொடர்பாகக் கண்டறிந்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வர் என்றும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்துள்ளார். (ளி)

## பள்ளிக்குடியிருப்பில் பொலிஸ் நிலையம்

திருகோணமலை, செப்.8

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பள்ளிக்குடியிருப்பு தேக்குச் சோலை பகுதியில் புதிய பொலிஸ் நிலையம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நட்மலவின்ன பண்டார இப்புதிய பொலிஸ் நிலையக் கட்டடத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

தோப்பூர் பொலிஸ் நிலையப் பொறுப்பாளர் மஹிந்த சேனரட்ண, மூதூர் பிரதேச செயலாளர் என்.செல்வநாயகம், பாடசாலை மாணவர்கள் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர். (ளி)

## சட்ட விரோத எரிபொருள் நிலையங்கள் முற்றுகை காத்தான்குடிப் பகுதியில் மூன்று பேர் கைதாகினர்

மட்டக்களப்பு, செப். 8

காத்தான்குடிப் பிரதேசத்தில் சட்ட விரோத எரிபொருள் நிலையங்களை முற்றுகையிட்ட பொலிஸார் 3 பேரை கைது செய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து 139 லீற்றர் பெற்றோல் மற்றும் 590 லீற்றர் டீசல் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிமல் குணவர்தன தெரிவித்தார்.

காத்தான்குடி பிரதேசத்திலுள்ள 7 சட்டவிரோத எரிபொருள் விற்பனை நிலையங்கள் முற்றுகையிடப்பட்டன. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

நேற்று மாலை இம்முற்றுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (ஓ-211)




## நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாகத் தரமுயர்த்துக

அம்பாறை, செப்.8

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாகத் தரமுயர்த்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் இணை நிறுவனமான வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஜீவோதய நலன்புரி நிறுவனம் இக்கோரிக்கையை விடுத்துள்ளது. நிறுவனத்தின் முகாமைத்துவ சபைக் கூட்டத் தீர்மானத்திற்கு அமைவாக மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மகஜர்கள், சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம். எஸ். சுபைர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஜீவோதய நலன்புரிச் சங்கத் தலைவர் எஸ். லோகநாதன், நிர்வாகப் பணிப்பாளர் ரீ.விக்கிரமசிங்கம் ஆகியோர் ஒப்பமிட்டு குறித்த மகஜர்களை அனுப்பிவைத்துள்ளனர். இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப் பவை வருமாறு:-

"கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலை நீண்டகாலமாகப் பிரதேச மக்களுக்கு அரும் பெரும் சேவைகளை ஆற்றி வருகின்றது.

கடந்த கடற்கோள் அனர்த்தத்தின் போது முழுமையாகச் சேதமுற்ற மேற்படி நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலைக்கென பின்லாந்து செஞ்சிலுவைச் சங்கம் நவீன வசதிகளுடன் கூடிய பாரிய வைத்தியசாலைக் கட்டடத் தொகுதியொன்றை நிர்மாணித்துக் கையளித்துள்ளது.

தற்போது புதிய கட்டடத் தொகுதியில் மாவட்ட வைத்தியசாலை இயங்கி வருகின்றது. எனினும் இங்கு மேலும் வைத்திய சேவைகளை விஸ்தரிப்பதற்கான வசதி, வாய்ப்புகளுள்ளன.

சிறந்த நிர்வாகத்திலுள்ள நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாகத் தரமுயர்த்துவது சாலவும் பொருத்தமான செயலாகும்.

எனவே, இப்பிரதேச முஸ்லிம், தமிழ் மக்களின் நலன் கருதி நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாகத் தரமுயர்த்துவதுடன், மேலும் பல வைத்தியச் சேவைகளை இங்கு மக்கள், பெறுவதற்கு ஆவன செய்யுமாறும் கோருகின்றோம்.'' - இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ளி)

## எருவில் கிராமம் புறக்கணிப்பு புத்திஜீவிகள் பெரும் கவலை

மட்டக்களப்பு, செப்.8

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட கிராமங்களில் எருவில் கிராமம் பல வழிகளிலும் புறக்கணிக்கப்பட்டு வருகிறது என அக்கிராம புத்திஜீவிகளும் கல்விமான்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் பல கிராமங்கள் அபிவிருத்தி கண்டுவருகின்றன. இந்நிலையில் சில கிராமங்கள் இன்னும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. இது ஒரு பாரபட்சமான செயல் ஆகும் என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட கிராமங்களிலுள்ள வீதிகளில் மதகுகள் அமைப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒருகிராமத்துக்கு 9மதகுகளும் இன்னொரு கிராமத்துக்கு 8மதகுகளும் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் எருவில் கிராமத்துக்கு மாத்திரம் ஒரேஒரு மதகு அமைப்பதற்கே திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதற்கான காரணம்தான் என்ன? என மக்கள் கேட்கின்றனர்.

எருவில் கிராமம் மூன்று கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளை உள்ளடக்கிய ஒரு பெரிய கிராமமாகும். இக்கிராமத்தில் ஆரம்பத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர். எனினும் அபிவிருத்தி பணிகள் இடம்பெறவில்லை. இந்நிலையிலேயே இன்னும் இக்கிராமம் புறக்கணிக்கப்பட்டு வருகிறது என்றும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே பிரதேசசபையும், பிரதேச செயலகமும் இக்கிராம அபிவிருத்தியில் அக்கறை செலுத்தி ஒதுக்கப்பட்ட மதகுகள் அமைக்கும் திட்டத்தில் இக்கிராமத்துக்கும் உரிய பங்கை வழங்கி, அபிவிருத்தி வேலைகளில் இக்கிராமத்தையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என இக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வினைகள் போக்கி வரமருளும் வல்லிபுர ஆழ்வார்

**துன்னாலை, வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று (08.09.2010) புதன்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. அதனையொட்டி இந்த ஆக்கம் இங்கு பிரசுரமாகின்றது.**

*''தொன்மை சேர் கீர்த்தியோங்கும்*
*துன்னையம்பதியின் கண்ணே*
*மன்னிய கருணை கொண்டு*
*வல்லிபுர ஆழ்வாராகிப்*
*பொன்மகள் பூமாதேவி புடைசூழ*
*வரங்கள் நல்குஞ்*
*சென்னியில் துளவஞ் சேருந்*
*திருமாலே சரணம் நீயே''*

இலங்கை மாதாவின் சிரமெனத் திகழ்வது யாழ்ப்பாணம். அதன் இரு கண்கள் போல் துலங்குவன துன்னாலை, பொன்னாலை எனும் இடங்களில் உள்ள விஷ்ணு ஆலயங்களாகும் என தட்சண கைலாய மான்மியம் கூறுகின்றது.

அலைகடலின் தென்றல், அழகிய வெண் மணற் பரப்பு, அதைச் சுற்றி விரிந்த குடை போல் படர்ந்து நிழல்தரும் ஆல், அரசு, கொன்றை, நாவல், இலுப்பை போன்ற பல்வேறு விருட்சங்கள். இவற்றின் மத்தியில் பார்ப்பவர் மனதில் பக்திப் பரவசம் தோன்றச் செய்யும் ஏழு தளமும் எழுபத்தியொரு அடி உயரமும் கொண்ட இராஜ கோபுரத்தின் புதுப்பொலிவுடன் காட்சி தருவதும், மூர்த்தி தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப் பெற்றதும் வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம்.

இந்த ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று 8ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதினேழு தினங்கள் நடைபெறவுள்ளன.

முதல் ஆறு நாள் உற்சவங்களின் போதும் சக்கரத்தாழ்வார் உள்வீதி மட்டும் வலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்



பார். எதிர்வரும் 14ஆம் திகதி வெளிவீதி உலா வருவார்.

முக்கிய உற்சவங்களான குருக்கட்டு விநாயகர் தரிசனம்,வெண்ணெய் திருடுதல், துகில் திருவிழா, பாம்புத் திருவிழா, கம்சன் போர், வேட்டைத் திருவிழா ஆகியன எதிர்வரும் 15ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. இந்நாள்களில் சுவாமி வடக்கு வீதியில் வரும்போது கற்கோவளம் அறநெறிப்பாடசாலை மாணவர்களால் அந்நாள் உற்சவ கருத்தைச் சித்திரிக்கும் முறையில் அவை நாடகமாக நடித்துக் காண்பிக்கப்பட்டு வருவது சிறப்பம்சமாகும்.

எதிர்வரும் 21ஆம் திகதி மாலை சப்பரத் திருவிழாவும் 22ஆம் திகதி தேர்த் திருவிழாவும் நடைபெறும்.

ரதம் வீதிவலம் வரும்போது பக்தர்கள் கோபாலா, கோவிந்தா என்று கோஷமிட்டு தமது உணர்ச்சிகளை வெளிக்காட்டுவர். அங்கப்பிரதட்சணம் செய்யும் ஆண் அடியார்களும் அடிவிளக்கும் பெண் அடியார்களும் நூற்றுக்கணக்கில் திரண்டு வந்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

பலரும் பல்வேறு இடங்களில் இருந்தும் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதற்காக பறவைக்காவடி, தூக்குக் காவடி எடுத்துவருவர். இவர்கள் முதுகிலும் கால்களிலும் கைகளிலும் முள்ளுக்குத்தி வருவதைப் பார்க்கும்போது மயிர்க்கூச் செறியும். ரதத்தின் பின்னால் பல பக்தர்கள் பண்ணிசை பாடி வருவது பக்தர்களை மெய்சிலிர்க்க வைக்கும் என்றால் மிகையாகாது.

எதிர்வரும் 23ஆம் திகதி மாலை சமுத்திரத் தீர்த்தோற்சவம் நடைபெறும். ஆலயத்தில் இருந்து சுமார் 3 மைல் தூரத்தில் உள்ள வங்காள விரிகுடாவில் கற்கோவளம் பகுதியில் இத்தீர்த்தோற்சவம் நடைபெறும். இத்தீர்த்தோற்சவம் காண வங்கக் கடலை நோக்கிச் செல்லும் பக்தர்களைப் பார்க்கும்போது கடல் அலையோ இல்லை மக்கள் தலையோ என எண்ணத் தோன்றும்.

நாட்டின் யுத்த சூழ் நிலை காரணமாக 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் இராணுவ முகாமில் பெயர்கள் பதிவு செய்யப்பட்ட குறிப்பிட்ட ஒரு சில பக்தர்கள் வங்கக் கடலுக்குச் சென்று குடங்களில்கொண்டு வரும் சமுத்திர தீர்த் தத்தில் ஆலயத்தின் ஈசான மூலையில் எழுந்தருளி இருக்கும் சக்கரத்தாழ்வாருக்கு தீர்த்தோற்சவம் இடம்பெற்று வந்தது. கடந்த வருடம் சகல பக்தர்களும் கடற் கரைக்குச் சென்று தீர்த்தமாடுவதற்கான ஒழுங்குகளை அறங்காவலர் சபையினர் மேற்கொண்டிருந்தனர். அதேபோன்று இம்முறையும் சகலரும் கடற்கரைச்குச் சென்று தீர்த்தமாடுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

24ஆம் திகதி காலை கேணித்தீர்த்தம் நடைபெறும். அயலில் உள்ள கேணியில் இத்தீர்த்தம் இடம்பெறும். தீர்த்தமாடும் கேணியில் இருந்துதான் 'நாமம்' என்னும் திருப்பொட்டுக்கான களிமண் எடுக்கப்பட்டு வந்தது. ஏனைய ஆலயங்களில் சந்தனம், குங்குமம் பொட்டாக இடப்படுவது போல, இந்த ஆலயத்தில் திருநாமம் பொட் டாகப் போடப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது. அன்று பிற்பகல் 5 மணிக்கு கொடி யிறக்கம் நடைபெறும்.

**அகல்யா அற்புதானந்தன்**

எதிர்வரும் 25ஆம் திகதி இடம்பெறும் ஆஞ்சநேயர் மடையுடன் உற்சவங்கள் நிறைவுபெறும். சமயக்கோட்பாடுகளுக்கும் கலாசாரத்துக்கும் அமைவாக சகலரும் உடைகள் அணிந்து, உற்சவங்களில் கலந்து வல்லிபுர மாயவனின் அருளைப் பெற்றுய்யுமாறு ஆலய அறங்காவலர் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது

உற்சவ காலங்களில் தினமும் அன்னதானமும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.✱












Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குழந்தை ரோபோ



நியோனி என்ற புதிய ரோபோ இயந்திரத்தை ஜப்பான் நாட்டில் ஒசாகா பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது. நியோனேட் என்ற வார்த்தையில் இருந்து புதிய ரோபோவிற்கு, நியோனி என பெயர் சூட்டப்பட்டுள்ளது. நியோனேட் என்றால் பிறந்த குழந்தை என ஜப்பான் மொழியில் பொருள்.

புதிய ரோபோவிற்கு பிறந்த குழந்தை என பெயர் சூட்டப்பட்டாலும், இந்த ரோபோ நன்கு வளர்ச்சியடைந்த குழந்தை போல் செயற்படும். இந்த ரோபோ, தானே எழுந்து நிற்கும்; எந்த பக்கம் வேண்டுமானாலும் திரும்பும்; தவழும். இந்த புதிய ரோபோவில் இரண்டு வீடியோ கமராக்கள் உள்ளன. அதன் காது பகுதியில், இரண்டு மைக்ரோ போன்கள் பொருத்தப்பட்டுள்ளன. உடல் பகுதியில் மோட்டார் மற்றும் உணர்வுக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த ரோபோ குறித்து இதை உருவாக்கிய குழுவின் இயக்குநர் அசடா மினோரு கூறியதாவது:

மனிதர்களுடன் சேர்ந்து வாழும் திறமை பெற்றுள்ள ரோபோக்களை உருவாக்குவதுதான் எங்கள் லட்சியம். அதற்கு தேவை மனிதர்களைப் பற்றி முதலில் புரிந்து கொள்ள வேண்டும். எனவே, மனிதர்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளக் கூடிய ரோபோக்களை தயாரித்துள்ளோம். இந்த குறிப்பட்ட ரோபோ திட்டம், குழந்தைகளை மையமாகக் கொண்டிருக்கும் என்று கூறியுள்ளார்.

பிறந்த குழந்தை ரோபோவைத் தவிர, குழந்தைகள் ரோபோக்களும் இந்த ஆராய்ச்சியில் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த ரோபோக்கள், மனிதர்களின் பேச்சைப் புரிந்து கொள்ளும்; பொருள்களை அடையாளம் காணும். பின்னர் அதற்கு ஏற்றாற் போல் பதிலளிக்கும். கின்டி என்ற இன்னொரு ரோபோவையும் இந்த பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது. ஐந்து வயது குழந்தை போல் தோற்றமளிக்கும் இந்த ரோபோ, முகத்தில் பலவித உணர்ச்சிகளை வெளிப்படுத்தும். மனித வளர்ச்சியை ஆராய்வதற்காக இந்த வகை ரோபோக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த ஆராய்ச்சி வெற்றி பெற இன்னும் பல ஆண்டுகள் ஆகும். எனினும், மனித இன வளர்ச்சி மர்மத்திற்கு இதுபோன்ற ரோபோக்கள் மூலம் விடை கிடைக்குமா என்பது கேள்விக்குறிதான்! (நன்றி : தொழில்நுட்ப இணையம்)

# மனிதன் உருவாக்கிய அதிசயம்



மவுண்ட் ரஷ்மோ அமெரிக்காவிலுள்ள நினைவுச் சின்னம்

அமெரிக்காவிலுள்ள மவுண்ட் ரஷ்மோ தேசிய நினைவுச் சின்னம் 1925 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. பின்னர் 1927 ஆம் ஆண்டு நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. 1278 ஏக்கர் பரப்பளவு கொண்ட இச்சின்னம் அமெரிக்காவில் பிளாக் ஹில்ஸ் மலைப் பகுதியில் அமைந்துள்ளது. இச்சின்னத்தில் அமெரிக்காவின் மிகப் பெரும் தலைவர்கள் நால்வரின் முகங்களுடன் கூடிய தலைகள் மலைச்சிகரத்தில் செதுக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவின் புகழ் பூத்த தலைவர்களான வோஷிங்டன், ஜெபர்சன், லிங்கன் மற்றும் தியடோர் ரூஸ்வெல்ட் ஆகியோரின் முகங்களுடன் கூடிய தலைப்பகுதிகள் செதுக்கப்பட்டுள்ளன.

கோடைகாலத்தில் இந்த நினைவுச் சின்னத்தைப் பார்வையிட 20 ஆயிரம் மக்களுக்கு மேல் வருகை தருகிறார்கள்.

இச்சிலைகள் சுமார் 97 கி.மீற்றர் தூரத்துக்கு தெரியக்கூடியதாக உள்ளன.

கட்சன் போர்குளம் என்பவரால் முதன் முதல் வடிவமைக்கப்பட்ட இச்சின்னம் 1941 ஆம் ஆண்டு அவர் மரணமானதால் கைவிடப்பட்டிருந்தது. இதில் மேலும் நுட்பங்களை செதுக்கத் திட்டமிட்டிருந்த அவர் காலமானதைத் தொடர்ந்து அவருடைய புதல்வர் லிங்கன் என்பவர் அதனை அதே ஆண்டில் பூர்த்தி செய்தார். எல்லாமாக இந்நினைவுச்சின்னம் பூர்த்தியாவதற்கு 14 ஆண்டுகள் எடுத்தன என்று தெரியவந்துள்ளது.(ட)

# ஞாபக மறதியை விரட்டும் உருளைக்கிழங்கு



ஞாபக மறதி அடிக்கடி வருகிறதா? வேக வைத்த உருளைக்கிழங்கினை கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு மறுபடி யோசியுங்கள் ஞாபகம் வந்துவிடும்.

சாதாரண மாச்சத்துணவை சாப்பிட்ட பிறகு ஓரிரு மணிகளில் ஞாபக சக்தியைக் கூட்டுவதாக ரொராண்டோ பல்கலைக் கழக ஆராய்ச்சியில் நிரூபித்து உள்ளனர். 60 தொடக்கம் 82 வயது வரை மனிதர்களுக்கு குளூக்கோஸ், பார்லி, உருளைக்கிழங்கு போன்ற உணவினை அளித்து ஆராய்ந்த பொழுது 37 சதவீதம் பார்லி உண்டதனாலும், 32 வீதம் உருளைக்கிழங்கு உண்டதனாலும், 8 சதவீதம் குளூக்கோஸ் உணவு உண்டதாலும் ஞாபகம் கூடியுள்ளது என தெரியவந்துள்ளது.

# உலகின் அதிவேக விரைவுக் கணனி



நொடிக்கு ஒரு பெட்டாஃப்ளாப்ஸ் கணக்கீடுகளை நிகழ்த்தும் அதிவிரைவுக் கணனிகளை உருவாக்கும் ஆய்வில் பல ஆண்டுகளாக ஈடுபட்டு வந்த அமெரிக்க நிறுவனம் தற்போது அதனைச் சாத்தியப்படுத்தியுள்ளது.


கணனி உலகில் நன்கு அறியப்பட்ட நிறுவனமும், நியூ மெக்சிகோவிலிருக்கும் லாஸ் அலமாஸ் தேசிய ஆய்வுச் சாலையும் இணைந்து இந்தக் கணனியை உருவாக்கியுள்ளன. ரோட்ரன்னர் என்று அழைக்கப்படும் இந்தக் கணனி 100 மில்லியன் டொலர் செலவில் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஓர் ஒப்பீட்டிற்காக ப்ளூ ஜீன் அதிவிரைவுக் கணனி அதற்கடுத்த அதிவிரைவுக் கணனியைவிட மும்மடங்கு வேகத்தில் கணக்கீடுகள் செய்ய இயலும்.

தற்போதைக்கு அமெரிக்க அணு ஆற்றல் சோதனைக் கணக்கீடுகளுக்குப் பயன்படுத்தப்பட இருக்கும் இக்கணனி, அது மட்டுமல்லாது கட்டுமானப் பொறியியல், மருத்துவ ஆய்வு, இயற்கை எரிபொருள் உருவாக்கம், எரிபொருளை மிச்சப்படுத்தும் வாகனங்களை வடிவமைத்தல், மருத்துவ சிகிச்சை, மற்றும் நிலத்தடி எரிபொருள் ஆய்வு உள்ளிட்ட பற்பலப் பயன்பாடுகளுக்காகவும் பயன்படுத்தலாம் என்று . தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய உலகின் மிக அதிக ஆற்றல் கொண்ட மடிக்கணனியைப் போல் ஒரு லட்சம் மடங்கு ரோட்ரன்னரின் கணக்கிடும் ஆற்றல் உள்ளது என தெரிவித்துள்ளது. இந்தக் கணனியை உருவாக்க சுமார் 6 ஆண்டுகள் ஆனதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு ட்ரில்லியன் (பத்தாயிரம் கோடி) பின்னக் கணக்கீடுகளை ஒரு கணனி ஒரு நொடியில் செய்ய இயன்றால் அதன் செயற்திறன் கிகாஃப்ளாப் என்றும், ஆயிரம் ட்ரில்லியன் பின்னக் கணக்கீடுகளை ஒரு நொடியில் செய்ய இயன்றால் அதன் செயல் திறன் டெராஃப்ளாப் என்றும் ஒரு மில்லியன் ட்ரில்லியன் பின்னக் கணக்கீடுகளை ஒரு நொடியில் செய்ய இயன்றால் அதன் செயல் திறன் பெட்டாஃப்ளாப் என்றும் அளக்கப்படுகிறது. ரோட்ரன்னரின் 'உயர் கணக்கிடும் திறன் 1.7 பெட்டாஃபளாப்' ஆகும். இந்தியாவிலும் அதிவிரைவுக் கணனிகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேம்பட்டக் கணனியக மையம் உருவாக்கிய அதிவிரைவுக் கணனியின் செயல்திறன் 1005 கிகாஃப்ளாப்கள் என்பது தனித் தகவல்.



# புதன் பொய்கை

# நட்பின் வலி



நட்பின் வலி உன்னைக் காணாத போது
காணத் துடிக்கிறேன்
நேரில் காண்கின்ற போதோ
பிரிவை எண்ணித் துடிக்கிறேன்
என் இதயக் கூட்டுக்குள்
இறக்கை முளைக்கா சின்னக் குஞ்சுபோல்
உன்னை பொத்தி வைத்து காக்கின்றேன்.
அன்பு நெஞ்சத்தின் ஆழத்து வலி
உனக்கு எங்கே தெரியப் போகிறது
உன் இதயம் மட்டும் கல்லாக இருக்கும்போது.

க.சுகந்தினி,
சாவகச்சேரி இந்துக் கல்லூரி 12 $A_3$ (2012)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



சில விடயங்களில் அலைச்சல் இருந்தாலும், கணிசமான ஆதாயம் பெறும் நாள். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதில் அக்கறை காட்டுவீர்கள். பெரிய மனிதர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். வீண் பழிகள் விலகி பாராட்டுக்களைப் பெறுவீர்கள். பயணங்கள் மூலம் நினைத்த காரியங்கள் நல்ல விதமாக நிறைவேறும்.

### இடபம்



சுயநலமாக நடந்து கொள்ளும் சிலரைக் கண்டு எரிச்சல் அடைவீர்கள். உறவினர்கள் சிலருக்கு அவர்கள் கேட்ட பொருள் களை வாங்கிக் கொடுப்பீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள் கள், தின்பண்டங்கள் வாங்குவதில் நாட்டம் செல்லும். வழக்கத் திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். தம்பதியர் இடையே வாக்குவாதம் ஏற்படும்.

### மிதுனம்



எதிர்பார்த்த உதவிகள் மட்டுமின்றி, எதிர்பாராத உதவிகளும் கிடைக்கலாம். மற்றவர்கள் செலவில் சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். குடும்பப் பெரியவர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிப்பீர்கள். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். நல்லது நடக்கும் நாள்.

### கடகம்



சிறிய வேலை ஒன்றுக்காகப் பல முறை அலைய நேரிடலாம். சிலரை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைத்துவிட்டு, அது எப்படியாகுமோ என பயம் கொள்ளலாம். வெளியிடங்களில் சிலர் உங்களின் மனம் நோகும் வகையில் பேசலாம். கலைஞர்கள் வெளியூர் பயணங்கள் செல்லும்சூழ்நிலை உருவாகும். சுபச் செலவு கூடும்.

### சிங்கம்



பல நாள் உழைப்புக்கு பலன் கிடைக்கும் நாள். சோர்வு, சோம்பலை விலக்கி சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். மாமன், மைத்துனர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். கடன் பிரச்சினை ஒன்றைத் தீர்க்கும் சூழ்நிலை உருவாகும். சிக்கலில் தவிக்கும் உறவினர் ஒருவருக்கு உதவி செய்வீர்கள். தாய் வழியில் நல்ல உதவிகள் கிடைக்கலாம்.

### கன்னி



புதிய முயற்சிகளில் வெற்றி பெறும் நாள். குடும்பத்தினருக்குத் தெரியாமல் சில காரியங்களைச் செய்வீர்கள். உடன் பிறப்புக்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். மாற்று மொழி பேசும் நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். விரும்பிய உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும்.

### துலாம்



கையில் இருக்கும் பணத்தைச் செலவழித்து விட்டு பிறரிடம் கைமாத்து வாங்கலாம். பழைய நண்பர் உங்களின் வீடு தேடி வந்து சந்திக்கலாம். பிறரை நம்பி யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். வெளிநாட்டுத் தொடர்புடையவர்கள் நல்ல செய்திகளைக் கேட்கலாம். இரண்டு நாள்களாக தள்ளிவைத்த வேலை ஒன்றை இன்று திடீரென செய்து முடிப்பீர்கள்.

### விருச்சிகம்



ஒருவர் மீதுள்ள கோபத்தை நீங்கள் மற்றொருவரிடம் காட்டலாம். எப்படியும் முடிந்துவிடும் என நினைத்த வேலை ஒன்று முடியாமல் போகலாம். கணவன், மனைவி இடையே சச்சரவுகள் ஏற்படலாம். அரசியல்வாதிகள் சர்ச்சைக்குரிய பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். வீண் பழிகள் வராமல் இருக்க விழிப்போடு செயற்படுவது அவசியம்.

### தனுசு



பல நாள்களாக எதிர்பார்த்த சில வாய்ப்புகள் தேடிவரலாம். நண்பர்கள் வழியில் மனதிற்கு சந்தோஷம் தரும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். வீட்டு உபயோகப் பொருள்கள் வழியில் செலவுகளைச் சந்திக்கலாம். பழைய சம்பவம் ஒன்றை நினைத்துப் பார்த்து, புதிய காரியங்களில் இறங்குவீர்கள். திட்டமிட்ட காரியங்கள் சரியான நேரத்தில் நடக்கும்.

### மகரம்



உறவினர்கள் சிலரின் அன்புக்கு கட்டுப்பட்டு நடக்க நேரிடலாம். முக்கியமான ஒரு வேலையை முடிக்க சிறிது நேரம் காத்திருக்கலாம். குடும்ப உறுப்பினர்களுக்கு தெரியாமல் சிலருக்கு உதவி செய்வீர்கள். நெடுநாள்களாக வரவேண்டிய மிகுதி ஒன்றைத் தந்திரமாகப் பேசி வசூலிப்பீர்கள். மதிப்பு, கௌரவம் மேம்படும்.

### கும்பம்



மற்றவர்களுக்குக் கிடைத்த வாய்ப்பு ஒன்று உங்களுக்குக் கிடைக்கவில்லையே என வருத்தம் அடைவீர்கள். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். உங்களிடம் பேச விரும்பும் ஒருவரிடம் நீங்கள் பேச விரும்பாமல் தவிர்க்கலாம். நண்பர்கள் உங்களிடம் தங்களின் சொந்த விடயங்களைச் சொல்லலாம். வயிறு, வாயு உபாதைகளைச் சந்திக்கலாம்.

### மீனம்



குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். எந்த விடயத்திலும் குழப்பம் இல்லாமல் தெளிவான முடிவு எடுப்பீர்கள். சக ஊழியர்களுடன் தொழில் ரீதியான விடயங்களைப் பற்றி ஆலோசனை செய்வீர்கள். அயலாரின் அன்புத் தொல்லைகளுக்கு ஆள்படலாம். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## ஆறுமுகம் வினாசித்தம்பி (தளையசிங்கம்)

(ஓய்வுபெற்ற முகாமையாளர், மக்கள் வங்கி)

மண்ணில் 03.11.1934 — விண்ணில் 20.08.2009

திதி: அமாவாசை

**இதயத் துடிப்பினிலே......**

விழி நீர் ஓயவில்லை ஓராண்டு சென்றதுவோ!
கண்முன்னே நடப்பதுபோல் நினைவுகள் வாட்டுகின்றன
சிறு துரும்பெடுக்க வேனும் துணையிங்கு எமக்கில்லை
செயல் வீரன் தனையிழந்து செய்வதறியா நிற்கின்றோம்.
ஓய்வில்லா கடும் உழைப்பின்
பயனிழந்து சென்றதேனோ?
பாதையில் நான் நடந்தறியேன்
என்ரதம் சென்றதெங்கோ?
என் துணிவு ஆற்றலெல்லாம்
உம்மோடே சென்றதுவோ?
துணையின்றி உம்பிரிவால்
நடைப்பிணம் போல் நிற்கின்றேன்.
பூப்போன்று என்னை என்
செல்வங்கள் பார்த்தாலும்
என்மனப்பாரம் இறக்கிவைக்க முடியவில்லை
நாடோறும் உம் செல்வங்கள் உமக்கு
மலர்வைத்து உம் ஆசி பெற்று செல்கின்றனர்
உம் செல்லக்குட்டிகளும்
உமக்கு பூவைத்து வணங்குகின்றனர்
உம் பெருமை பார்க்கவன்றோ
எனைவிட்டு சென்று விட்டீர்
என்றும் உம் பிள்ளைகளுக்காய்
இறைவனிடம் துணைவேண்டி இறைஞ்சிடுவீர்.

''தேவி இல்லம்''
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசுமோட்டையில் சிறப்புப் பயிற்சிப்பட்டறை
# மாதர் சங்க அங்கத்தவர்கள் பயன்பெற்றனர்

கிளிநொச்சி செப்.8

சமூகம்சார் அமைப்புகளை வலுப்படுத்தும் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிப்பட்டறை ஒன்று முரசுமோட்டை பொது நோக்கு மண்டபத்தில் 4ஆம் திகதி நடைபெற்றது.

மேற்படி பயிற்சிப் பட்டறையில் இப்பகுதியிலுள்ள 7 மாதர் சங்கங்களைச் சேர்ந்த 40 அங்கத்தவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். கிராமிய நிறுவனங்களில் முகாமைப்படுத்துவதற்கான முகாமைத்திறன் தொடர்பாக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரனும், தலைமைத்துவப் பண்பும் விருத்தி ஆக்குவதற்கான அடிப்படை தொடர்பில் கிளிநொச்சி செயலக திட்டமிடல் பணிப்பாளர் திரு.அ.மோகனபவனும், கணக்கு வைப்பு முறையும் ஆவணங்களைப் பேணுதலும் தொடர்பாக கிளிநொச்சி செயலக பிரதம கணக்காளர் ஏ.ஜெயராஜும், கிராம அபிவிருத்தியும் வளங்களைப் பயன் படுத்தலும் தொடர்பாக கிளிநொச்சி செயலக உதவித் திட்டப்பணிப்பாளர் எஸ்.கௌரிநாதனும் சிறப்பு விரிவுரைகளை நிகழ்த் தினார்கள்.

பயிற்சிப்பட்டறை மாலை 5 மணிக்கு நிறைவு பெற்றது.

(க)

# திருவையாறுப் பகுதியில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்

கிளிநொச்சி,செப்.8

கிளிநொச்சி வைத்திய அதிகாரி பணிமனை, கிளிநொச்சி பிரதேச சபை ஆகியவற்றின் ஒத்துழைப்புடனும், கிராம சேவையாளர்களின் உதவியுடனும் மாபெரும் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணி திருவையாறு முதலாம், மூன்றாம் பகுதிகளில் நேற்று நடைபெற்றது.

அத்துடன் வைத்திய அதிகாரி பணிமனையில் வெளிக்கள உத்தியோகத்தர்கள் கிராமங்கள் தோறும் வீடு வீடாகச் சென்று டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.

டெங்கு நோய் பரவக் கூடிய நுளம்புகள் உற்பத்தியாகும் வகையில் இருந்து இளநீர் கோம்பைகள், பிளாஸ்ரிக் பொருள்கள் என்பவற்றை கரைச்சி பிரதேச சபையின் ஊழியர்கள் அகற்றினார்கள். இதில் அந்தக் கிராம மக்களும் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

(த-440)

# மன்னாரில் மழையின்மையால் காலபோக விவசாயம் பாதிப்பு

மன்னார்,செப்.8

மன்னாரில் இம்முறை காலபோக விவசாயம் எதிர்பார்த்த அளவு வெற்றியளிக்காது என மன்னார் விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

முப்பது வருட யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் இவ்வாண்டு பாரிய நெல் அறுவடையை எதிர்பார்த்து மன்னார் விவசாயிகள் ஆவலுடன் காத்திருந்தனர். ஆயினும் இன்று வரையில் பருவமழை ஆரம்பிக்காமையினால் இந்த எண்ணம் பொய்த்து விடுமோவென இவர்கள் அஞ்சுகின்றனர்.

ஒரு காலத்தில் மன்னார் மாவட்டத்தில் தலா 40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் வேளாண்மையை மன்னார் விவசாயிகள் மேற்கொண்டு வந்தனர். ஒவ்வொரு விவசாய அறுவடையின் பின்னரும் இவர்கள் பெரும் வருமானத்தை ஈட்டி வந்தனர்.

இன்று இவர்கள் அனைவரும் வீடு வளவுகள் சொத்துக்கள் இழந்து வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

(க-80)

# நூலகக் கட்டடம் அமைக்கக் கோரிக்கை

தர்மபுரம்,செப்.8

கிளிநொச்சி பிரதேசசபையின் கீழ் இயங்கும் முரசுமோட்டை உபஅலுவலகத்தின் நூலகத்திற்குத் தனியான கட்டட வசதிகள் இல்லாததால் வாசகர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகக் கூறப்படுகின்றது.

இந்த நூலகத்தில் பத்திரிகைகள், நூல்கள் என்பன வைக்கப்பட்டு வாசகர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் தனியான கட்டட வசதி செய்து தரப்படாமையால் சிரமங்கள் ஏற்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். முன்பிருந்த நூலகக் கட்டடம் பாவிக்க முடியாத நிலையில் சேதமடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டியது உரியவர்களின் கடமையென இந்தப் பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

(க-440)

# மருதப்பு வீதி ஏறு பாலம் புனரமைக்கப்படவில்லை

கிளிநொச்சி,செப்.8

கிளிநொச்சி ஜெயந்தி நகரையும், கணேசபுரத்தையும் இணைக்கும் மருதப்பு வீதியில் அமைந்துள்ள சிமெந்தால் அமைக்கப்பட்டுள்ள ஏறுபாலம் கடந்த பத்து ஆண்டுகளாக புனரமைக்கப்படவில்லை. இதனூடாகவே குருகுலம் சிறுவர் இல்லப்பகுதிக்கும் பாடசாலைக்கும் மாணவர்கள் சென்று வருகின்றனர்.

இந்தப் பாலத்தின் அடிப்பகுதியில் அரிப்பு ஏற்பட்டுள்ளதால் இதன் ஒரு பகுதி கீழிறங்கியுள்ளது. தற்போது இந்தப் பாலத்தினூடாக கால் நடையாகச் செல்வோரும், சைக்கிளில் செல்வோரும் மட்டுமே பயணிக்க முடிகின்றது. வாகனங்கள் எதுவும் இதனூடாகச் செல்ல முடியாத நிலையுள்ளது.

இது தொடர்பாகப் பொதுமக்களால் பலமுறை உரியவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்ட போதும் பலன் எதுவும் கிடைக்கவில்லை. மக்கள் மீள் குடியேறியுள்ள நிலையில் இதனைப் புனரமைக்க சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோருகின்றனர். (க-405)

# கிளிநொச்சி இராணுவ முகாம் புனரமைக்கப்பட்டுத் திறந்துவைப்பு

கிளிநொச்சி,செப்.8

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தின் அருகே இயங்கி வந்த 571 ஆவது பிரிகேட் இராணுவ முகாம் புனரமைக்கப்பட்டு கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ் வைபவத்தில் பிரதம அதீதியாக இராணுவத் தளபதி ஜகத் ஜெயசூரிய கலந்து கொண்டு இராணுவ முகாமினையும் அதனோடு இணைந்த பொது மக்கள் தொடர்பு அலுவலகத்தினையும், பொது நூலகத்தினையும் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட இராணுவத் தளபதி எல்.டபிள்யு.சி.சி.பி. இராஜகுரு வும் மற்றும் இராணுவ உயர் அதிகாரி களும் கலந்துகொண்டனர்.

இந்த இராணுவ முகாமும் பொதுமக்கள் தொடர்பு அலுவலகமும் பொதுநூலகமும் குறுகிய காலத்தில் இராணுவத்தினரால் புனரமைக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-405)

# பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மீள இயங்கும் முன்பள்ளிகள்

யாழ்ப்பாணம்,செப்.8

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குரிய 11 முன்பள்ளி பாலர் பாடசாலைகள் தற்போது இயங்கி வருகின்றன. மீள் குடியமர்த்தப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பிரதாபன் புலோப்பளை முன்பள்ளி, புலோப்பளை கிழக்கு சென்பீற்றர்ஸ் முன்பள்ளி, புலோப்பளை மேற்கு சரஸ்வதி முன்பள்ளி, பளை நகரம் அத்திராயன் முன்பள்ளி, வண்ணாங்கேணி சரஸ்வதி முன்பள்ளி, சோரன்பற்று கிருஸ்ணா முன்பள்ளி, நாமகள் முன்பள்ளி, மாசார் பேராலை கீர்த்தி முன்பள்ளி, கரந்தாய் வசந்த நிலா முன்பள்ளி, தர்மக்கேணி ஸ்ரீ விநாயகர் முன்பள்ளி, முருகந்தநகர் தவக்குமார் முன்பள்ளி, சின்னத்தாளையடி சுகந்தன் முன்பள்ளி, முள்ளையடி விநாயகர் முன்பள்ளி ஆகிய 13 முன்பள்ளிகளில் 11 முன்பள்ளிகளே திருத்தி அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

இவற்றின் திருத்தப் பணிகளுக்காக 5 லட்சம் நிதி பிரமான நன்கொடை நிதியாக வழங்கப்பட்டுள்ளது. பாடசாலைகளுக்கு தேவையான தளபாடம், புத்தகங்கள் போன்றன கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. ஏனைய முன்பள்ளிகளுக்கான திருத்தப்பணிகளும் மேற்கொள்ளப்படுமென விசேட ஆணையாளரும் பிரதேசசபை செயலாளருமான சி.சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார். (க-315-313)

# பெற்றோரை இழந்த 17 மாணவர்களுக்கு தொலைத் தொடர்பு ஊழியர் சங்கம் உதவி

கிளிநொச்சி,செப்.8

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பெற்றோரை இழந்த 17 மாணவர்களுக்கு அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இலங்கை தொலைத் தொடர்பு சேவை ஊழியர் சங்கத்தினரால் தலா 25,000 ரூபா வீதம் அவர்களது பெயரிலான வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதில் இறுதி யுத்தத்தின்போது தாய், தந்தையரை இழந்த கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 12 வயதுக்குட்பட்ட 12 மாணவர்களும், கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 5 மாணவர்களும் உள்ளடங்குவர்.

இந்நிதியினை வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் இலங்கை தொலைத்தொடர்பு நிலைய கொழும்புத் தலைமை அலுவலகத்தில் இடம் பெற்றது. இதில் வடக்கு, கிழக்கு மத்திய மாகாணங்களைச் சேர்ந்த 100 பேருக்கு இவ்வாறான உதவிகள் வழங்கப்பட்டன. இம்மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் அன்பளிப்புச் செய்யப்பட்டதுடன் தென்பகுதியில் உள்ள ஆலயங்கள், பொழுது போக்கு மையங்கள் என்பவற்றுக்கும் இம்மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(க-405)




# பெண்களுக்கு சுகாதாரப் பொதிகள்

கிளிநொச்சி,செப்.8

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கல்மடுநகர் கிராம அலுவலர் பிரிவில் மீள் குடியேறிய மக்களில் 18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்ட பெண்களுக்கான சுகாதாரப் பொதிகள் LISA நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளன.

இரு வாரங்களுக்கு முன்னர் ஒரு தொகுதி பெண்களுக்கு இப்பொதி வழங்கப்பட்டது. தொடர்ந்து இந்த வாரமும் ஏனையோருக்கும் இப்பொதி வழங்கப்படவுள்ளது.

(க-405)



கனடாவில் வாழும் தமிழர்கள் சிலரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட கற்றல் உபகரணங்கள் வன்னேரிக்குளம் மகா வித்தியாலய மாணவர்களுக்கு வழங்கப்படும் நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பாடசாலை அதிபர் எஸ்.குமரகுருபரன் உரையாற்றுவதை முதலாவது படத்திலும், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும், நாடாளுமன்ற உறுப்பினரும், பாடசாலை அதிபரும் இணைந்து கற்றல் உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்குவதை மூன்றாவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்: கிளிநொச்சி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்
பெருமையுடன் வழங்கும்

## அன்னையின் மடியில் 2010

(யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர்களின்
முதலாவது சர்வதேச மாநாடு)



**காலம்**
12.09.2010
ஞாயிற்றுக்கிழமை

**நேரம்**
காலை 9.00

**இடம்**
யாழ்.இந்துக்கல்லூரி
குமாரசுவாமி மண்டபம்

**பதிவுகளுக்கு**
யோகேஸ்
0773 946024
அருள்
0774 447646
தவா
0777 563213

பழைய மாணவர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யாழ்.இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

ஊடக அனுசரணை :
உதயன்
தமிழ் தேசிய நாளிதழ்
Uthayan - National Tamil daily


## பெயர் மாற்றம்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம் என்னும் முகவரியில் வசிக்கும் தங்கராஜா பிரதிஷ்டா என்னும் எனது பெயரை இன்றிலிருந்து தங்கராஜா பிரதீபா என பெயர்மாற்றம் செய்து சகல ஆவணங்களிலும் மாற்றம் செய்துள்ளேன் என அறியத்தருகின்றேன்.

பிரதீபா.

## வீடு காணி விற்பனை

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் இலக்கம் 330இல் அமைந்துள்ள வீடும் காணியும் ஏற்கனவே அறிவித்த விலையைவிட விலை குறைத்து உடனடியாக விற்பனைக்குள்ளது.

தொடர்பு:-0774709890

## தவறிவிட்டது

குரும்பசிட்டி, தெல்லிப்பழை என்னும் முகவரியுடைய தனலட்சுமி காளிதாசன் என்பவரது தேசிய அடையாள அட்டை (527680247V) மற்றும் விசேட அடையாள அட்டை ஆகியன மல்லாகத்திற்கும் தெல்லிப்பழைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்திற்கு அல்லது தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

துர்க்காபுரம், தெல்லிப்பழை. 0716818521

## CCHS-AHAVOLI

St.Patricks Road, Jaffna.
**English Course Leading to Diploma**
Level III (Intermediate)

Batch VII Starts on 4th October 2010
Those not applied already & those sat A/L may apply on available forms.
Closing date:- 18.09.2010
Interview:- 22.09.2010 at 9.00am
For further information please contact us.
Tel.No:- 0212222856

*Registrar.*

## சுன்னாகம் பல.நோ.கூ.சங்கம் (வ-து) சுன்னாகம்

எமது சங்கத்தில் துண்டு அடிப்படையில் வகுப்புத் தொழிலாளிகள் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

தகைமை:- 5ஆம் வகுப்புச் சித்தியும், நல்ல தேகாரோக்கியமும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
வயது:- 18-45 வரை
விண்ணப்ப முடிவு திகதி:- 15.09.2010

08.09.2010 பொதுமுகாமையாளர்.

## விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும் உயர்தர விதிமுறைகளுக்கு அமைந்த கோமில் கலசங்கள், தீபங்கள், குத்துவிளக்குகள், சரவிளக்குகள், கெண்டிவகை, பட்டுக் குடைகள், ஆலவட்டக் குடைகள், கும்பக் குடைகள், திருவாசிகள், வெண்சாமரை, சோட உபசார செற்றுகள், கும்பதீபங்கள், பஞ்சாலாத்திகள், அடுக்குத் தீபங்கள் இன்னும் பல தீபங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**பிள்ளையார் மெட்டல்**
இல.64, வைரவர் கோயில் வீதி,
வைரவப் புளியங்குளம், வவுனியா.
தொ.பே: 024 222 2097
024 222 0129

## விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5 கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:- **சுப்பிரமணியம் சரவணபவன்**
சிற்ப ஆசாரி 14BA, தம்பி லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி-021 490 0085
077 411 2049

## விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5 கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை மற்றும் கோயில் பொருள்கள், தீப வகைகள், பட்டுக் குடை, திருவாசிகள் என்பனவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:- **சி.சிவானந்தம்**
கந்தசாமி கோயில் முன்பாக
சுபாஜினி ரேட்டேர்ஸ்
A.09 வீதி, கிளிநொச்சி.
தொ.பே:- 0779779726

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**முத்துப்பிள்ளை கெசபதி**

திதி: ஆவணி பூர்வபக்க பிரதமை

அன்னை மடியில்
12.10.1929
ஆண்டவன் அடியில்
20.08.2009

**ஆண்டொன்று சென்றாலும்**
**அழியாதம்மா உம் நினைவு.**

பிரான்ஸ்
தொ.பே: 0033148490539 கெ. பாஸ்கரன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியன் எவ்.எம். குறுஞ்செய்திச் சேவை டயலொக் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்

கொழும்பு, செப். 8

ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தா பனத்தில் அங்கம் வகிக்கின்ற சூரியன் எவ்.எம்., ஹிரு எவ்.எம். மற்றும் கோல்ட் எவ்.எம். ஆகியன இணைந்து, மூன்று மொழிகளிலுமான கையடக்க தொலைபேசி ஊடான குறுஞ்செய்திச் சேவையை ஆரம்பித்துள்ளது.

இதுதொடர்பான உடன்படிக்கை, ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரோனேர் சில்வாவுக்கும் டயலோக் ஆசியாட்டா கூட்டுத்தாபனத்தின் பிரதான வர்த்த அதிகாரியும் டயலொக் ரி.வியின் நிறைவேற்று அதிகாரியுமான நுசாத் பெரேராவுக்கும் இடையில் கடந்த 2 ஆம் திகதி வியாழக்கிழமை செய்துக்கொள்ளப்பட்டது.

தமிழ், சிங்கள மற்றும் ஆங்கிலம் என மூன்று மொழிகளிலும் டயலொக் கையடக்கத் தொலைபேசியின் ஊடாக அவசர செய்திகளை மக்களின் கைகளுக்கு கிடைக்கச்செய்யும் வகையில் இந்த உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது.

சூரியன் எவ்.எம். செய்திகளை தமது கையடக்கத் தொலைபேசியில் பெற்றுக் கொள்வதற்கு, Sooriyan என டைப் செய்து 678 என்ற இலக்கத்துக்கு அனுப்ப வேண்டும். அத்துடன் சிங்கள அவரச செய்திகளை பெற்றுக் கொள்வதற்கு Hiru எனவும், ஆங்கிலச் செய்திகளைப் பெற்றுக் கொள்வதற்கு Gold எனவும் டைப் செய்து, 678 என்ற இலக்கத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

உள்நாட்டுச் செய்திகள் மாத்திரமன்றி, வெளிநாட்டு வர்த்தகச் செய்திகள், விளையாட்டுச் செய்திகள் என அனைத்து செய்திகளையும் ஆசிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் இந்தக் குறுஞ்செய்திச் சேவை ஊடாக பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# விமலும் அரசுக்கு ஆதரவு

கொழும்பு, செப்.8

அரசமைப்புத் திருத்தத்துக்கு தேசிய சுதந்திர முன்னணி ஆதரவு வழங்கும் என்று அதன் தலைவர் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பு பத்தரமுல்லையில் உள்ள தேசிய சுதந்திர முன்னணி தலைமையகத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு:-

இந்த நாட்டில் ஜனாதிபதித் தேர்தலில் பல தடவைகள் போட்டியிட்டுத் தோற்கடிக்கப்படுபவர் எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியும் என்றால் மக்களின் அமோக ஆதரவைப் பெற்றவர்- இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக வந்தவர் - இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதியாக வருவதற்கு இந்த அரசமைப்பில் இடமில்லை.

இந்த நாட்டில் மக்களின் அமோக ஆதரவு பெற்றவர் இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதியாக வருவதற்கே இந்தச் சட்டதிருத்தம் கொண்டுவரப்படுகின்றது. இவர் இரண்டு அல்லது மூன்று தடவைகள் ஜனாதிபதியாக வருவதைத் தேர்தலில் மக்கள் தீர்மானிக்கட்டும். எதிர்க் கட்சியினர் கூறுவது போன்று ஜனாதிபதி சர்வாதிகாரி ஆவதற்குத் திட்டமிடுகின்றார் என்று கூறப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஜனாதிபதி ஒவ்வொரு மூன்று மாதமும் நாடாளுமன்றத்துக்கு சமுகமளிப்பது மிகவும் வரவேற்கக் கூடியது. இதனால் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதியிடம் தத்தமது பிரச்சினைகளைக் கூற முடியும்.-

- இவ்வாறு அவர் சொன்னார். (சி)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,செப்.8

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி இளங்கலைஞர் மன்றமும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானமும் இணைந்து துர்க்கா மணிமண்டபத்தில் நடத்தும் இசையரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு என்.வி.எம்.நவரத்தினம், என்.பரந்தாமன் ஆகியோரின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும்.

எஸ்.கோபிதாஸ் வயலினும், எஸ்.மகேந்திரன் மிருதங்கமும், என்.நந்தகுமார் முகர்சிங்கும், சதாவேல்மாறன் கடமும் வாசிப்பர். (201)

* * *

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாக்காலத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் சமயச் சொற் பொழிவுகள் வரிசையில் இன்று பி.ப 3 மணிக்கு 'மனிதனும் ஆன்மீகமும்' என்னும் தலைப்பில் எஸ்.கே.என்.தவராசாவின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை, வட்டுக்கோட்டை கண்ணகி அம்பாள் அறநெறிப்பாடசாலை, பெரியவிளான் வட கேசரி பிள்ளையார் அற நெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெறும். (204)

* * *

நல்லைக் கந்தன் ஆலய உற்சவத்தையொட்டி நல்லூர் சைவ மகாசபை நல்லை திருஞானசம்பந்த குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் நடத்தும் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு கதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா 'கர்ணன்' என்னும் தலைப்பில் உரையாற்றுவார். (204)

* * *

நல்லூர்க்கந்தன் ஆலய தீர்த்தத் திருவிழாவான இன்று புதன்கிழமை சுவாமி வீதி வலம் வரும்போது அகில இலங்கை திருமுறை மன்றத்தினரின் திருமுறைப் பண்ணிசை இடம் பெறவுள்ளது.

ஒவ்வொருவருடமும் இடம்பெறும் இப் பஜனை நிகழ்வில் நாளை காலை 7மணிக்கு அகில இலங்கை திருமுறைமன்றத்தில் பண்ணிசைப் பயிற்சி பெறும்முதலாம் ஆண்டு மாணவர்கள் நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (16)






# நல்லூர் பெருந்திருவிழாக் கால சிறப்பிதழ்

## தீர்த்தமாடி வா திருமுருகா

தீர்த்தமாட வரும் திருமுருகா
தீர்த்திடய்யா எம்துயரை நிரந்தரமாய்
பார்த்தசாரதியின் மருமகனே - உனக்கு
கேட்கிறதா எம் துயரக்குரல்
ஆறுபடை வீட்டோடு நீயிருக்க
ஆறுதலாய் ஒரு வீடு தானும் இன்றி
அனுதினமும் அவலப்படும் எம் நிலைமாற்ற
தீர்த்தமாடி வா திருமுருகா.

புலோலியூர் வேல்நந்தன்.

## தீர்த்தமாடி திருவீதி வலம் வருகிறான்

அஞ்சேலென அபயந் தந்து
காத்திடவே தீர்த்தமாடி
இன்று திருமுருகன் வருகிறான்
தஞ்சமென வருமடியார்களின்
அஞ்சுதலை நீக்கி
ஆனந்த வாழ்வு அளித்திட
தீர்த்தமாடி இன்று
வேலன் வருகிறான்
ஐந்து முகம் தோன்ற;
பஞ்சம் பிணியாகவும்
பட்டெனப் பறந்தோட
குஞ்சரி சமேதராக
குறிஞ்சிக் கடவுளாம்
நல்லைக் குமரன் தீர்த்தமாடி
இன்று திருவீதி வலம் வருகிறான்

செ.ரவிசாந்,
குப்பிளான்.

## தீர்த்தமாடிக் காட்சிதர வரும்வேளை!

கலியுகத்தின் கனிந்த நிலைபோல் காட்சிகள்
கண்ணீரில் மனிதர்கள் இன்னல்தரு வன்செயல்கள்
அழிவுகள், அவலங்கள், அட்டூழியங்கள் எத்தனையோ
ஆயிரமாய் நிறைந்ததை ஆறுமுகா அறிவாயே
வழிபடும் பக்தர்கள் விடியற் காலையிலே
வரிசையாய் வருகின்றார் வடிவேலாவுன் அருள் வேண்ட
களிப்போடு தீர்த்தமாடிக் காட்சிதர வரும்வேளை
கந்தாவுனை வேண்டுகின்றார் தந்திடுவாய் அமைதியென்று

குளப்பிட்டி.க.அருமைநாயகம்

## ஆறுதல் அளிப்பாய் ஆறுமுருகா

உளமுருகி உன் அடியே சரண மெனத்
தொழுகின்றேன்
உலகு உய்ய உதித்தவனே உமை பாலா
அளப்பரிய ஆற்றல் மிகு வேலதனைக் கொண்டவனே
இழப்புகள் பலகண்டு நொந்து வருந்துகின்ற
இதயம்யாவு மிங்கு ஆறுதல் அடைந்திடச்
செய்
வளமுடை வாழ்வுதனை வையகமதனில்
பெற்றிடவே
வள்ளலே அருள் புரிவாயே நல்லையம்பதி
யானே.

ச.பகீரதன்
யா/சன்மார்க்க வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

## நல்லூர்க் கந்தன் கண் திறப்பான்

ஞாயிறு இங்கே தூங்கவில்லை - அலை
நடனக் கடலும் தூங்கில்லை
பாயும் காற்றும் தூங்கவில்லை - உணவைப்
படைக்கும் நிலமும் தூங்கவில்லை
ஆயினும் மனிதன் தூங்குகின்றான் - மெய்
அறிவொளி இழந்து ஏங்குகின்றான்
காயாய் வெம்புவோன் கனியாக - நல்லூர்க்
கந்தன் விழிப்பான் நம்மினம் காக்க

செ.பரமநாதன்
மண்டைதீவு - 2.


## எம் துயர் போக்கியருள்வாய்

நல்லை முருகா உன் முல்லைச் சிரிப்பாலே
தொல்லை வினை போக்கிடையா - என் தெய்வா
எல்லை இல்லாத ஆனந்தம் தந்திடும்
கொள்ளை அழகா முருகா வடிவேல் கந்தா
எம்மை உருக்குமுன் கருணை விழிகள் - உன்
திரு அருள் பொழிந்திட
திருத் தீர்த்தமாடி வரும் நல்லை முருகா - உன்
அடியார்கள் துயர் போக்கி அருள் தருவாய்.

வி.கே.கே.மகிந்தன்
நயினை - 07.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவலைகள்



சண்முகநாதன்
அருள்நங்கையின்
ஏக புத்திரன் அன்புச் செல்வன்

## சந்தூதன்


| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07.02.2000 | 08.09.2009 |

அருமை மகனே! ஆருயிர் புத்திரனே!
உம்மை பிரிந்து ஆண்டு ஒன்று சென்றதய்யா
எத்தனை ஆண்டு சென்றாலும் உன் பிரிவின்
வேதனையை தாங்கத்தான் முடியுமாடா?
ஒன்பது ஆண்டு காலத்தில் எங்கள் உள்ளத்தை
மகிழ்ச்சியாய் வைத்தாய் ஐயா! அதே மகிழ்ச்சி
எங்கள் உயிர் உள்ளவரை காணப்போவதில்லையடா!!
நீ வாழ்ந்த காலத்தில் எதைக் கேட்டாலும்
மறுக்காமல் வாங்கித் தந்தோமடா
எங்களுடன் மட்டுமல்ல உற்றார், உறவினர்
ஏனையோர்களிடமும் அன்பாகவும் பண்பாகவும்
பழகிவருவாய் ஐயா! இப்போ எல்லோரையும்
கண் கலங்க வைத்து தனிவழியே சென்றாய் ஐயா
'ஆத்மா அழிவதில்லை' என்ற தத்துவம் அறிந்ததனால்
உன் ஆத்மாவை தேடி நீ துயில் கொள்ளும் இல்லத்திற்கு
தினந்தோறும் இரவு பகல் இன்றி சென்று
வருகின்றோமையா எங்களது ஆலயமும் தெய்வமும்
நீ துயில் கொள்ளும் இடம் ஐயா!
நீ பிரிந்தவேளை ஐயோ என்று வாய்விட்டு அலறித்துடித்த
அதே துடிப்பு இப்போ மனதிற்குள் நடக்குதடா
நீ தெய்வம் என்பதனால் எங்களுக்கு அருள் அளிக்க
எண்ணினாயே! அதனால் எம் வாழ்வில் பல உயர்வுகளை
தந்து கொண்டிருக்கின்றாய். என்னதான் கிடைத்தாலும்
எதுதான் வந்தாலும் நீ இல்லா வாழ்வெமக்கு
கண்ணீருடன் கூடிய கசப்பான வாழ்க்கைதான்
செல்லமகனே! உன்னை சீராட்டும் பாக்கியத்தை இழந்து
துடிக்கின்றோம். ஆனாலும் எம்மோடு நீ வாழ்ந்த அந்த
காலத்தின் இனிப்பான நினைவோடு
கடமைக்காய் வாழ்கின்றோம்.

பெற்றோர்:
ம.சண்முகநாதன்,
ச.அருள்நங்கை.

லக்ஸ்மி, சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் திருவண்ணைநகர் ஸ்ரீ கதிரேசன் கோயில் என வழங்கும்

அருள்மிகு ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயில்

புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட பக்ஷ

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

10.09.2010

## பிரதம குருவின் ஆசிச் செய்தி

சீர்பூத்த யாழ்ப்பாண நகரின் வண்ணார்பண்ணைப் பதியுறை



ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுதப் பெருமானின் மஹா கும்பாபிஷேகம் எனது நீண்ட நாள் விருப்பிணை நிறைவு செய்கின்றது.

யாவற்றிற்கும் மூலகாரணமாய் நின்ற மூர்த்தியாம் ஸ்ரீ கதிர்வேலாயுதப் பெருமானின் திருக்கோவில் ஏறத்தாழ மூன்று தசாப்தங்களாக நித்திய நைமித்தியக் குருவாகப் பணியாற்றி முருகனின் பெருங்கருணையைப் எண்ணி எண்ணி ஆனந்தம் கொள்ளாத நாளில்லை எனலாம்.

நாட்டுக் கோட்டை நகரத்தாரால் ஸ்தாபித்து வழிபட்ட ஸ்ரீ கதிரேசன் கோயில் யாழ்.காங்கேசன்துறைப் பெருவீதியில் வலப்புறம் கடையடிப் பிள்ளையார் இடப்புறம் வண்ணை சிவன் கோயிலடி மேற்கில் ஸ்ரீ வில்லூன்றி விநாயகர் கிழக்கே ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் ஸ்ரீ கன்னாதிட்டி காளியம்பாள் நாற்புறமும் திருக்கோயில் சூழ மத்தியில் கிழக்கு நோக்கிய திருக்கோயில் சுந்தர விதானமுடைய செந்தில் ஆண்டவராக இருமருங்கும் வள்ளி தேவசேனா அழகு செய்ய அமர்ந்தருள் செய்கின்ற காட்சி காண்போரை கையெடுத்துக் கும்பிட வைக்கும் மாட்சியுடையது.

இவ்வாலயம் 30 ஆண்டுகளின் பின் திருப்பணித் தவமணி திரு.சி.தியாகராஜா (S.T.R)அவர்கள் தலைமையிலான திருப்பணி நிர்வாக குழுவினரால் சீர் செய்யப்பட்டு இன்று குடமுழுக்கு எனும் பெருஞ்சாந்தி விழாவினை திருக்கோயில் காண்கிறது.

இவ்விழா சிறக்கவும் முருகன் அடியார்கள் சிறப்பான வாழ்வு பெறவும் முருகன் திருவடிகளைப் பிரார்த்தித்து இத்தெய்வீக பணியில் என்னை முன் இருத்திய முருகனின் பெருங்கருணையைப் போற்றி ஆசீர்கள் கூறுகின்றேன்.

*"முருகனே செந்தில் முதல்வனே மாயோன் மருகனே"*

(திருமுருகாற்றுப்படை)

பிரதம குரு

கி.நாராயணக்குருக்கள்

## பெருமைதரும் பழமையான ஆலயங்களில் ஒன்று



அருள்மிகு ஸ்ரீசெந்தில் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். யாழ்ப்பாண நகருக்கு பெருமை தரும் ஆலயங்களில் நீண்ட பழமையான ஆலயமாகும். இவ்வாலயம் வணிகத்துறையில் உயர்நிலை அடைந்த செட்டிமார் பரம்பரையால் உருவாக்கப்பட்டது. இன்று இவ்வாலயம் பல திருப்பணி வேலைகளை நிறைவு செய்து கும்பாபிஷேகம் நடைபெறுவது யாழ்ப்பாண மக்களுக்கு மட்டுமன்றி அனைத்து மக்களுக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிஷேகம் செய்விப்பதும் செய்வதும் பார்த்து அனுபவிப்பதும் புண்ணியத்தின் அடையாளமாகும். இப்புண்ணியத்தை செய்திருக்கும் திருப்பணித் தவமணி எஸ்.ரி.ஆர். பிளிம்ஸ் தியாகராஜாவைப் பாராட்டுகின்றோம். திரு.தியாகராஜா அவர்களை முன்கூட்டியே அறிந்ததால் அவருக்கு 'திருப்பணித் தவமணி' என்ற பட்டத்தை 11 ஆவது பீடாரோகண விழாவின்போது வழங்கி கௌரவித்தார்கள் (1977). கலியுகவரதனாம் முருகப் பெருமான் இவ் ஆலயத்தில் திருச் செந்தூர் முருகப் பெருமானாக மூலஸ்தானத்தில் எழுந்தருளியுள்ளார். இவரை வழிபடும் ஒவ்வொரு அடியவரும் இன்மைக்கும் மறுமைக்கும் புண்ணியத்தை பெறுபவராகும். இக்கும்பாபிஷேகத்தை அனைவரும் தரிசனம் செய்து மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்



## என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே



யாழ்ப்பாணத்தில் திருச்செந்தூர் முருகப் பெருமான் வள்ளி தேவயானை சமேதரராக எழுந்தருளி இருந்து அருள்பாலிக்கும் பெருமானுக்கும் விநாயகர், பழனி ஆண்டவர் ஸ்ரீ தேவி, பூமிதேவி சமேத மகா விஷ்ணு, வயிரப் பெருமானுக்கும் சண்டேஸ்வரருக்கும் மாபெரும் குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) விழாவைக்காண புண்ணியம் செய்த சைவப் பெருமக்களுக்கு இன்று ஒரு பொன்னாள்.

ஏறத்தாழ 130 ஆண்டுகளளவில் யாழ்ப்பாணத்தில் வர்த்தகர்களாக இருந்து தமிழையும் சைவத்தையும் வாழ வைத்த நாட்டுக்கோட்டை நகரத்தார் பரம்பரையினர் இவ்வாலயத்தை நிறுவினர். காலப்போக்கில் இலங்கையில் எங்கும் காணமுடியாத அளவு கருங்கல்லினால் மிகவும் நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் கூடிய கரு அறையும் மகா மண்டபத்தையும் அமைத்து அவர்களின் திட்டப்படி முழுக் கோவிலையும் முடிக்காமல் 1931 ஆம் ஆண்டு மூலவராக வேல் வைத்துச் சிறப்பான கும்பாபிஷேகம் செய்துள்ளனர். அழகான அன்னதான மண்டபமும் அமைத்துச் சிறப்பாக நடத்தி வந்தனர். நாட்டு நிலைமை காரணமாக அவர்கள் தங்கள் ஊருக்கு போய்விட்டார்கள். அதன்பின் ஊர்ப் பெருமக்களின் முறைப்பாட்டை ஏற்ற யாழ். மாவட்ட நீதிமன்றம் 1975 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 18 ஆம் திகதி T.R 144 ஆவது எண் வழக்குப்படி கோயிலுக்குச் சொந்தமான அசைவுள்ள அசைவற்ற ஆதனங்கள் அனைத்தும் கதிர்வேலாயுத சுவாமி அறங்காவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அறங்காவலர் குழுத்தலைவர் கா.சி. தங்கராசா, செயலாளர் சி.செ. சோமசுந்தரம், பொருளாளர் சி. தியாகராசா , T. சோமசுந்தரம் (அட்வக்கேற்) மு.பாலசிங்கம் , பி.எஸ். ஐயர் ஆகியோர் அறங்காவலராக நியமிக்கப்பட்டனர்.

முதலாவது கூட்டத்தில் சி.தியாகராசா, பொருளாளரின் வேண்டுகோளை ஏற்ற சபையினர் தற்பொழுது கருவறையில் உள்ள திருச்செந்தூர் முருகன் அளவு வள்ளி தெய்வயானை சமேத செந்தில் பெருமானையும் மயில் மயூரம், மகாவலிபுரத்தில் கணபதி ஸ்தபதியின் கைவண்ணத்தில் வடிவமைக்கப்பெற்று இங்கு கொண்டு வந்து 15.07.79 சித்தார்த்தி ஆண்டு ஞாயிற்றுக்கிழமை பூர்வபட்சமும் சஷ்டித்திதியும் கூடிய சுபவேளையில் திருக்கேதீஸ்வரம் சிவ ஸ்ரீ சுப்பிரமணியப்பட்டர் பிரதிஷ்டா குருவாகவும் சர்வசாதகம் வேதாகம ஞான பாஸ்கரன் சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள், இணுவில் ஆலய ஸ்தானிகர் கிரியா கலாபமணி சிவஸ்ரீ நாராயணக் குருக்கள் மற்றும் யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான குருமார்களையும் கொண்டு நவகுண்டம் அமைத்து சிறப்பான கும்பாபிஷேகம் (குடமுழுக்கு) நடைபெற்றது. இன்று பிரதம குருவாக சிவஸ்ரீ நாராயணக் குருக்கள் ஆலய பிரதம குரு தலைமையில் சிறப்பான நவகுண்ட கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. அத்துடன் மகாவலிபுரத்தில் இருந்து தருவிக்கப்பட்ட எமது சமயக் குருமார்கள் நால்வருக்கும் சிறப்பான ஆலயம் அமைத்து கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. இதன் பொருட்டு எமது சமயமும் மக்களும் கல்வி, செல்வம் அனைத்தும் கூடிய சுகமான பேரின்ப பெருவாழ்வு பெறவும் நாட்டில் சாந்தி சமாதானம் நிலைத்து சுபீட்சமாக வாழ எல்லாம் வல்ல செந்தில் கதிர்வேலாயுதப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

*தலைவர் திருப்பணித் தவமணி, சி.தியாகராசா S.T.R*

## கும்பாபிஷேகம் நடைபெறுவது பெருமைக்குரிய விஷயம்

ஏறத்தாழ நூற்றிமுப்பது ஆண்டுகளுக்குமுன் இந்தியாவிலிருந்து இங்கு வந்த நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களால் ஸ்தாபிக்கபட்ட இவ்வாலயம் தொண்ணூறு வருடங்களாக மிகவும் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வந்தது. அதன் பின் அவர்கள் தாயகம் சென்றுவிட்டதால் நிர்வாகம் சீர்குலைந்த நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்த சில பெரியோர்களின் முயற்சியினால் ஒரு புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டு மீண்டும் சிறப்பாக இயங்கிவருகிறது. இவ்வருடம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுவது மிகவும் பெருமைக்குரிய விஷயமாகும். இது மிகவும் சிறப்பாக நடைபெறுவதற்கு மிகவும் கடினமாக உழைத்துதவிய இவ்வாலயத்தின் தற்போதைய தலைவராகிய திரு.எஸ். தியாகராசா அவர்களை நாம் மிகவும் பாராட்ட வேண்டும். இந்நிகழ்ச்சிகளில் நேரில் வந்து பங்குபற்றமுடியாமைக்கு நான் மிகவும் வருந்துகிறேன்.

இவ்வாலயம் மென்மேலும் மிகவும் சிறப்பாக நடைபெற்று யாழ்வாசிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கவேண்டுமென எல்லாம் வல்ல கதிர்வேலாயுத சுவாமியை மனமார வேண்டுகிறேன்.

W.S.செந்தில்நாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு

பின்வரும் வேலை ஆள்கள் தேவை
அலுமினிய பொருத்துநர் (Fitter)
அலுமினிய உதவியாளர் (Apprentice)
பெயின்ரர் (Spray painter)
மேற்பார்வையாளர் (Supervisor)
வேலைப் பகுதி களஞ்சியக் காப்பாளர் (Work site Store Keeper)
நேர்முகத் தேர்வு 07.09.2010 - 10.09.2010 வரை
(முற்பகல் 11 மணி - பிற்பகல் 1.30 மணி வரை)
ஹ்ளூலைன்ஸ் Blue lines Interiors
40A, பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி,
யாழ்ப்பாணம். (103025)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
12.06.1987



உதிர்வு
30.08.2008

திதி: அமாவாசை

### கோபிநாத் யுகவர்ணன்

(பழைய மணவன்- செள்.ஜோன்ஸ் கல்லூரி, A/L 2006)

தலை மகனே! யுகவர்ணா!
உம்மைப் பிரிந்து இரண்டாண்டுகளாயினும்
நெஞ்சை விட்டகலா- உமது
நினைவுகளுடன் எக் கணமும்
ஆறாத் துயரில் துவள்கின்றோம்.
இறைவன் திருவடி அடைந்த உமது ஆத்மா
நிலையான நித்திய ஆத்ம சாந்தி பெற
இறைவனை வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

உமது பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, தம்பி,
தங்கை, உறவுகள்.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (102977)

## கழிப்பிட வசதிகளின்றி மக்கள் அவதி

கோப்பாய்,செப்.8

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் ஊரெழு பிர தேசத்தில் அச்சு வேலி பத்தமேனி பாரதிவீதி, சிறுப் பிட்டி மேற்கு ஜன சக்தி கிராமம், வாதர வத்தை ஆகிய பகுதி மக்கள் உரிய கழிப்பிட வசதி யின்றி சிரமப்படுவ தாக தெரிவிக்கப்படு கிறது.

இப்பகுதிகளில் வன்னிப் பிரதேசத்திலிருந்து மீளக் குடியேறிய மக்களும் மற் றும் இப்பிரதேசத்தைச் சேர்ந்த வருமானம் குறைந்த மக்களும் அதிகள வில் வசித்து வருவ தாகத் தெரிவிக்கப் படுகிறது.

இப்பகுதி மக்க ளுக்கு உரிய கழிப் பிட வசதிகளை ஏற்படுத்தி உதவுவதன் மூலம் தொற்று நோய்கள் பரவாமலும், சூழல் பாதிப் புறமாமலும் தவிர்க்கலாம் என தெரிவிக் கப்படுகிறது.

இவ்விடயத்தை தொண்டு நிறுவனங்கள், அமைப்புக்கள் கவனத்தில் எடுத்து உதவி புரிய வேண்டும் என பிரதேச பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(த-72)

## அடுத்த முறை....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடைந்திருக்கிறார்கள். ஏன் யுத்தம் நிகழ்ந்தது? இங்கு என்ன நடந்தது ?என்பதெல்லாம் எனக்குத் தெரியாவிட்டாலும் எல்லோருக்குமே அமைதியென்ற ஒன்றுதான் தேவையென்பதே எனது கருத்து. இப்போதிருப்பதைப் போன்ற சூழல் நிலவுமானால் ஜப்பானைப் போலவே துரித கதியில் யாழ்ப்பாணமும் நிமிர முடியும். ஆனாலும் அந்த வளர்ச்சி யாழ்ப்பாணத்துக்கென்றே தனித்துவமாக இருக்கின்ற கலாசாரம், பண்பாடு என்பவற்றை பேணிய வளர்ச்சியாக இருக்க வேண்டும். அதைவிடுத்து பண்பாட்டையும் கலாசாரத்தையும் தொலைத்துவிட்டு தனியே மேலைத்தேய நாகரிகத்தை மட்டுமே பின்பற்றுவது வளர்ச்சியாக இருக்கமுடியாது. நான் அடுத்த முறை யாழ்ப்பாணத்திற்கு வரும்போது நிச்சயமாக தமது பண்பாட்டினடியாக யாழ். மக்கள் மகோன்னத நிலையை அடைந்திருப்பார்கள்; அடைய வேண்டும் என்பதே எனது இப்போதைய பிரார்த்தனை. -என்று தன்னுடைய தூக்கத்தையும் தியாகம் செய்துவிட்டு எங்களோடு உரையாடி முடித்தார் நித்தியஸ்ரீ மகாதேவன். ✱


# VISA - வீசா
Consultancy Service

UK, USA, CANADA, AUSTRALIA,
NEW ZEALAND, SWITZERLAND,
FRANCE, GERMANY, NORWAY, DENMARK,

Visit / Tourist, Business, Family
Students, Migration, Medical Visas

Call : 0776 209 887

SIC, 734, Hospital Road, Jaffna.


## ஜயோதா



உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 679 திகதி 06-09-2010

வெற்றி எண்கள்

09 24 25 49 S

ஜக்பொட் பரிசு ரு. 13,037,170/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 13,037,170/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 15 | 2,000/= | 30,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 415 | 1,000/= | 415,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 690 | 1,000/= | 690,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 16891 | 60/= | 1,013,460/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | •7995 | 40/= | 319,800/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 198107 | 20/= | 3,962,140/= |
| | | மொத்தம் | ரு. 7,230,400/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 600351082-9-29 |
| பதுளை | 600347181-2-12 |
| மாத்தளை | 600346240-0-00 |
| மொணராகலை | 600340026-0-10 |
| வவுனியா | 600355761-6-36 |
| கொழும்பு | 600355645-8-28 |
| கேகாலை | 600352429-7-47 |
| யாழ்ப்பாணம் | 600346812-6-36 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,630,400/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரு. 13,572,460/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள்
2010 செப்டம்பர் 09 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

## கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 771
சீட்டிழுப்பு திகதி 06.09.2010

எழுத்து: J
வெற்றி இலக்கங்கள்: 05 37 47 64

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 23,137,260.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 20,000/= | 12 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 2,000/= | 324 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 1,000/= | 627 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 100/= | 15594 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரு. 40/= | 8869 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரு. 20/= | 222802 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரு. 20/= | 35162 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,588,440.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 23,663,747.20

வெற்றிப் பெறும் சீட்டுகள் 6மாதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk


Coca-Cola

இன்பத்தின்
இனிய ஸ்வரங்களை அனுபவிக்க
இதோ BnS இசை நிகழ்ச்சி



திகதி - செப்டெம்பர் 10 மாலை 6.00 க்கு
இடம் - துரையப்பா விளையாட்டரங்கு

BnS குழுவினர்: பாத்திய n சந்துஷ், அஷாந்தி டி அல்விஸ், ரன்திர் விதான, உமாரா சிங்கவன்ச

தமிழ் பாடகர்கள்: எம். சிவகுமார், நிலுக்ஷி, ஜோர்ஜ் டி அல்விஸ், மொரின் ஜெனட், நவகம்புர கணேஷ், ரீனா, சிரஞ்ஜீவி, ராஜ் பிரதாபன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தங்கக் கிண்ணக் கரப்பந்தாட்டம்; தெல்லிப்பழை அணி தேசிய மட்டத்துக்குத் தெரிவு

வலி.வடக்கு,செப்.8

பொதுநிர்வாக அமைச்சின் 40ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி ஜனாதிபதி தங்கக் கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி சம்பியனாகியது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலக அணியும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் சம வலிமையுடன் மோதிக்கொண்ட போதிலும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி தனது ஆற்றலை இறுதிவரை வெளிப்படுத்தி வெற்றியை சுவீகரித்துக் கொண்டது.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களை தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 25:13, 25:15 புள்ளிகள் என்ற அடிப்படையில் கோப்பாய் பிரதேச செயலக அணியை வென்று தேசிய மட்டப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (த-23-86)

## தாச்சிச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம்,செப்.8

யாழ்.மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கத்தினரால் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக மைதானத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலிட்டி இளைஞர் ஒன்றிய விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (த-23)

## மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டிகள் 11 ஆம் திகதி முதல் அனுராதபுரத்தில்

வலி.வடக்கு, செப்.8

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையேயான ஆண்கள், பெண்களுக்கான அரைமரதன் மற்றும் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதிவரை அனுராதபுரம் நகரப் பகுதியில் நடைபெறவுள்ளது.

அரைமரதன் ஓட்டப் போட்டியில் ஆண்கள், பெண்கள் பிரிவுகளில் சுமார் 150 வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சைக்கிள் ஓட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் 120 வீரர்களும், பெண்கள் பிரிவில் 75 வீராங்கனைகளும் கலந்து கொள்வார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

வடமாகாணத்தில் , இருந்து ஆண்கள், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டிகளில் யாரும் கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-86)

## வென்றது கைதடி விநாயகர்

யாழ்ப்பாணம், செப்.8

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கைதடி நாவற்குழி பிரதேசத்திற்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையே இடம்பெற்று வரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் கைதடி விநாயகர் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

இதில் கைதடி விநாயகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவற்குழி விக்பூட் விளையாட்டுக்கழக அணி மோதியது.

மூன்று செற்களைக் கொண்ட போட்டியில் கைதடி விநாயகர் விளையாட்டுக் கழகம் தன்னை எதிர்த்து விளையாடிய நாவற்குழி விக்பூட் விளையாட்டுக்கழக அணியை 17:25, 25:19, 25:17 என்ற செற்கணக்கில் வெற்றி கொண்டது. (த-23)

## பயிற்சி முகாமில் 150 வீரர்கள்

வலி.வடக்கு,செப்.8

அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள வடமாகாண பாடசாலைகளின் வீரர்கள், வீராங்கனைகளுக்கு வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சேவாலங்கா நிறுவனத்தின் ஆதரவுடன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம்பெற்ற நான்கு நாள் பயிற்சி நெறியில் 150 வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொண்டார்கள்.

தேசிய மட்ட பயிற்றுவிப்பாளர்களுடன் வடமாகாண பயிற்றுவிப்பாளர்களும் இணைந்து இப்பயிற்சி முகாமை நடத்தினார்கள்.

இப்பயிற்சி முகாம் நிறைவில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு வாழ்த்துகளை வழங்கினார்கள். (த-86)

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சைகள் ஒக்ரோபரில்

யாழ்ப்பாணம், செப்.8

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் இவ்வாண்டுக்கான உதைபந்தாட்ட மத்தியஸ்தர் தரம் I,II,III பரீட்சைகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 2 ஆம் திகதி இடம்பெறவுள்ளன. இந்தப் பரீட்சையில் தோற்ற விரும்புவோர் தம்து விவரங்களை எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் காலை 10மணி முதல் யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் உப செயலாளரிடம் பதிவுசெய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தற்போது மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றும் அனைவரையும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தவறாது சமுகம் தருமாறும் யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் இ.ஆனல்ட் கேட்டுள்ளார். (த-23)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,செப்.8

கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் கைதடி, நாவற்குழி பிரதேசத்துக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை முத்துக்குமார சுவாமி மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் நாவற்குழி மகா விஷ்ணு விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கைதடி குமரன் விளையாட்டுக்கழக அணி மோதும். (த-23)

* * *

யாழ்ப்பாணம்,செப்.8

கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட கழகங்களுக்கு இடையிலான லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் கரணவாய் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதும். (த-23)

## இறுதியாட்டம் வெள்ளியன்று

யாழ்ப்பாணம், செப்.8

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கைதடி நாவற்குழி பிரதேசத்திற்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் கைதடி நவா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி மின்னொளி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## தேசிய மட்டப் போட்டி தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்.8

வலிகாமம் கல்வி வலயத்தில் இருந்து தேசிய மட்ட பெருவிளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் வீரர்களுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெறவுள்ளதாக வலிகாமம் உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராஜா அறிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் வீரர்களுக்கான போக்குவரத்து, தங்குமிட வசதிகள் போன்ற விடயங்கள் ஆராயப்படவுள்ளதாகவும், எனவே பங்குபற்றும் பாடசாலை பொறுப்பாசிரியர்கள் வலிகாமம் கல்வி வலய கேட்போர் கூடத்திற்கு சமுகமளிக்குமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (த)

## ஊரெழு றோயல் அணியை வென்றது அல்வாய் மனோகரா

யாழ்ப்பாணம், செப்.8

மாலுசந்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட கழங்கங்களுக்கு இடையிலான லீக் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் ஆட்டம் ஒன்றில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதியது.

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய ஊரெழு றோயல் வி.கழக அணியை 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (த-23)

## கோல் காப்பாளர் பயிற்சி முகாம் மிக விரைவில் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், செப்.8

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் அனுசரணையுடன் கோல் காப்பாளர்களுக்கான பயிற்சி முகாம் ஒன்று மிக விரைவில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பாடசாலைகள், கழகங்களின் 15 வயதுக்கும் 25 வயதிற்கும் உட்பட்டவர்கள் பங்குகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள் கழகங்கள் ஆகியவற்றிலிருந்து இதில் பங்குகொள்ள விரும்புவோர் தங்களுடைய பெயர், விலாசங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.உதைபந்தாட்ட லீக் செயலாளருக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-23)

## 5:0 என்ற கோல் கணக்கில் வென்றது மணற்காடு அன்ரனிஸ்

யாழ்ப்பாணம்,செப்.8

கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட கழகங்களுக்கு இடையிலான லீக்முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

இதில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரணவாய் மத்திய விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய கரணவாய் மத்திய விளையாட்டுக்கழக அணியை 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (த-23)



பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான இறுதிப் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலக அணியும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் மோதிக் கொள்வதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கைதடி
## பதவி வெற்றிடம்: பொதுமுகாமையாளர் (101-7)

மேற்குறிப்பிட்ட பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தினை ரூபா 20/= செலுத்தி தலைமைக் காரியாலயத்தில் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9 மணி தொடக்கம் 5மணி வரை சனிக்கிழமை 9மணி தொடக்கம் மு.ப.11 மணி வரை பெற்றுப் பூர்த்திசெய்து தலைவர், தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கைதடி என்ற மகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ 25.09.2010 நண்பகல் 12 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். மேற்படி விண்ணப்பத்தினை தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் பொது முகாமையாளர் (101-7) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடல் வேண்டும்.

**பதவி:-** பொது முகாமையாளர்
சம்பளக் குறியீட்டு எண்:- 101 (7) (165/88)-101/5 (108/81)
சம்பள அளவுத்திட்டம்:- 11450 - 14500
145x10 160.10
(கூ.வே.ஆ சுற்றுநிருபம் 66/2006 இன்படி)
கூ.வே.ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதரபடிகளும் வழங்கப்படும்.

அ)கூட்டுறவுப் பணியாளர் 8ஆவது சம்பளத் திட்டத்தில் 3வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 9ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமைமட்ட அல்லது மேற்பார்வை மட்ட பதவி ஒன்றில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ)அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் முகாமை மட்ட பதவி ஒன்றில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ)கூட்டுறவு ஊழியர் தராதரப் பத்திரம், உயர்தரச் சான்றிதழ்/ க.பொ.த (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக, கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமைமட்ட பதவி ஒன்றில் 8 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**வயதெல்லை:-** 21-50 (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது)

**பிணைப்பணம்:-** ரொக்கம் ரூபா 25000/= உடன் ஆதனம் ரூபா 50000/= செலுத்த வேண்டும். பதவி நிரந்தரமானதும் இரண்டு வருடங்கள் தகுதிகாண் காலத்தைக் கொண்டதுமாகும்.

**நிபந்தனைகள்:-**

அ)நிறுவனங்களில் தற்போது கடமையாற்றுபவர்கள் நிறுவனத்தின் ஊடாக சிபாரிசு செய்து விண்ணப்பிக்க வேண்டும்.

ஆ)விண்ணப்பப்படிவத்துடன் கல்விச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்களின் பிரதி இணைக்கப்பட வேண்டும். பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பப் படிவங்களும் சான்றிதழ் இணைக்கப்படாத விண்ணப்பப் படிவங்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்கவோ நிராகரிக்கவோ நெறியாளர் குழுவிற்கு உரிமையுண்டு.

தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம் கைதடி

நெறியாளர் குழு ஆணைப்படி
நா.சிவதிருச்செந்துநாதர்
தலைவர்.

## ஓட்டோ தடம் புரண்டு சிறுவன் காயமடைந்தான்

தென்மராட்சி, செப்.8

ஓட்டோ தடம் புரண்டதில் 9வயது சிறுவன் காயமடைந்தான். கடந்த 5ஆம் திகதி ஓட்டோ செலுத்தும் பயிற்சியில் ஈடுபட்ட வேளையிலேயே அது தடம் புரண்டதாகத் தெரிவிக் கப்பட்டது.

சாவகச்சேரி சிவன் கோயிலடியைச் சேர்ந்த இ.சிந்துஜன் (வயது 9) என்பவரே காயமடைந்தவராவார்.

இதேவேளை-

மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் சிக்கி வரணியைச் சேர்ந்த பீ.ரதீஸ் (வயது 21), மட்டுவிலைச் சேர்ந்த ரி.வைகுந்தராசா (வயது 52) ஆகியோர் காயமடைந்தனர்.காயமடைந்தவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (த-207)

## மூன்று கட்டங்களாக பாடசாலைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.8

பாடசாலைகள் மூன்றாம் தவணைக் கல்வி நடவடிக்கைகளுக்காக மூன்று கட்டங்களளாகத் திறக்கப்படவுள்ளன.

புலமைப் பரிசில் வினாத்தாள்கள் மதிப்பிடும் பாடசாலைகளும், முஸ்லிம் பாடசாலைகளும் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளில் இன்று மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகின்றன.

வினாத்தாள்கள் மதிப்பிடும் பாடசாலைகளும் முஸ்லிம்கள் பாடசாலைகளும் முறையே 13ஆம், 20ஆம் திகதிகளில் ஆரம்பிக்கப்படும் எனவும் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த-312)

## விஞ்ஞான மதிப்பீட்டு பரீட்சை இரு தினங்கள்

யாழ்ப்பாணம்,செப்.8

தேசிய ரீதியான விஞ்ஞான மதிப் பீட்டுப் பரீட்சை நாளை வியாழக்கிழமை, நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் ஏ.அகிலதாஸ் அறிவித்துள்ளார்.

எனவே தரம் 11 இல் கற்கும் மாணவர்கள் குறித்த தினங்களில் காலை 8 மணிக்குச் சமுகமளிக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-16)

## மொழி பெயர்ப்பாளர்கள் விண்ணப்பிக்கலாம்

யாழ்.மாவட்ட கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் நடத்தப்படவிருக்கும் ஒருவார தொழில் பயிற்சி திட்டத்திற்கு உதவியாக சிங்கள, தமிழ்மொழி பெயர்ப்பாளர்கள் தேவைப்படுகின்றனர். தகுதியானவர்கள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4மணிவரை தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-310)

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி இன்றிலிருந்து 17.09.2010 பி.ப.2 மணி வரை

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:- 20.09.2010 நண்பகல் 12 மணி வரை

கேள்வி திறந்து பார்க்கும் திகதி:- 20.09.2010 பி.ப. 1.30 மணி

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் இடம்:- தலைமை அலுவலகம், சுன்னாகம்.

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர பணம் (வற் உட்பட) | இக்ராட் பதிவுத் தரம் |
|---|---|---|---|
| 1.உடுவில் தோம்பை வீதி மீள் தாரிடல் | 23000.00 | 560.00 | M8/C9 |
| 2.கந்தரோடை தேவரானை வீதி மீள் தாரிடல் | 6000.00 | 560.00 | M9/C10 |
| 3.உடுவில் அம்பலவாணர் வீதி மீள் தாரிடல் | 13000.00 | 560.00 | M9/C10 |
| 4.ஏழாலை புளியடி வயிரவர் வீதி புனரமைப்பு | 23000.00 | 560.00 | M8/C9 |

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் குறிக்கப்பட்ட ''இக்ராட்'' தரத்திற்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரரிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

தேசத்தைக் கட்டியெழுப்பும் (NBT) வரியாக மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணத்துடன் மேலதிகமாக 3% அறவிடப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரத்தின் மூலப்பிரதி ''செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்'' என்ற முகவரிக்கும் அதன் பிரதியை ''பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி சு.முருகநேசன்
செயலாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு
பிரதேசசபை,சுன்னாகம்.
02.09.2010

# ஓய்வுபெறும் அதிபரை வாழ்த்துகிறோம்

### சிறந்த கணித ஆசிரியர்



இவர் ஒரு சிறந்த கணித ஆசிரியர். தனது சேவை மூப்பினால் பிரதி அதிபராக உயர்வடைந்து இன்று இளைப்பாறுகிறார்.

இதுவரை காலமும் பாடசாலை மாணவர்களை நல்வழிப்படுத்துவதிலும், கணிதபாடம் போதிப்பதிலும் ஆற்றிய பணிக்காக திணைக்களத்தின் சார்பில் நன்றி கூறுகிறேன். ஓய்வு காலத்தில் சீரோடும் சிறப்போடும் குடும்பத்தினருடன் நோய் நொடியின்றி நீடூழி வாழ இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.

ப.விக்னேஸ்வரன்,
வடமாகாணக் கல்விப் பணிப்பாளர்.

### அர்ப்பணித்துப் பணியாற்றினார்



"நாடு உனக்கு என்ன செய்தது என்பதைவிட நீ நாட்டுக்கு என்ன செய்தாய் எனச் சிந்திக்க வேண்டும்" என முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கெனடி கூறினார். அவரது கூற்றுக்கிணங்கப் பிரதி அதிபரும் கல்லூரியில் மிகுந்த பற்றுவைத்து கல்லூரி வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்தார்.

திரு.செ.குபேரநாதன்
உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர்.

### வாழ்க வளமுடன்



ஸ்கந்தவரோதய பிரதி அதிபர் திரு.சிவகுரு மகேந்திரன் அவர்களின் 38 வருட அர்ப்பணிப்பான சேவையை நாங்கள் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர் நீடூழி வளமுடன் வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

பிரதி அதிபராகவும், கணித ஆசானாகவும் இக்கல்லூரியிலே வெள்ளிவிழாவினைப் பூர்த்திசெய்திருப்பது எங்களுக்கு மன நிறைவைத் தருகின்றது.

சு.பரமநாதன், தலைவர் பழைய மாணவர் தாய்ச் சங்கம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

### நோய்நொடியின்றி வாழ்க



கணிதபாடத்தை இலகுவாக மாணவர்கள் மனதிற் பதியும் வகையில் கற்பிப்பதில் இவருக்கு நிகர் இவரேதான். இவரின் ஓய்வு ஸ்கந்தாவிற்கு பேரிழப்பாகும் என்பதோடு இவரின் ஓய்வுக்காலத்தில் குடும்பத்தினரோடு நோய் நொடியின்றி வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சி.சதீஸ்
தலைவர்,ஆசிரியர் கழகம்.யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,



## திரு.சிவகுரு மகேந்திரன்

(பிரதி அதிபர் இ.ஆ.சே.தரம் I
பயிற்றப்பட்ட கணித ஆசிரியர்)

மொத்த சேவைக்காலம்:- 38 வருடம் 05 மாதம் 15 நாள்
ஸ்கந்தாவில் 25 வருடம் 05 மாதம் 23 நாள்

சேவை விவரம்
உதவி ஆசிரியராக

| | |
|---|---|
| அ/உடநிதிகம முஸ்லிம் வித். | 1972.03.23-1973.05.31 |
| அ/மதவாச்சி முஸ்லிம் வித். | 1973.06.01-1974.02.14 |
| யா/சுன்னாகம் மயிலணி ம.வி. | 1974.02.15-1974.03.31 |
| யா/இணுவில் சைவப்பிரகாச வித்தியாலயம் | 1974.04.01-1978.01.08 |
| யா/பலாலி ஆசிரிய கலாசாலை | 1978.01.09-1979.12.31 |
| அ/ஹொறவபத்தான முஸ்லிம் வித். | 1980.01.01-1980.03.31 |
| அ/ஸாகிறா மகா வித். | 1980.04.01-1985.03.14 |
| யா/ஸ்கந்தவரோதய கல்லூரி | 1985.03.15-2010.09.08 |

ஆசிரியர், உப அதிபர், ஆசிரியர் கழகம்
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

### ஸ்கந்தா அதிபரின் வாழ்த்துச் செய்தி



மிகக் குறைந்த வயதிலேயே ஆசிரியப் பணியில் இணைந்து நீண்ட பணியாற்றியவர் இவர். கணிதத் துறையில் வித்தகராக இன்று வரை எல்லோராலும் மதிக்கப்படுபவர். கல்லூரி நிர்வாகத்தில் எனக்கு மிகவும் பக்கபலமாக நின்று பணியாற்றிய சிறப்பை யான் மறக்க முடியாது. மணிவிழாக் காணும் நல்லாசான் திரு.சி.மகேந்திரன் அவர்களும் அவர்களது குடும்பத்தவர்களும் எல்லாச் செல்வத்துடனும் நிறைவாக வாழ இவரது குலதெய்வமாகிய சுன்னாகம் கதிரமலைச் சிவனையும் ஐயனாரையும் பிரார்த்தித்து வாழ்த்தி வணங்கி அமைகிறேன்.

ஆறு.திருமுருகன், அதிபர்
ஸ்கந்தவரோதயக் கல்லூரி சுன்னாகம்.

### செயல் வீரன்



யான் அதிபராக இக்கல்லூரியில்இருந்த காலத்தில் பகுதித் தலைவராக, உப அதிபராக பணிபுரிந்து எனக்கு ஒரு பக்க பலமாக உதவி புரிந்தார். எடுத்த கருமத்தை உரிய நேரத்தில் திருத்தமாகச் செய்து முடிப்பதில் வல்லவர். கணிதத் துறையில் நிரம்பிய ஆற்றலுடையவர். இவரும் இவரது குடும்பமும் சகல நலன்களும் பெற்று சிறப்புடன் வாழ இறைவனை வேண்டுகிறேன்.

க.சிவாஜி, முன்னாள் அதிபர்
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

### தன்னிகரற்ற சேவையாளன்



ஸ்கந்தாவின் பழைய மாணவராகவும், கணிதத் துறையில் பல மாணவர்களை வளர்த்தெடுத்த ஆசானாகவும், பிரதி அதிபராகவும் ஆசிரியர்கள் மத்தியில் கண்டிப்புடன் கூடிய நண்பராகவும் நற்பணியாற்றி தனது 38 வருட சேவையின் பின் இளைப்பாறும் பிரதி அதிபர் ஓய்வு காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

வ.நந்தீஸ்வரன்
(அதிபர்,ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை).

### நற்பண்புகளை வளர்த்தவர்



கடும் உழைப்பை அர்ப்பணித்ததுடன் மாணவர்களிடையே நல்லொழுக்கம், நற்பண்புகளை வளர்த்த எமது கல்லூரியின் பிரதி அதிபர். அவர் சீரும் சிறப்பும் பெற்று வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

மா.ஜோதி மார்க்கண்டு, செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது மதிப்புக்குரிய
முன்னாள் வலிகாமம் வலயக் கல்விப்
பணிப்பாளர்



**உயர்திரு. ப.விக்னேஸ்வரன்**

அவர்கள் 06.09.2010 முதல் வடமாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றதையிட்டுப் பெருமகிழ்வடைகின்றோம். தங்களின் அர்ப்பணிப்பு மிக்க கல்விச் சேவையாலும் சிறந்த தலைமைத்துவ வழிகாட்டலினாலும் வடமாகாணம் மேலும் கல்வியில் சிறந்து துலங்க வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள்,
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

(ஓ/570739)





## தமிழ் மன்றம்
## யாழ்ப்பாணக் கல்லூரி
### பாரதி விழா -2010

இடம் : 'ஒட்லி' மண்டபம், யாழ்ப்பாணக் கல்லூரி
காலம் : 09.09.2010 (வியாழக்கிழமை)
நேரம் : மு.ப. 10 மணி

பிரதம விருந்தினர் : திரு. S.K.யோகநாதன்
(பீடாதிபதி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கோப்பாய்)
ஆசியுரை : அதி.வண கலாநிதி S.ஜெபநேசன்

**நிகழ்ச்சி நிரல்**

1) மங்கள விளக்கேற்றல்
2) தமிழ்த்தாய் வாழ்த்து
3) தொடக்கவுரை : திரு.N.A.விமலேந்திரன் (கல்லூரி முதல்வர்)
4) ஆசியுரை : அதி.வண.கலாநிதி S.ஜெபநேசன் (பாரதி விழா ஆரம்பகர்த்தா)
5) தலைமையுரை : செல்வன் S.ஜெயாதி (தலைவர் தமிழ் மன்றம்)
6) பிரதம விருந்தினர் உரை :
திரு.S.K.யோகநாதன் (பீடாதிபதி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்
7) நிகழ்வுகள் :
★ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடத்துறையினர் வழங்கும் நடனம்.
★ கல்லூரி மாணவர்களின் நடனம்
★ பாரதி பாடல்கள்
★ கல்லூரி ஆசிரியர்கள் பங்குகொள்ளும் வழக்காடுமன்றம்
08) நன்றியுரை : செல்வி எஸ்.கவிஸ்ரா (தமிழ் மன்றச் செயலாளர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்
யாழ்ப்பாணக் கல்லூரி.

(ஓ/570750)



## 9ஆவது பிறந்த நாள் வாழ்த்து



வத்திராயன் தெற்கு, தாளையடியைச் சேர்ந்த
மடுதேவன் - சுகர்ணா
தம்பதியரின் செல்வப் புதல்வன்

**செல்வன் ம.அஜந்தன்**

இன்று(08.09.2010) புதன்கிழமை சாவகச்சேரி கண்டிவீதியில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை உற்றார், உறவினர்கள் இறையருள் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றார்கள்.

- குடும்பத்தினர்.

(103036)


## நீதிமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்ற வளாகத்துக்கு முன்னால் சட்டத்தரணிகள் பிரேதப்பெட்டியை வைத்து ஜனநாயகம் முடிந்துவிட்டது எனக் கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதேவேளை, மேல்மாகாண சபை எதிர்க்கட்சியினர் மேல்மாகாணசபைக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். நேற்றுக்காலை மேல்மாகாணசபை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கையில் கறுப்புப் பட்டிகளைக் கட்டியபடி காலை 10மணி முதல் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

(ஒ-சி)

## அரசமைப்புத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கவேண்டியதற்கான கட்டாயத்தையும், அவசியத்தையும் வெளிப்படுத்திய பிரதமர் டி.எம்.ஜயரட்ன அவசர காலச் சட்டம் தொடர்பான பிரேரணையை சபையில் சமர்ப்பித்தார்.

எதிர்க்கட்சிகளின் சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விவாதத்தை ஆரம்பித்துப் பேசினார்.

அவசரகாலச் சட்டம் தொடர்பாக விவாதத்தை ஆரம்பித்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, 18ஆவது அரசமைப்புத் தொடர்பாகவும் விவரித்தார்.

அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள அரசமைப்பின் 18ஆவது திருத்தம் ஜனாதிபதியை ஒரு சர்வாதிகாரியாக்கும் நோக்குடன் கொண்டுவரப்பட்டுள்ள ஒன்றாகும்.

18ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டால் அது ஜனநாயகத்தை அடியோடு குழி தோண்டிப் புதைத்துவிடும். தனிமனித அடிப்படைச் சுதந்திரம் பறிக்கப்பட்டுவிடும் என்றும் ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்தார்.

**அடிக்கடி குறுக்கே**

இவ்வேளையில் ஆளுங்கட்சியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான ஏ.எச்.எம்.அஸ்வர் அடிக்கடி குறுக்கீடு செய்தார்.

இன்று அவசரகாலச் சட்டம் தொடர்பான விவாதமே நடைபெறுகின்றது. இப்போது 18ஆவது திருத்தம் தொடர்பாகப் பேசுவது நிலையியல் கட்டளைகளுக்கு மாறானது என்று ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை அஸ்வர் கிளப்பினார்.

அதோடு நின்றுவிடாமல் ரணில் விக்கிரமசிங்க காருக்கு முந்திய கார் போல முந்தப் பார்க்கின்றார் என்றும் அஸ்வர் கூறினார்.

ஜனாதிபதியின் தன்னிச்சையான போக்குகளை சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சித் தலைவர் முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜயவர்தன, ஆர்.பிரேமதாச ஆகியோரும் அரசமைப்பில் திருத்தங்களைச் செய்துள்ளனர்தான்.

அப்போது அரசமைப்புச் சபை மற்றும் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என பல மட்டங்களிலும் கலந்துரையாடிய பின்னரே ஒரு தீர்வுக்கு வந்தனர்.

ஆனால், இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனக்கு அதிகாரங்களை அதிகரித்துக் கொள்வதற்காகவே தன்னிச்சையாக இந்த அரசமைப்புத் திருத்தத்தை கொண்டுவந்துள்ளார் - என்றார் ரணில்.

(ஒ-சி)

## மரண அறிவித்தல்கள்

### பாலசுப்பிரமணியம் சசிதரன்(சசி)



சங்கானையைப் பிறப்பிடமாகவும் பெல்ஜியத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் சசிதரன் 02.09.2010 அன்று அகாலமரணமடைந்தார். அன்னார் பாலசுப்பிரமணியம் - நகுலேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் ஜெனனியின்(ஆஷா) அன்புக் கணவரும் டிலக்ஷன், ஜெனர்த்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கணபதிப்பிள்ளை, நாகலிங்கம் தம்பதியினரின் அன்புப் பேரனும் கிரிதரன்(அமரர்), ஜீவதரன்(பிரான்ஸ்), ஜெயதரன் (அமரர்), முரளீதரன்(சுவிஸ்), கருணாதரன்(நோர்வே), மலர்விழி, கயல்விழி(இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுந்தர்லிங்கம்(அமரர் - லண்டன்), இரத்தினம்(அமரர்), வடிவேலு, துரைசிங்கம்(மாஸ்டர்), பத்மநாதன்(பொன்னுக்குட்டி), சிவபாலன்(நோர்வே) ஆகியோரின் பெறாமகனும் தெய்வேந்திரம் (அமரர்), மகேந்திரம்(லண்டன்), பரமேஸ்வரன் (லண்டன்), ஜெகதீஸ்வரன் மற்றும் மகேஸ்வரி, கனகமலர், ராஜேஸ்வரி(லண்டன்), நாகேஸ்வரி, கமலாதேவி, விக்னேஸ்வரி, ஜெகதீஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.09.2010) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் பெல்ஜியத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைருவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
சங்கானை.
021-3002075

தகவல்:
க.பாலசுப்பிரமணியம்
(தந்தை).

### அருணாசலம் சுப்பிரமணியம்

(Rtd. Technical and Administrative Officer of Survey Department)



கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டியைப் பிறப்பிடமாகவும் ஸ்ரேசன் அவனியூ கொடிகாமத்தை நிரந்தர முகவரியாகவும் இல. 33, கின்றோஸ் அவனியூ, பம்பலப்பிட்டியைத் தற்காலிக முகவரியாகவும் கொண்ட அருணாசலம் சுப்பிரமணியம் நேற்றுமுன்தினம் (06.09.2010) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி அருணாசலம் தம்பதியரின் ஏக புதல்வனும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சின்னையா தம்பதியரின் அன்பு மருமகனும் சிவயோகமணி (ராசாத்தி)யின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாகம்மாவின் சகோதரரும் Dr. சபேசன் (U.K), கோணேசன் (Newzealand), குமரேசன் (U.K), கவிதா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் யசோதா, விஜிதா, லதுராஜ் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆதிரன், சனஜன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.09.2010) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு Mahinda Funeral Directors,591 Galle Road, Mountlavinia என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 12 மணிக்கு பொரளை கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சபேசன் (00441279834800)
கோணேசன் (006495280468)
குமரேசன் (00447944285265)

தகவல் :
மனைவி, பிள்ளைகள்.
T.P.: 0112553360

இல.33, கின்றோஸ் அவனியூ பலம்பலப்பிட்டி. (103046)

### கதிர்காமத்தம்பி கனகமணி



மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமத்தம்பி கனகமணி 06.09.2010 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமத்தம்பியின் அன்பு மனைவியும் இராஜேஸ்வரி, அற்புதராஜா(ஜேர்மனி), அமரர் தவக்குமார், பிரகலாதன்(தேவன்), ஜெயானந்தம்(லண்டன்), ஜெயநாதன்(ஜேர்மனி), ஜெயராணி ஆகியோரின் அன்புத் தாயும் கனகலிங்கம், சீலா, வசந்தி, நிலானி, மதிவதனி, சுதா, கதிர்காமராசன், ஆகியோரின் மாமியாரும் பாலகிருஸ்ணன், ராதாகிருஸ்ணன், கல்பனா, கேசவன், கார்த்திகா, கரிசங்கர், தேனுகா, திவாகர், ஆரபி, கஜானா, துவாரகன், கோகுலன், சஜிவன், ஆகாஷ், ஆதஸ், நதீனா, அஜந், ஜெந், பிரசாந்தி, பிரசாந்தன் அனுசா, அனுசன், ஆகியோரின் பேர்த்தியும் யதுசன், தீபிகா, சரண்யா, சாரங்கன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2010) புதன்கிழமை பிற்பகல் 2மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நெணியன் நேரியதூ இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு.
தொ.பே.0776150583 (103034)

தகவல்:
கனகலிங்கம் குடும்பம்,
தேவன் (கராஜ்)




IELTS அவசியமில்லை

**STUDY IN UK**

யாழ்.நகரில் மிகக் குறைந்த செலவில்........
லண்டனில் தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில்
உங்கள் உயர்கல்வியைத் தொடர்வதற்கு

இறுதிச் சந்தர்ப்பத்துக்கு முந்திக்கொள்ளுங்கள்

★ Admission within 3 days (ஆவணங்கள் திருப்தியாக இருப்பது முக்கியம்)
★ 100% Visa உத்தரவாதம்
★ ஆகக் குறைந்த கல்வித் தகைமை(O/L)
★ விசா கிடைப்பதற்கு முன்போ விசா கிடைத்த பின்போ எதுவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.
★ விசா நிராகரிக்கப்படுமானால் பணத்தைத் திரும்பப் பெறும் வசதிகள்
★ விரைவான பயண ஏற்பாடுகள்
★ மிகக் குறைந்த கட்டணத்தில் Sponsor வழிகள்

தொடர்புகளுக்கு: 0770871616


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## Need For Software Dealers

கொழும்பில் முன்னணி வகிக்கும் நிறுவனம் தற்பொழுது புதிதாக அறிமுகப்படுத்துகிறது atACC (Indian Software)

- Accounting & Inventory Software
- Pharmacy Software

for Small, Medium & Trading Companiesகளுக்கு ஏற்ப மிகக் குறைந்த விலையில்

யாழ்ப்பாணம் முழுவதும் சந்தைப்படுத்துவதற்கு விற்பனை முகவர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

I Tech Vision (Pvt) Ltd
40-2/2A, Galle Road, Colombo-06
TP: 011-2508505, 011-5666417, 011-5666356



## CANADA Work Permit

### பெறுவதற்கான ஆலோசனைகள்

- வயதெல்லை – upto 40 years
- ஆங்கில அறிவு சரளமாக இருத்தல் வேண்டும்.
- அங்கிகரிக்கப்பட்ட Diploma / Degree உடையவர்களுக்கு முன்னுரிமை
- குறைந்த பட்சம் ஒரு வருட வேலை அனுபவம் தேவை.

SIC Center, 734, Hospital Road, Jaffna.
Tel : 077-900 4194



## மாபெரும் இலவச புத்தகக் கண்காட்சி

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு
நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள
மங்கையர்க்கரசி வித்தியாலய மைதானத்தில்...

எமது வெளியீடுகளுக்கு விசேட விலைக்கழிவு

08.09.2010 இன்று மட்டும்
காலை 9.30 மணி தொடக்கம் இரவு 9.00 மணிவரை

சிறுவர் நூல்கள், புலமைப்பரிசில் நூல்கள், பொது நூல்கள், பயிற்சி நூல்கள், கணனி நூல்கள், பாட சாலை உபகரணங்கள், இலக்கிய நூல்கள் மலிவு விலையில்...

பாடசாலை மாணவர்களுக்கு, நூலகங்களுக்கு விசேட விலைக் கழிவு

காயத்திரி பப்ளிகேசஷன், கொழும்பு
011-2727621, 0777892028


## மரண அறிவித்தல்கள்

### லூக்கேஸ்பிள்ளை நல்லையா



கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லூக்கேஸ்பிள்ளை நல்லையா நேற்று (07.09.2010) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (08.09.2010) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொய்யாத் தோட்டம் கிறீஸ்து அரசர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்துக்காகப் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15/2, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். (103075)

தகவல் :
குமார் குடும்பத்தினர்.
(கிறிசாந்தன் பேக்கறி).

### நடராசா கனகலிங்கம்



யாழ். கொட்டடியைப் பிறப்பிடமாகவும் இல.68, அராலி வீதி, ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா கனகலிங்கம் நேற்றுமுன்தினம் (06.09.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா மற்றும் - ராசாத்தி தம்பதியரின் மகனும் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் விஜயகுமாரி, சுசிலா, ராஜகுமாரி, வஸ்கலா, கிரிசாந், தனுசாந் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2010) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 9 மணியளவில் தகனக்கிரியைக்காக கொட்டடி, வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.68, அராலி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 0777946261 (103043)

தகவல் :
குடும்பத்தினர்.

# முல்லை. இணைப்பு ஆசிரியர் சம்பளப் பத்திரத்தில் கையொப்பமிட ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப். 8

யாழ். மாவட்டத்தில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றிவரும் முல்லைத்தீவு வலய ஆசிரியர்கள் தங்களது செப்ரெம்பர் மாதச் சம்பளப் பத்திரத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் 11ஆம் திகதி சனிக்கிழமையும் கையொப்பம் இடுவதற்கான ஒழுங்குகளை முல்லைத் தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் மா.தேவேந்திரன் செய்துள்ளார்.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் வழமை போல் யாழ்ப்பாணம் மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் மேற்படி இரு நாள்களும் கையொப்பம் இடலாம் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ)

# நீண்ட 'ஓய்வில்' இருக்கும் ஏ.ரி.எம் இயந்திரம் !

யாழ்ப்பாணம், செப். 8

இலங்கை வங்கியின் பல்கலைக்கழக வளாகத்துக்குள் அமைந்துள்ள ஏ.ரி.எம் இயந்திரம் பழுதடைந்துள்ளதால் பாவனையாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த 10 நாள்களாக இயந்திரம் பழுதடைந்துள்ளதால் பணத்தை மீளப் பெற்றுக்கொள்ளப் பலரும் வங்கிகளுக்குச் சென்று நீண்ட நேரத்தைச் செலவிட வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

திருநெல்வேலி, இலங்கை வங்கிக் கிளையினரால் பராமரிக்கப்படும் இந்த இயந்திரத்தைத் திருத்த சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்றும் பாவனையாளர்கள் கேட்டுள்ளனர். (ஒ-10)

# வேம்படி மகளிர் மாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், செப். 8

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் மூன்றாம் தவணைக்கான கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கான விஞ்ஞானப் பாடப் பரீட்சைகள் நாளை வியாழக்கிழமை நடைபெற இருப்பதால் அம்மாணவர்கள் அன்றையதினம் முதல் வருகைதர வேண்டும் என்று பாடசாலை அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஒ-15)

## விற்பனைக்கு

பலாலி றோட், கோண்டாவில் சந்தியில் மேல் வீடு விற்பனைக்கு உண்டு. 3 ½ பரப்புக் காணி, வாகனத் தரிப்பிடம் உட்பட சகல வசதிகளுடன் கூடிய வீடு.
எஸ். தர்சிகா, தொ.பே.: 0776039578, 0775808933

## தவறிவிட்டன

பரஞ்சோதி பகீரதன் என்பவரது (851774289V) எனும் இலக்கமுடைய தே.அ.அட்டை மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம், தற்காலிக அடையாள அட்டை என்பன பரந்தனுக்கும் கண்டாவளைப் பிரதேச செயலர் அலுவலகத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் புளியம்பொக்கணைச் சந்தியில் உள்ள தேநீர்ச் சாலையில் கொடுத்து தவவும்.
தொடர்புகளுக்கு : 0772880954

## வீடு விற்பனைக்குண்டு

சுதுமலை தெற்கு, குருந்தடிப் பிள்ளையார் ஆலய முன்றலில் சகல வசதிகளுடன் கூடிய (வாகனத் தரிப்பிட வசதி, மாடி, யாழ்ப்பாணத்துக்கு அண்மிய தூரம்) வீடு உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு :-
0773400918, 0213001692, 0016473471457

## தவறிவிட்டன

கல்லூரி ஒழுங்கை,நீராவியடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த ராஜ்குமார் ராகுலன் என்பவரது தே.அ.அட்டையும் (882073580 V), சாரதி அனுமதிப்பத்திரமும் யாழ். நகரப்பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். T.P.: 0779743661

## காணி விற்பனைக்கு

நல்ல தண்ணீர்க்கிணறு, சுற்றுமதில் என்பவற்றுடன் யாழ். கல்வி வலயத்துக்கு அருகில் இல.151, செம்மணி வீதி, ஆடியபாதம் வீதி ஆகிய இருவழிப்பாதை கொண்ட 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விலை பேசித்தீர்மானிக்கலாம். பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: [illegible]

# வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி
## மீள் விற்பனைக் கேள்வி அறிவித்தல்
### யா/விக்னேஸ்வராக் கல்லூரி, வடமராட்சி
### 130' X 25' பழைய கட்டடம்

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் அமைந்துள்ள 130' X 25' பழைய கட்டடம் புதிய கட்டட அமைப்புக்காக இடித்து அப்புறப் படுத்தப்படவுள்ளது. இதில் மீள் பாவனைக்குரிய கட்டுமானப் பொருள்களும் உண்டு. இவற்றிற்கான பகிரங்க விற்பனைக்கான கேள்வி கோரப்படுகின்றது. கூடுதலான விலை கோருபவருக்கு கட்டடப் பொருள்கள் வழங்கப்படும்.

01. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி 08.09.2010 முதல் 16.09.2010 மதியம் 12 மணிவரை
02. கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி: 17.09.2010 மதியம் 12 மணி வரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: 17.09.2010 பி.ப. 2 மணி (திறக்கப் படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கேள்வியினை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு. சரியாக நிரப்பப்படாத தெளிவற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
05. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப் பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும், கையொப்பமும், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறையின் இடப்புற மேற் பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்ட ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் இடல் வேண்டும்.
06. கட்டடத்தினை இடித்து அகற்றும் வேலை கீழ்வருவனவற்றினைக் கொண்டிருக்கும்.
    1. கூரை, ஓடுகள், மரங்களை அகற்றுதல்
    2. யன்னல்கள், கதவுகள், கதவு நிலைகள் அகற்றுதல்
    3. கண்டகல்லுக் கட்டு, சுவர், அத்திவாரம், தூண், சிமெந்துத்தரை என்பவற்றை அகற்றுதல்.
    4. கட்டடத்தினை இடித்தழிக்கும்போதும் வெளியகற்றும் போதும் ஏற்படும் குழிகள், பள்ளங்கள் அனைத்தும் நிரப்புதல்.
07. பொருள்களுக்கான கேள்வி மேற்படி வேலைகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.
08. இடிபாடுகள் அனைத்தும் பாடசாலை வளவில் இருந்து அகற்றப் படுவதுடன் ஏதும் மீதம் இருக்க அனுமதிக்கப்படமாட்டாது.
09. இடித்தழிக்கும் நடவடிக்கைகள் வலயக் கல்வி அலுவலகத்தின் பாடசாலை வேலைகள் பிரிவினாலும், யாழ்.மாவட்டப் பாடசாலைகள் வேலைகள் பிரிவின் பொறியியலாளர் மற்றும் உத்தியோகத்தராலும் மேற்பார்வை இடப்படும்.
10. வேலைகள் நடைபெறும்போது அயலில் உள்ள கட்டடங்களுக்கு எவ்வித சேதமும் ஏற்படாதவாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
11. மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 500.00உம் மீளளிக்கத் தக்க வைப்புப் பணமாக ரூபா 15000.00 செலுத்தப்பட வேண்டும். இவை தினமும் அலுவலக நாள்களில் மதியம் 12 மணிவரை செலுத்தப்பட முடியும். இவற்றுக்கான இறுதித் திகதி 16.09.2010 ஆகும்.
12. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித் தொகையினை 21.09.2010இற்கு முன்னர் அல்லது பொருள்களைப் பாடசாலை வளவில் இருந்து அகற்றுவதற்கு முன்னர் இதில் எது முந்தியதோ அதற்குள் செலுத்தப்படல் வேண்டும்.
13. கட்டடத்தினை பார்வையிட விரும்புவோர் பாடசாலை நாள்களில் காலை 09.30 தொடக்கம் 12.30 வரை பாடசாலை அதிபரின் அனுமதி பெற்றுப் பார்வையிடலாம்.

வ.செல்வராசா,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி. (சி/570720)

## 20ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
05 * 11 * 1917



மறைவு
18 * 07 * 1990

### அமரர் வைத்திலிங்கம் சிங்கவேலு

(முன்னாள் உரிமையாளர், எரிபொருள் நிலையம், மருதனார்மடம்)

திதி: 08.09.2010

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அவரது பிரிவால் துயருறும் :
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நல்லூர். (103037)

## தேங்காய் கூறுவிலை கோரல்

பளை, புதுக்காட்டுச் சந்தியின் தெற்குப் புறமாக உள்ள மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்கு (J.E.D.B) சொந்தமான தோட்டத்தில் உள்ள தேங்காய்கள் நாளை (09.09.2010) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஏலத்தில் விடப்படும். ஏலத்தில் பங்கு பற்ற விரும்புவோர் தேங்காய்க்கான விலையை ஒட்டப்பட்ட தபால் உறையில் இட்டு அன்றைய தினம் முற்பகல் 9 மணிக்கு முன்பாகத் தோட்டத்தில் நேரில் கையளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

க. புவனேந்திரன்,
O.I.C.,
J.E.D.B.,
PALLAI.
T.P.: 0776047786

SHANTHA DEMEL,
JAFFNA AREA ESTATE SUPERINTENDENT,
J.E.D.B., PALLAI.
T.P.: 0718157280

(103012)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி, முல்லை. செயலகங்களை மீள நிர்மாணிக்க அமைச்சு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், செப். 8

வடமாகாணத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்ட செயலகங்களை மீள நிர்மாணிப்பதற்கான நிதியை பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஒதுக்கியுள்ளது.

யாழ்.செயலகத்தில் நேற்றுமுன்தினம் நாட்டின் 25 மாவட்டங்களினதும் அரச அதிபர்களின் மாநாடு நடைபெற்றதைத் தொடர்ந்து அமைச்சினால் இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டச் செயலகங்களுடன் வட மாகாணத்திலுள்ள 6 பிரதேச செயலகங்களும் மீளப் புனரமைக்கப்பட உள்ளன.

இவற்றுக்கான நிதி, அமைச்சினால் ஒதுக்கப்பட்டுவிட்டதால், புனரமைப்புப் பணிகள் உடனடியாகவே ஆரம்பமாகும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரச அதிபர் மாநாடு எந்த மாவட்டத்தில் இடம்பெற்றாலும் அரச தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுவது வழமை என்றும் உள்ளூர் செய்தியாளர்களுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-15)

# முல்லைத்தீவில் துப்பாக்கி வெடித்து சிப்பாய் ஒருவர் பலி

வவுனியா, செப். 08

முல்லைத்தீவு, நெடுங்கேணியில் இராணுவச் சிப்பாய் ஒருவரது துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் அந்தச் சிப்பாய் குண்டு பாய்ந்து உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச்சடலம் திடீர் மரண விசாரணைக்காக வவுனியா அரசினர் பொது வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

நெடுங்கேணிப் பொலிஸ் நிலையப் பொலிஸார் இவ்வெடிப்புச் சம்பவம் தொடர்பாக புலனாய்வு விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (ஒ-சி)

# பொலிஸாரின் தீவிர கண்காணிப்புக்கு மத்தியிலும் நல்லூரில் தாலிக்கொடிகள், சங்கிலிகள் அபேஸ்

## நேற்றைய சனநெரிசலில் திருட்டுப்பேர்வழிகள் கைவரிசை

யாழ்ப்பாணம், செப். 8

பொலிஸாரின் தீவிர கண்காணிப்புக்கு மத்தியிலும் நல்லூரில் நேற்று 5 தாலிக்கொடிகளும், 15 தங்கச் சங்கிலிகளும் திருட்டுப் போயுள்ளன.

அதேசமயம் திருட்டுக்களுடன் தொடர்புடைய நான்கு பெண்கள் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

தேர்த்திருவிழாவில் சனநெரிசலைப் பயன்படுத்தி பக்தர்களின் மேற்படி தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவங்களின் போதும் நால்வர் பக்தர்களிடமும் சிவில் உடையில் நின்ற பொலிஸாரிடமும் வசமாக மாட்டிக்கொண்டுள்ளனர். அவர்களிடம் விசாரணை நடத்திய பொலிஸார் 5 தங்க நகைகளை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட நகைகளைப் பொலிஸார் உரியவர்களிடம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இச் சம்பவத்தில் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டுவரும் நான்கு பெண்களில் ஒருவர் இந்தியாவில் இருந்தும் மற்றைய மூவரும் நீர்கொழும்பில் இருந்தும் வந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

(ஒ-16-07-86)

# நாடாளுமன்றை அரசமைப்பு சபையாக மாற்றி புதிய திருத்தங்களைக் கொண்டுவரத் திட்டம்?

கொழும்பு, செப். 8

நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக (Constitutional Council) மாற்றுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக அறியப்படுகிறது. அவ்வாறு செய்வதன் மூலம் அரசமைப்புத் சட்டத்துக்கு சில திருத்தங்களைக் கொண்டு வந்து நிறைவேற்ற அரசு உத்தேசித்துள்ளதாகவும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருப்பதாக சிங்கள ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தினுள்ள முரண்பாடுகளை நீக்குதல், வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்படும் யோசனைகள், இரண்டாவது சபை அல்லது செனெற் சபையை நிறுவுதல் போன்ற பல விடயங்கள் அடுத்த சுற்றில் மேற்கொள்ளப்படும் அரசமைப்புத் திருத்தத்தில் உள்ளடக்கப்படும் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசமைப்புச் சபையாக நாடாளுமன்றத்தை மாற்றும் ஏற்பாட்டை இயன்ற அளவில் ஜனநாயக ரீதியில் மேற்கொள்வது என்றும் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளின் பங்களிப்புடன் அரசமைப்புச் சபையை நிறுவுவதே அரசின் திட்டம் என்றும் சொல்லப்படுகிறது.

உத்தேச அரசமைப்புச் சபையினால் அவசியமெனக் கருதப்படும் விதிமுறைகள் தயாரிக்கப்பட்டதன் பின்னர் அடுத்து வரும் நான்கு மாத காலத்திற்குள் அரசு விரும்பும் திருத்தங்களை நிறைவேற்றிக் கொள்வதே அரசின் எதிர்பார்ப்பாக உள்ளது என்றும் அறியப்படுகிறது.

இலங்கையை குடியரசு நாடாக்குவதற்காக 1972 ஆம் ஆண்டில் நாடாளுமன்ற அரசமைப்புச் சபையாக மாற்றப்பட்டது தெரிந்ததே. (அ-க-22)

# அரசமைப்பில் மற்றொரு திருத்தம் அடுத்த ஆண்டு

## 13 ஆவது திருத்தத்தில் மேலதிக சரத்துகள்

கொழும்பு, செப்.08

அரசமைப்பில் மற்றுமொரு திருத்தம் அடுத்த ஆண்டு கொண்டுவரப்பட உள்ளது. அதில் 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் மேலதிக சரத்துகளைச் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் - இப்படி அமைச்சர் டலஸ் அழகப்பெரும நேற்று செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும்போது தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற்றுப்பகல் கொழும்பு, மகாவலி கேந்திரத்தில் நடைபெற்றது. அமைச்சர்கள் மைத்திரிபால சிறிசேன, நிமல் சிறிபால டி சில்வா, டலஸ் அழகப்பெரும ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தனர்.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தொடர்ந்து கூறியவை வருமாறு:-

புதிய அரசமைப்புத் திருத்தம் கொண்டுவரப்படும்போது 13ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு சில ஷரத்துகளைச் சேர்க்கும் வகையில் திருத்தம் கொண்டுவரப்படும். அத்திருத்தத்தில் பொலிஸ் ஆணைக்குழு தொடர்பாக மக்களுக்கு நன்மையளிக்கும் திருத்தங்களும் கொண்டுவரப்படும்.

18ஆவது அரசமைப்புத் திருத்தத்தை அவசரஅவசரமாகக் கொண்டுவந்து நிறைவேற்ற அரசு முயற்சி மேற்கொள்கிறது என ஐ.தே.கட்சி குற்றம் சுமத்துகின்றது. குற்றம் சுமத்தும் அருகதை ஐ.தே.கட்சிக் குக் கிடையாது. 13ஆவது மற்றும் 17ஆவது அர சமைப்புத் திருத்தங்கள் எவ்வாறு நிறைவேற்றப்பட்டன? நாம் கடந்த மூன்று மாத கால மாக 18ஆவது திருத்தம் குறித்து பேச்சு நடத்தினோம். நாட்டு மக்கள் இதை நன்கறிவர்.

உத்தேச அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை விட அதிக வாக்குகளைப் பெற்று நிறைவேறும்.

- இவ்வாறு அவர் சொன்னார். (ஒ-சி)

# 3 ஆம் தவணை ஆரம்பம்

குருநகர், செப். 8

யாழ்.மத்திய கல்லூரி மூன்றாம் தவணைக்கான கற்பித்தல் நடவடிக்கைக்காக எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று அதிபர் அறிவித்துள்ளார்.

(ஒ-51)

# அற்ப சலுகைகள், பதவிகளுக்காக இடதுசாரிகள் விலை போயுள்ளனர்

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.08

அரசமைப்புத் திருத்தத்துக்கு வாக்களிப்போர் தமது மனச்சாட்சிக்கு மாறாகப் பதவிக்காகவும் சலுகைகளுக்காகவுமே வாக்களிக்கின்றனர். திஸ்ஸவிதாரண, டியூ குணசேகர, வாசுதேவ நாணயக்கார, தினேஷ்குணவர்த்தன போன்ற இடதுசாரித் தலைவர்கள் தமது கொள்கைகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு பதவிக்காகவும் அற்ப சலுகைக்காகவும் விலை போயுள்ளனர் என ஐ.தே.கட்சி பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றஞ்சாட்டினார்.

ஐ.தே.கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்றது. அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

உத்தேச அரசமைப்புத் திருத்தத்தின் காரணமாக நாடாளுமன்றத்துக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களும் பறிக்கப்பட்டுள்ளன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கவேண்டும் என்று வாய் கிழியக் கூச்சல் போட்ட இடதுசாரிக் கட்சித் தலைவர்கள் அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவளிப்பது வேடிக்கையானது.

நாடாளுமன்றத்தில் அரசமைப்புத் திருத்தத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றினாலும் மக்கள் இதை ஏற்றுக் கொள்கின்றனர் எனக் கூற முடியாது. நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதிக்கு 37 சதவீத வாக்குகளே கிடைத்தன. இது வாக்காளர்களின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அல்ல. அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேறினாலும் ஐ.தே. கட்சி அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிரான கட்சிகளையும் சிவில் அமைப்புகளையும் இணைத்துக்கொண்டு இதற்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும்.

பொதுத் தேர்தலின் போதும் ஜனாதிபதித் தேர்தலின் போதும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படும் என நாட்டு மக்களுக்கு வாக்குறுதி அளித்தார். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை அவர் காற்றில் பறக்கவிட்டுள்ளார்.

மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது நாடாளுமன்றத்துக்கு ஜனாதிபதி வருகை தந்து எம்.பிக்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க அரமைப்புத் திருத்தம் வழி செய்கின்றது என சில அமைச்சர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் இந்த ஏற்பாடு அரசமைப்பில் ஏற்கனவே உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த ஏற்பாடு காரணமாகவே ஜனாதிபதி வரவு - செலவுத் திட்டத்தை சபையில் சமர்ப்பிக்கக் கூடியதாக உள்ளது.

பத்திரிகை ஆசிரியர்களின் கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவித்திருக்கும் கருத்துகள் வேடிக்கையாக உள்ளன. பேருவளையில் நடைபெற்ற அரச நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் 99சதவீத மானோர் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க விரும்பவில்லை என்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பேன் எனக்கூறி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சரத் பொன்சேகாவை மக்கள் நிராகரித்து விட்டனர் என்றும் அவர் தெரிவித்த கருத்து முன்னுக்குப்பின் முரணானது.

தான் வழங்கிய வாக்குறுதியை காற்றில் பறக்கவிட்டுவிட்டு ஏனையோரின் வாக்குறுதியில் தங்கியிருந்து அவர் இக் கருத்தைத் தெரிவிக்கின்றார்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-சி)

# கட்டுநாயக்க கல்லூரி மாணவர் மோதல்: 16 சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் ஏற்பட்ட மோதல் தொடர்பில் சந்தேகத்தின்பேரில் கைதான 16 சந்தேகநபர்களும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஆஜர் படுத்தப்பட்டபின்னர் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 17 ஆம் திகதி அடையாள அணிவகுப்பொன்றையும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாகப் பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட மூவர் தலைமறைவாகியுள்ளனர்.


CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை - யாழ்ப்பாணம்
புரட்டாதி 07, 2010
பங்குச்சந்தைச்சுட்டிகள்

அனைத்துப்பங்கு(ASPI)5,884.99↑
மிலங்கா(MPI) 6,034.28↓

உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.)5,890.16Mn
பங்குகளின் அளவு(No.) 91.94Mn
வியாபாரம்(No.) 18,136
சந்தை முதல்(Mkt.Cap)1,937.48Bn

விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
கொழும்பு பார்மசி 1155.00
றீவ்(f) கொம்பர்ஸ் 8.80
மெற்றோபொலிரன் றிசோசஸ் 39.60
எக்கின்ஸ் ஸ்பென்ஸ் 2745.30
சிளப்(f)ரி 75.00

குறைவு(Top 5 losers) - விலை Rs.
செரண்டிப் ஹொட்டல்(x) 102.00
சிங்க லங்கா 181.10
புக்கித்தாரா 7400.10
அஸ்கொட் ஹோல்டிங் 59.80
சிங்கபுத்திர பைனான்ஸ் 59.80

மேலதிக தகவல்கள் -www.cse.lk



மரண அறிவித்தல்

திருமதி பஞ்சாட்சரக்குருக்கள் இராசம்மா

கீரிமலையைப் பிறப்பிடமாகவும் ஊரெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சாட்சரக்குருக்கள் இராசம்மா 07.09.2010 அன்று காலமானார்.

அன்னார் சோமசுந்தரசர்மா, மீனாம்பிகை, சோமகலாதரசர்மா ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (08.09.2010) பி.ப. 2 மணிக்கு நடைபெற்று ஊரெழு பொக்கணை இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு மேற்கு,
சுன்னாகம். T.P.: 021 2240828

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மீட்கப்பட்ட 200 கிலோ தங்கத்துக்கு என்ன நேர்ந்தது?

## சபையில் சரத் பொன்சேகா கேள்வி



கொழும்பு, செப்.8

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் 200 கிலோ கிராம் எடையுடைய தங்கம் மீட்கப்புட்டது என ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

யுத்தம் நடைபெற்ற இறுதி நான்காண்டு காலப்பகுதியில் வெள்ளமுள்ளிவாய்க்கால் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற தேடுதல் நடவடிக்கைகளின் போது 200 கிலோ கிராம் எடையுடைய தங்கம் மீட்கப்பட்டுள்ளது.

அவசரகாலச் சட்டம் தொடர்பான வாக்கெடுப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

தம்மை பதவியிலிருந்து நீக்கியதன் பின்னர் மேலும் பெருந்தொகை தங்கம் மீட்கப்பட்ட போதிலும் அவற்றுக்கு என்ன நேர்ந்ததென்பது வெளிப்படையாகவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குமரன் பத்மநாதனுக்கு சொந்தமான பெருந்தொகை சொத்துக்களுக்கு என்ன நேர்ந்ததென்பது இதுவரையில் வெளிப்படையாகவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தாமும் பாதுகாப்புச் செயலாளரும் ஒரே விதமான சிந்தனை உடையவர்கள் என குமரன் பத்மநாதன் அண்மையில் அளித்த செவ்வியொன்றில் கூறியுள்ளார் எனவும் இதுகுறித்து அனைவரும் சிந்திக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் குமரன் பத்மநாதன் இதே கருத்தை வெளியிட்டிருந்தால் 5000 படையினரின் உயிர்களைப் பாதுகாத்திருக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

முடியுமென்றால் அவசரகாலச் சட்டத்தை நீடிக்காது நாட்டை ஆட்சி செய்யுமாறு அரசுக்கு அவர் சவால் விடுத்துள்ளார்.

ஒரு தனிப்பட்ட நபரை கைது செய்து சிறையில் அடைப்பதற்காக இன்று அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படுகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் நீடித்தால் பயங்கரவாதத் தடைச் சட்டம் மட்டும் போதுமானதென்றும் அவர் தெரிவித்தார்.

இன்று நாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

## கறுப்பு உடையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது அரச தரப்பினர் மேசைகளில் தட்டி அவரை வரவேற்றனர்.

மேலும் ஐ.தே.க. உறுப்பினர்களான அப் துல் ஹலீம், சம்பிக்க பிரேமதாஸ ஆகியோரும் வெண்ணிற ஆடைகளுடன் சபை நிகழ்வுகளில் கலந்து கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வரலாறு காணாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டனர். ஏறக்குறைய ஒரு லட்சம் பேர்வரை நேற்றைய உற்சவத்தில் கலந்துகொண்டனர் எனத் தெரிகின்றது.

எனினும், வழமையான உற்சவ தினங்களில் கலந்துகொண்ட அளவுக்கு இம்முறை தேரின்போது மிகவும் கூடுதலான தென்பகுதி மக்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டபோதும் நேற்றைய தேர்த்திருவிழாவின்போது மிகவும் குறைந்த மக்களே தென்பகுதியில் இருந்து கலந்து கொண்டனர். புலம் பெயர்ந்த நாடுகளைச் சேர்ந்த தமிழ் மக்களையும் காணக்கூடியதாக இருந்தது.

பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டமையால் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் தொண்டர்களும் சுறுசுறுப்பாக இயங்கியதையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

தொலைக்காட்சிகளின் நேரடி அஞ்சல் நிகழ்வுகளும் இடம்பெற்றன. சுகாதாரம் , குடிதண்ணீர் வசதிகள் மாநகரசபையால் கண்காணிக்கப்பட்டதுடன் மாநகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் கண்காணிப்புக்கு உணவகங்களும் உட்படுத்தப்பட்டன.

தூக்குக்காவடி, காவடி மற்றும் அங்கப் பிரதிஷ்டை, அடியளித்தல் ஆகிய நேர்த்திக கடன்களை நிறைவேற்றுவதில் பக்தர்கள் அக்கறை கொண்டிருந்தனர். தேர் இருப்புக்கு வந்ததை அடுத்து பறவைக் காவடிகள் வந்த வண்ணம் இருந்தன. (ஒ-16-07)

## 18 ஆவது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் கூடியது.

இவ்வேளையில் சபாநாயகர் 18ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை சபைக்குத் தெரிவித்தார்.

அப்போது சபாநாயகர் மேலும் கூறியவை வருமாறு:-

அரசியல் அமைப்பின் 121 (1)அ உறுப்புரிமைகளுக்கு அமைய 18ஆவது திருத்தச் சட்டத்தை ஜனாதிபதி உயர் நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு சமர்ப்பித்தார்.

இதனைப் பரிசீலனை செய்த உயர் நீதிமன்றம் 18ஆவது திருத்தம் அரசமைப்பின் 82 (1) ஏற்பாடுகளுக்கு அமைவாக உள்ளது. இதன் அடிப்படையில் 85 (5) ஏற்பாடுகளின்படி நாடாளுமன்றத் தில் விசேட பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்ற இட முண்டு என்பதால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தவேண்டிய அவசியம் இல்லை எனச் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது என்று சபாநாயகர் நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார். (ஒ-சி)

## வாக்கெடுப்பின்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லேயே ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இரவு ஏழு மணிவரை அமர்வுகள் இடம்பெற்று அதன் பின்னரே வாக்கெடுப்பு நடத்தப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இதனால் எதிர்த்தரப்பில் ஓரிருவர் மட்டுமே இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)


**ENGLISH**

*SPOKEN AND GRAMMAR* BY: A.BRITTO

புதிய பிரிவு ஆரம்பம்

10.09.2010 வெள்ளி மு.ப. 10.30

புதன், வெள்ளி மு.ப.10.30

இடம்- JAFFNA COLLEGE

பட்டதாரிப்பிரிவு

(யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக)

**2011-A/L DAY CLASS**
**NEW SCIENCE HALL, JAFFNA**

Mon., Tue., Wed., Thur., Fri.

இரசாயனவியல் - க. சிவத்திரன்
ந. மகேஸ்வரன்

பௌதிகவியல் - இ. குகன்
சொ. சோதிலிங்கம்

உயிரியல் - த. கெங்காதரன்

\+

பிரபல ஆசிரியர்

இணைந்த கணிதம் - சோ. செந்தில்ராஜ்

\+

ப. செந்தில்நாதன்

மேற்படி 4 பாடங்களுக்குமான Theory வகுப்புகளும் ஆரம்பமாக உள்ளன.

ஆரம்பம் :- நாளை 09.09.2010 காலை 7 மணி (வி/570746)

**THE COLLEGE OF CHEMISTRY**

32, பழம் றோட், கந்தர்மடம்.

2011 A/L DAY CLASSES

ஆரம்பம் 09.09.2010 வியாழன் 3.00 – 4.30

CHEMISTRY
Sat, Sun: 7.30 am – 9.30
Tue, Thu: 3.00 pm – 4.30

PHYSICS
Time
Mon,Tue,wed,thu -4.30 -6.00

DIAS N.KAPILAN

**இன்று மாலை மெகா மெஜிக்**

இந்தியாவில் இருந்து உலகப் புகழ்பெற்ற மாயஜால நிகழ்ச்சி

தினமும் மூன்று காட்சிகள்

இடம்: நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

ரிக்கற் மண்டபவாயிலில்..

100/= 200/=

T.P: 077 8060 225

**A/L 2010 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான கணனிக்கற்கைநெறிகள் மானிப்பாயில் ஆரம்பம் !!**

- Advanced Diploma in ICT (ADICT)
- Diploma in Desktop Publishing (DTP)
- Diploma in Accounting Packages
- Diploma in Software Engineering
- Diploma in Computer Hardware
- Diploma in Mobile Phone Repairing
- Diploma in Spoken & Practical English
- Diploma in Website Development
- Diploma in Internet & e - Mail
- Diploma in Ethical Hacking IT Security

அனுமதிப்படிவங்களை எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம். அனைத்து பிரிவுகளும் ஆரம்பம் - 12/09/2010

மானிப்பாயில் மிகக்குறைந்த கட்டணத்தில் சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழ்களை வழங்கும் நிறுவனம் என்றால் அது UNI மட்டுமே.

மேலதிக விபரங்களுக்கு - **UNI**

ICT EDUCATION TRAINERS

Jaffna Road, Manipay. T.P - 021 7429325

(மானிப்பாய் பிரதேச சபைக்கு முன்பாக)

**வேலையாள் தேவை**

'சந்திரன் வெஸ்டிங் வேக்ஸ்' நிறுவனத்துக்கு வேலையாள்கள் தேவை. தங்கி நின்று வேலை செய்யக் கூடியவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:

மந்திகை அம்மன் கோயிலடி, மந்திகை,

0776617022

**தேவை**

பூபதி கேக் பொதி செய்வதற்கு, பொதி செய்வதில் அனுபவமுள்ளவர்கள் (பெண்கள்) தேவை.

தொடர்பு: 0777427777

பூபதி கேக்,

யாழ். - மானிப்பாய் வீதி,

ஆனைக்கோட்டை

**NEW BATCHES START**

இலங்கை அரசினாலும், சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

06 - 09 -2010 (Monday)
8.30 - 11.30 & 12.30 - 3.30

11 - 09 -2010 (Saturday)
8.30 - 11.30 & 12.30 - 3.30

Diploma in Information Technology with e-commerce

Diploma in Software Engineering

Diploma in Web Engineering

Diploma in Business Management

*Special Discount for first* 50 Students for our 1st year Anniversary

ESOFT NO. 114 & 267, Navalar Road, Jaffna. 021 222 4142, 021 7501120/21 www.esoft.lk

No.153, Jaffna Road, Nelliyady, Karaveddy. T.P: 021 226 4940 | Periya Arasady, Chavakachcheri. 021 227 0333

**PHYSICS K.Kajan**

A/L 2011 HEAT

ஆரம்பம்:- 09.09.2010 (Thur. 6.15 a.m)
(Tue., Thur. 6.15 - 7.15)

A/L DAY CLASS

ஆரம்பம்:- 10.09.2010 (Fri. 4.30 p.m)
(Mon - Fri. - 4.30 - 6.00 p.m.

NEC ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**VCM Institute**

மனோகராச் சந்திக்கு அருகில்

K.K.S. வீதி யாழ்ப்பாணம்.

இணைந்த கணிதம்

துரித மீட்டல்

A/L 2010 Repeat

ஆரம்பம்:10.09.2010

வெள்ளி 11.30

B.ரவீந்திரன்B.Sc.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.etisalat.lk
0722 123 123

# யாழ்ப்பாணத்தில் வாங்கும் சிம்களுக்கு ஆகக்குறைந்த IDD கட்டணங்கள்




குறைக்கப்பட்ட கட்டணங்களை அனுபவிக்க
IDD இலக்கத்திற்கு முன்
100 ஐ டயல் செய்து அழைக்கவும்

இன்றே சிம்மொன்றை வாங்கிக்கொள்ளுங்கள்!

பிரதான விற்பனை முகவர்:
ஆர் அன்ட் ஆர் டெலிகொம் யாழ்ப்பாணம் (பிரைவேட்) லிமிட்டட்
127, ம.P.C.S. கட்டிடம், கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

etisalat
உங்களை பிரதிபலிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சரியான பங்காளிக்கு வெற்றி வாய்ப்பு வழங்கும்

**லிஸ்வின் இன்வெஸ்ற்மன்ட் லிமிட்டெட்**

**இப்பொழுது....**

யாழ்.மண்ணில் வர்த்தகத்தை விரிவுபடுத்தவும் மேம்படுத்தவும் கைகொடுத்து உதவுவதற்காக

**நாளை (09.09.2010) வியாழக்கிழமை மு.ப.9.15 மணிக்கு**

**56/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்**

எனும் முகவரியில் கோலாகலமாகத்
திறந்து வைக்கின்றோம் என்பதனை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.



**பிரதான வர்த்தகப் பணிகளாவன**

★குத்தகை (Leasing)
★வாடகைக் கொள்வனவு,
★கடன்வசதி
★விலைப்பட்டியலிடுதல்
★'தங்கம்' அடகுச் சேவை

**Lisvin Investments Limited**

*The Right Partner for Success*

தலைமை அலுவலகம்:
734 B, New Parliament Road, Pelawatte, Battaramulla.
Tel: 0115513551, 0112785050, 0117787878,
Fax: 0115520451. E-mail: lisvin@lisvin.com
Web: www.lisvin.com

பினான்ஸ் லீசிங் சட்ட இல. 56/2000 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்யப்பட்டு உரிமம் பெற்ற சிறப்புக்குரிய லீசிங் கம்பனி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org